தமிழரசு

Tamilarasu

(Monthly)

ஜூலை 2024 (July 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 55
இதழ் (Issue) : 1

பள்ளிக்கல்வித் துறை

ஐம்பெரும் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில்
43 மாணவ, மாணவியர்கள் தமிழ் பாடத்தில்
நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றதற்காக
வாழ்த்தி பாராட்டு!

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வினா – விடைத்தாள்

இம்மாத இதழில்....

வேளாண் உழவர் நலத்துறை

முதலமைச்சரின்

மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம்

துவக்கவிழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீட்டில் உர விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் முதலமைச்சரின் **மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம்** திட்டத்தை தொடங்கி வைத்தார் – 12.06.2024

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
ஆனி - ஆடி
ஜூலை 2024

மலர் : 55 விலை ரூ.30 இதழ் : 01

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. (குறள்- 234)

இனிவரும் புதிய உலகம்கூட இன்றைய உலகில் தன்னலம் துறந்து புகழ் ஈட்டிய பெருமக்களை விடுத்து, அறிவாற்றல் உடையவரை மட்டும் போற்றிக் கொண்டிராது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ எங்களது இலக்கு மிகப்பெரியது, எங்களது கொள்கை மிக மிகப் பெரியது, எங்களது பயணமும் மிக மிக நீண்டது....4
★ ரூ. 455.32 கோடி மதிப்பீட்டில் அரசுப் பள்ளிகளில் 22, 931 திறன்மிகு வகுப்பறைகள்....10
★ தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத்தொகை உயர்வு....17
★ சமூக விரோத சக்திகளிடம் இருந்து மக்களைக் காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பேன்....26
★ ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத்திட்டம்"....31
★ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் விலக்குச் சட்டமுன் வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளிக்க வலியுறுத்தும் தீர்மானம்....33
★ சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திடக்கோரி அரசினர் தனித்தீர்மானம்....38
★ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் திருச்சியில் உலகத் தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம்....41
★ ரூ.206 கோடி மதிப்பீட்டில் "முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டம்"....48
★ வெள்ளை வெய்யில் - சிறுகதை....66
★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வினா-விடைத்தாள்....76

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 14.06.2024 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 43 மாணவ, மாணவியர்கள் தமிழ்ப்பாடத்தை ஆர்வமுடன் பயின்று நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி தலா ரூ.10,000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

எங்களது

இலக்கு மிகப் பெரியது...
கொள்கை மிக மிகப் பெரியது...
பயணமும் மிக மிக நீண்டது...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகள் தொடர்பான
மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு அளித்த பதிலுரை - 29.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியைப் பெற்ற பெருமிதத்துடன் இந்தப் பேரவைக்கு நாங்கள் வந்துள்ளோம். நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவில் நூற்றுக்கு நூறு வெற்றியைப் பெற்று புகழ் மாலையைச் சூட்ட வேண்டும் என்று நான் உறுதி எடுத்துப் பயணம் தொடங்கினேன். எடுத்த உறுதியில் வென்று நூற்றாண்டு நாயகருக்கு புகழ்மாலை சூட்டிய பெருமையோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

நடைபெற்றது நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், எதிர்க்கட்சிகள் என்னைக் குறி வைத்தும், இந்தத் திராவிட மாடல் அரசை விமர்சித்தும்தான் தேர்தல் களத்தில் அதிகம் பேசினார்கள். திராவிட மாடல் ஆட்சியின் செல்வாக்கைக் குறைத்துக்காட்ட அவர்கள் செய்த உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களை மக்கள் முறியடித்து, "செய்கூலி சேதாரம் இல்லாமல்" முழுமையான வெற்றியை வழங்கினார்கள். ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையையே இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலம் முதல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வந்துள்ளேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்ததன் அடையாளம்தான் இந்த 100 விழுக்காடு வெற்றி.

சட்டமன்றத் தேர்தலில், 'வாக்களித்த மக்கள்-வாக்களிக்காத மக்கள்' என்ற பாகுபாடின்றி, அனைவருக்கும் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் ஏராளமான நன்மைகளைச் செய்துள்ளோம். அதற்கான அங்கீகாரத்தை வாக்குகள் மூலமாக

மக்கள் நமக்கு அளித்துள்ளார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தமிழ்நாடு சட்டமன்றத்தில் நின்று, வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் இரண்டாண்டு காலமும் இதே போன்ற ஈடு இணையற்ற திட்டங்களைத் தீட்டித் தந்து, 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றியை நாங்கள் பெறுவோம், இதனை மமதையோடு நான் சொல்லவில்லை; மனச்சாட்சிப்படி செயல்படும் இந்த ஸ்டாலின் மீதும் திராவிட மாடல் அரசின் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில் துணிச்சலோடு சொல்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக ஆய்வு செய்தால், திமுக கூட்டணி 221 தொகுதிகளைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. மக்கள் மனதில் யார் இருக்கிறார்கள்? யாரை மக்கள் அடியோடு புறக்கணித்து உள்ளார்கள்? என்பதையெல்லாம் இதன் மூலம் உணர முடியும். அதனால்தான், மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள், நமது முகத்தை நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல், தினந்தோறும் இந்த அவைக்கு வந்து, அவையின் மாண்புக்கும் குந்தகம் விளைவித்துச் சென்றுவிட்டார்கள்.

இந்தத் தேர்தல் தோல்வியை மறைக்க அவர்கள் போட்ட சதித்திட்டம்தான், நடவடிக்கை எடுக்கப்பட்ட கள்ளக்குறிச்சி விவகாரத்தைத் தொடர்ந்து கிளப்பியது. கடந்த 19ஆம் தேதி இந்தச் சம்பவத்தை நான் கேள்விப்பட்டதும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்க உத்தரவிட்டேன். அது குறித்து இதே அவையில் 20ஆம் தேதி முழுமையான அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளேன். கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கான உண்மையான காரணத்தை அறிய –

- ❖ உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் கோகுல்தாஸ் அவர்கள் தலைமையில் ஆணையம் அமைத்தேன்.
- ❖ சி.பி.சி.ஐ.டி. விசாரிக்க உத்தரவிட்டேன்.
- ❖ அமைச்சர்கள், உள்துறைச் செயலாளர், டி.ஜி.பி. ஆகியோரை உடனடியாகச் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தேன்.
- ❖ குற்றவாளிகளில் 20-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.
- ❖ கள்ளச்சாராயம், விஷச்சாராயம் ஒழிப்பு, குற்றவாளிகள் கைது நடவடிக்கைகளும் தீவிரமாகத் தொடர்கின்றன.
- ❖ இறந்தோர், பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி, வாழ்க்கைப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- ❖ சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது பணியிடை நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளை 24 மணி நேரத்தில் எடுத்துள்ளோம். இதன் பிறகும் நடவடிக்கைகள் சரியில்லை என்று சொல்வது, அவர்கள் நடத்தும் திசைதிருப்பல் நாடகம்.

எதை மறைத்தோம் என்று சி.பி.ஐ. விசாரணை கேட்கிறார்கள்? "சாத்தான்குளம் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டதற்கே சி.பி.ஐ. விசாரணை கேட்டீர்களே" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேட்டி அளித்திருக்கிறார். மனித உயிர்கள் இறந்து போனால், இரண்டு பேரா, இருபது பேரா என்று பார்ப்பது இல்லை. ஒரே ஒருவர் இறந்தாலும் அது மாபெரும் இழப்புதான். சாத்தான்குளம் சம்பவத்தை அன்றைய அ.தி.மு.க. அரசு முழுக்க முழுக்க மறைக்க, திரிக்க நினைத்தது. அதனால் அப்போது சி.பி.ஐ. விசாரணை கேட்டோம். ஆனால் இன்றைக்கு இந்த அரசு எதையும் மறைக்கவில்லை. குறுகிய காலத்திற்குள், குற்றவாளிகளைக் கைது செய்து, ஒருவர்கூட தப்ப முடியாது என்ற நிலையை உருவாக்கி இருக்கிறோம்.

விஷச்சாராய விற்பனை என்பது ஒரு சமூகக் குற்றம். விலை மதிப்பில்லாத மனித உயிர்களைப் பலி வாங்குகிற இதை முற்றிலுமாக ஒழிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி சம்பவத்துக்குப் பிறகு மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை எஸ்.பி.க்கள் ஆய்வுக் கூட்டத்தில் பேசிய நான் இது தொடர்பாகக் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளேன். இனிமேல் எங்காவது கள்ளச்சாராய உயிர் பலி நடக்குமானால், அதற்கு அந்த மாவட்ட காவல்துறை அதிகாரியும், எல்லைக்குட்பட்ட காவல் நிலைய அதிகாரியும்தான் பொறுப்பேற்க

வேண்டும் என்பதை மிகவும் கண்டிப்புடன் சொல்லியிருக்கிறேன்.

அதைப்போலவே, போதைப் பொருள் நடமாட்டம், விற்பனையை முற்றிலுமாகத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். வெளிமாநிலங்களில் இருந்து கடத்தி வரப்படும் கஞ்சாவைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்குற்றங்களில் கைது செய்யப்படுபவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக, குற்றவாளிகளின் ரூ.18.05 கோடி மதிப்பிலான 46 சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

கள்ளச்சாராயத்தைப் போலவே போதை மருந்து ஒழிப்பிலும் காவல் துறை அதிகாரிகள் உறுதியாக இருக்க வேண்டுமென்று தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறேன். மது, போதைப் பழக்கங்களுக்கு எதிராகக் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை அரசு ஒரு பக்கம் எடுத்தாலும் இது தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் அதிகம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது. போதை மருந்தின் பாதிப்புகளை உணர்த்துதல், குடிநோயாளிகளை மீட்பது ஆகியவற்றை ஒரு இயக்கமாகவே நடத்தி வருகிறது. அந்த இயக்கத்தைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சிப் பாகுபாடின்றி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கிய வழக்கான கொடநாடு வழக்குக் குறித்து இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை இந்த அவைக்குத் தெரிவிப்பதை எனது கடமையாகக் கருதுகிறேன். கொடநாடு வழக்கில், இதுவரை 268 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, எதிரிகள் பயன்படுத்திய 8 செல்போன்கள், 4 சிம் கார்டுகள் கோவை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து 8 ஆயிரம் பக்கம் கொண்ட ஆய்வறிக்கை பெறப்பட்டுள்ளது. சம்பவம் நடந்தபோது, எதிரிகள் சிலருக்கு வெளிநாட்டு போன் அழைப்புகள் வந்துள்ளன. எனவே, அதனை இண்டர்போல் உதவியுடன் விசாரிக்க வேண்டும். மேலும், சிலருக்கு இதில் தொடர்பு இருக்கிறதா? என்ற கோணத்திலும் விசாரித்து வருகிறோம்.

சட்டம்-ஒழுங்கைக் காப்பதில் தமிழ்நாடு அரசு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. அனைத்து விழாக்களையும் அமைதியான முறையில் நடத்திக்காட்டி இருக்கிறோம். 18 ஆண்டுகளாக நின்று போயிருந்த சிவகங்கைக் கண்டதேவி அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்டத்தை எந்தப் பிரச்சினையும் இன்றி, சுமுகமாக நடத்திக் காட்டியிருக்கிறோம். அதற்காக, அந்தப் பகுதி மக்கள் என்னை நேரில் சந்தித்து நன்றி கூறினார்கள்.

- 40 இலட்சம் பேர் திரண்ட திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா,
- 2 இலட்சம் பேர் பங்கெடுத்த மதுரை சித்திரைத் திருவிழா,
- 8 இலட்சம் பேர் கூடிய திருச்செந்தூர் சூரசம்ஹாரம்,
- 5 இலட்சம் பேர் கூடிய பழனி தைப்பூசத் திருவிழா,
- 12 இலட்சம் பேர் பங்கேற்ற குலசேகரப்பட்டினம் தசரா,
- 3 இலட்சம் பேர் பங்கேற்ற வேளாங்கண்ணி தேவாலயக் கொடியேற்றத் திருவிழா,
- 20 ஆயிரம் பேர் பங்கேற்ற நாகூர் சந்தனக்கூடு திருவிழா உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் விழாக்கள் அனைத்தையும் அமைதியாக நடத்திக் காட்டியிருக்கிறோம்.

இன்றைக்கு தமிழ்நாடு வளர்ச்சி மிகு மாநிலமாக இருக்கிறது என்றால் அமைதி மிகு மாநிலமாக அது இருப்பதால்தான். வளர்ச்சி மிகு மாநிலமாக இருக்கிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

காவல்துறையில் கடந்த மூன்றாண்டு காலத்தில் மொத்தம் 190 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதில் 179 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மற்ற அறிவிப்புகளும் விரைவில் அரசாணையாக ஆகும் என்று உறுதி அளிக்கிறேன்.

கடந்த ஆண்டு மட்டும் காவல் துறையில் பல்வேறு சீர்திருத்த முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன.

- மாணவர்களைப் பண்படுத்தும் “சிற்பி திட்டம்” மூலமாக மாணவர்களுக்கு ஒழுக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ சிறு குற்றம் செய்யும் குற்றவாளிகளைத் திருத்தி அவர்களது எதிர்காலத்தைச் சிறப்பானதாக மாற்றுவதற்கு "பறவை திட்டம்" தீட்டப்பட்டது.

❖ பதிவேடு குற்றவாளிகள் குறித்த தகவல்களை ஒருங்கிணைக்க "பருந்து திட்டம்" செயல்பாட்டில் உள்ளது.

❖ காவலர்களது நன்மைக்காக "ஸ்மார்ட் காவலர்" செயலி உருவாக்கப்பட்டது.

❖ விடுப்புகளை முறைப்படுத்த "விண்ணப்ப செயலி" அறிமுகம் செய்யப்பட்டது.

❖ காவலர்களின் மனஅழுத்தத்தைக் குறைக்கும் பயிற்சியாக "மகிழ்ச்சி" என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது.

❖ மகளிர் காவலர்களுக்காக "ஆனந்தம் திட்டம்" அமலில் உள்ளது.

❖ வாகனத் திருட்டைக் கண்காணிக்க "ஐ.வி.எம்.எஸ். திட்டம்" நடைமுறைக்கு வந்துள்ளது.

பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும், புகார்களை விரைந்து விசாரிக்கவும், நீதிமன்ற வழக்குகளை விரைந்து முடிக்கவும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குற்றங்களைக் குறைக்கும் துறையாக மட்டுமல்லாமல், குற்றங்களைத் தடுக்கும் துறையாகச் செயல்பட வேண்டுமென்று காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில், ஆலோசனைக் கூட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது அல்ல; குற்ற எண்ணத்தைக் குறைப்பது காவல் துறையின் பணியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் கட்டளையிட்ட வகையில் குற்றச்சூழல் கட்டுக்குள் உள்ளது. வருங்காலங்களில் குற்றங்களைத் தடுக்க மேலும் நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

தமிழ்நாடு இன்று இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உயர்ந்து வருகிறது. தொழில் வளர்ச்சியில், கல்வி வளர்ச்சியில், உள்கட்டமைப்பில், மனித வளர்ச்சிக் குறியீட்டில் என எந்த வகையை எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாடு உயர்ந்து வருகிறது. அதன் தனித்தன்மையைத் தனிச்சிறப்பாக வளர்த்து வருகிறோம். இந்த வளர்ச்சி என்பது என்னால் மட்டும் ஆனதல்ல. என்னை முதலமைச்சராக ஏற்றி வைத்து, ஒவ்வொரு துறையையும் தங்களது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால் வளர்த்து வரும் எனது அருமை அமைச்சரவை சகாக்களால்தான் இந்த வெற்றியையும் உயர்வையும் பெற்று வருகிறோம் என்பதை எப்போதும் மறக்காமல் சொல்லி வருகிறேன். அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டணிக்கட்சியாக இருந்தாலும் பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டி, சுட்டிக்காட்ட வேண்டிய நேரத்தில் கனிவோடு சுட்டிக்காட்டும் கூட்டணிக் கட்சியின் உறுப்பினர்களது வாதங்களும் பாராட்டுகளும் ஆலோசனைகளும் எங்களுக்கு எப்போதும் ஊக்கமளித்து வந்துள்ளது.

நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகளைப் பொறுத்தவரை, திரு.பரந்தாமன் அவர்கள் சென்னை மாநகரில் காவலர் குடியிருப்புகளில் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள கோரிக்கை விடுத்தார். ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையில் சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகளுக்காக வழங்கப்பட்டு வரும் ரூ.40 கோடி, இந்த ஆண்டு முதல் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டு அப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்களும், திரு. சின்னதுரை அவர்களும் கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் காவல் துறையால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதால் கடவுச் சீட்டு, தடையில்லாச் சான்று போன்றவைகளைப் பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது என்று தெரிவித்திருந்தார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் இது போன்ற பல ஆயிரம் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. மீதமிருக்கும் வழக்குகள் குறித்தும் உரிய தரவுகள் பெற்றுத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்குமாறு சட்டம் ஒழுங்குக் கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களை அறிவுறுத்தியிருக்கிறேன்.

அருமைச் சகோதரர் திரு. சிந்தனைச் செல்வன் அவர்கள் பேசும்போது செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பகுதியில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரக் கோரினார்.

அக்கோரிக்கையை ஏற்று, கோவளத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும். இதன்மூலம் திருப்போரூர் பகுதியும், கடலோரப் பகுதியான கோவளமும் பயன்பெறும்.

பா.ம.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஜி.கே.மணி அவர்கள் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பணி செய்த காவலர்களுக்குத் தேர்தல் பணிப்படி வழங்க கோரிக்கை விடுத்தார். அக்கோரிக்கையின் அடிப்படையில் காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களிடம் கருத்துரு பெற்று விரைவில் தேர்தல் பணிப்படி வழங்கப்படும்.

முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க., இந்தக் கூட்டத்தொடரில் எடுத்த தவறான நிலைப்பாடு எனக்கு வருத்தம் அளிப்பதாகவே இருக்கிறது. ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்குப் பதில் சொல்வதற்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம். அந்தப் பதிலைக் கேட்பதற்குத்தான் அ.தி.மு.க. தயாராக இல்லை. ஒருபுறம் தேர்தல் தோல்வி; மறுபுறம் சொந்தக் கட்சியில் நெருக்கடி என இரண்டுக்கும் இடையே சிக்கிக் கொண்டு, அதில் இருந்து தப்பிப்பதற்காக அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தியது அ.தி.மு.க. நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து எதிர்க்கட்சியினர் இந்த அவையில் எவ்வளவு நேரம் பேசியுள்ளார்கள் என்பதையும், அ.தி.மு.க. ஆட்சியில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது எங்களுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு ஆட்சிகளின் ஜனநாயகப் பண்பும் தெரியும், புரியும்!

ஆசிரியருக்கே உரிய கண்டிப்புடனும், தெளிந்த அறிவுக்கூர்மையுடனும், அதே நேரத்தில் சுவைபடவும் இந்த அவையை நடத்திச் செல்லும் தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் 100 அறிவிப்புகள் உள்ளன. அதில் சிலவற்றை மட்டும் இப்போது அறிவிக்க விரும்புகிறேன். மீதமுள்ள அறிவிப்புகளை நான் படித்ததாகக் கருதி அவைக்குறிப்பில் சேர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

❖ கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையம், ஏற்காடு ஆகிய இடங்களில் புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள், கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை புறக்காவல் நிலையம், படப்பை, ஆதமங்கலம்புதூர், திருப்பரங்குன்றம் கோவில் ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

❖ மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இன்று காலை நான் அவைக்கு வந்தவுடன், நெடுநாள் கோரிக்கை என்று தெரிவித்து, என்னிடம் ஒரு கோரிக்கையைக் கொடுத்தார். அதாவது, பேரணாம்பட்டில் இருக்கக்கூடிய காவல் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றிட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

❖ கொளத்தூர், கேளம்பாக்கம், செங்குன்றம் உள்ளிட்ட இடங்களில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்படும். தாம்பரம் காவல் ஆணையரகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

❖ கோவை - பொள்ளாச்சி, திருப்பூர் - நல்லூர் ஆகிய இடங்களில் 229 காவல் குடியிருப்புகள் கட்டப்படும்.

❖ தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் ஆளிநர்கள் பணியின்போது உயிரிழப்போ, உடலுறுப்பு இழப்போ, காயமோ ஏற்பட்டால் வழங்கப்படும் கருணைத் தொகை உயர்த்தப்படும். சிறப்பு இலக்குப் படையில் பணியாற்றும் ஆளிநர்களுக்கும் அத்தொகை உயர்த்தி வழங்கப்படும்.

❖ ஊர்க்காவல் படையில் பணியாற்றும் ஆளிநர்கள் உயிரிழக்கும்போது அவர்கள் குடும்பத்திற்குத் தமிழ்நாடு ஊர்க்காவல் படை நலன், கருணைக் கொடை நிதியிலிருந்து வழங்கப்படும் இழப்பீடு ரூ.15,000லிருந்து ரூ.1 இலட்சமாகவும், காயமுற்றவர்களுக்கான நிதி ரூ.10,000லிருந்து ரூ.50,000 ஆகவும் உயர்த்தப்படும்.

❖ கோவை மாநகராட்சியை விபத்தில்லாத மாநகரமாக மாற்ற ரூ.5 கோடி மதிப்பில் செயல்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

❖ தஞ்சாவூர் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் ரூ.5.21 கோடிச் செலவில் புதிய ஆயப்பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 1,500 தற்காப்பு உடைகளும், மீட்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்குச்சிறியஉபகரணங்களுடன் கூடிய 3,000 மீட்பு உடைகளும் ரூ.4.50 கோடிச் செலவில் வழங்கப்படும்.

❖ ஏரல், கருமத்தம்பட்டி, மடத்துக்குளம், கோவளம், படப்பை, திருநெல்வேலி மாநகரம், புதுவயல் உள்ளிட்ட 7 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையங்கள் நிறுவப்படும்.

❖ சமயபுரம், மேடவாக்கம், பெரம்பலூர், தியாகதுருகம், நீடாமங்கலம், கொளத்தூர் ஆகிய 6 தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

அது மட்டுமல்ல; அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அரசு ஊழியர்களைச் சார்ந்துள்ள தாய், தந்தையரையும் பயனாளிகளாகச் சேர்த்திட வேண்டுமென்று காவல் துறையினர் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்களிடம் இருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அவற்றை உரிய முறையில் ஆராய்ந்து, அரசு அலுவலர்களைச் சார்ந்து வாழும் அவர்களது பெற்றோருக்கும் மருத்துவக் காப்பீட்டின் பலன் சென்றடையும் வகையில் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்களின் விருப்பத்தைப் பெற்று, தற்போது நடைமுறையில் உள்ள புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மறுசீரமைக்கப்படும். மேலும், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் பயன்களைப் பெறும் அரசு அலுவலர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களைக் களைந்திட தலைமைச் செயலாளர் தலைமையில் விரைவில் ஆய்வுக் கூட்டம் நடத்திடவும், தேவைப்படும் நெறிமுறைகளை வழங்கிடவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

எங்களது இலக்கு மிகப்பெரியது; எங்களது கொள்கை மிகமிகப் பெரியது; எனவே, எங்களது பயணமும் மிகமிக நீண்டது. நூற்றாண்டுக் கால திராவிட இயக்கத்தின் கனவுகளை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் எங்களுக்கு உள்ளது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சிந்தனைகளைப் பேரறிஞர் அண்ணாவின் பாணியில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் செயல்வேகத்தோடு கொண்டு செலுத்தி வருகிறேன்.

எங்களது இலக்கில் நாங்கள் வெல்வோம்! வென்று கொண்டே இருப்போம்! வென்று கொண்டே இருப்போம்! என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

ரூ.455.32 கோடி மதிப்பீட்டில்

அரசுப் பள்ளிகளில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 14.06.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.06.2024 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், அரசுப் பள்ளிகளில் ரூ.455.32 கோடி மதிப்பீட்டில் 22,931 திறன்மிகு வகுப்பறைகளைத் தொடங்கி வைத்து, 10, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்கள், நூறு சதவிகிதம் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், 67ஆவது தேசியப் பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவ, மாணவியர்களைப் பாராட்டிச் சான்றிதழ்களை வழங்கி, தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்குக் கையடக்கக் கணினிகளையும் வழங்கினார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காகப் பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடிக் கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல், பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அரசுப் பள்ளிகளில் ரூ.455.32 கோடி மதிப்பீட்டில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், இடைநிற்றலின்றிக் கல்வி பெறுவதை உறுதி செய்யவும், உயர் கல்வி பயிலவும், வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு வழிகாட்டவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடித்

திட்டங்களை வகுத்துப் பள்ளிக் கல்வித்துறை வாயிலாகச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஏற்ற சூழலை வழங்குவதற்குப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு, பராமரிப்பு, தொழில்நுட்பப் பங்களிப்பு ஆகியவற்றினை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் 455.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Rooms) உருவாக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தொடங்கி வைத்தார்.

அரசு தொடக்கப் பள்ளிகளில் ஒரு வகுப்பறை, குழந்தைகள் ஆர்வமுடன் கற்கும் வண்ணம் வண்ணமிகு வகுப்பறையாக மாற்றப்பட்டு, அவ்வகுப்பறையில் திறன் பலகை (Smart Board) பொறுத்தப்பட்டு, திறன்மிகு வகுப்பறை செயல்பாட்டிற்காக இணைய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் நேரடியாக வகுப்பறையில் கற்பிக்கும் போது, சில பாடப்பகுதிகள் மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள இயலா நிலை உருவாகலாம். அச்சமயங்களில் படங்கள், காணொளி (Video) ஆகியவற்றினை இத்திறன் பலகையினைப் பயன்படுத்தி விளக்கும்போது மாணவர்களின் புரிதலை எளிமையாக்கும். மாணவர்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் இந்தக் கற்றல் வளங்களை மீளப் பயன்படுத்திக் கொள்ள இது வழிவகுக்கும். திறன் பலகையானது இணைய வசதியுடன் அமைக்கப்படுவதால் மாணவர்கள் எந்தப் பாடத்தைக் கற்கும் போதும் அதனுடன் தொடர்புடைய சமீபத்திய நிகழ்வுகளை அறிந்து கொள்ளவும் இயலும். மேலும், இத்திறன் பலகைகள் தொடுதிரையாகவும் செயல்படுவதால் மாணவர்களே இதனைத் தொட்டுத் தகவல்களைப் பெறத்தக்க வகையில் உள்ளது தனிச்சிறப்பாகும்.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ்

2024ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 8 மாணவ, மாணவியர்கள், பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 35 மாணவ, மாணவியர்கள், என மொத்தம் 43 மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்ப் பாடத்தை ஆர்வமுடன் பயின்று நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, தலா ரூ.10 ஆயிரம் ரொக்கம், பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

பத்து, பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் நூறு சதவிகிதம் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள்

தமிழ்நாடு முழுவதிலும், இந்த ஆண்டு நடைபெற்ற அரசுப் பொதுத் தேர்வுகளில் 12ஆம் வகுப்பில் 94.56 சதவிகித மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுப் புதிய சாதனை படைத்துள்ளனர்.

குறிப்பாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 386 அரசு மேல்நிலைப் பள்ளிகள் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றுள்ளன.

அதேபோல 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநிலம் முழுவதும் 91.55 சதவிகித மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுச் சாதனைப் படைத்துள்ளனர். இதில், அரசுப் பள்ளிகளில் மட்டும் 87.90 சதவிகித மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 1,342 அரசு உயர்நிலைப் பள்ளிகள் இந்த ஆண்டில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றுள்ளன.

ஆக மொத்தம் 1728 பள்ளிகள் 10, 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் இவ்வாண்டில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளன.

2023-2024ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தங்களது பள்ளி நூறு சதவிகிதம் தேர்ச்சியடைய அர்ப்பணிப்புடன் பணியாற்றிய 1,728 அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

67ஆவது தேசிய அளவிலான பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள்

கடந்த ஆண்டு குறுவட்டம், வருவாய் மாவட்டம், மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, முதலிடம் பெற்ற மாணவ, மாணவியர்கள் இந்திய அளவில் தேசியப் பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்திய தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச் சண்டை, சதுரங்கம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு 95 தங்கம், 112 வெள்ளி, 202 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

67ஆவது இந்தியப் பள்ளிகளின் விளையாட்டுக் கூட்டமைப்பு 2023-2024ஆம் கல்வியாண்டில் நடத்திய தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த 409 மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்குக் கையடக்கக் கணினிகள்

மாணவர்களின் நலனுக்காக அயராது பாடுபட்டு வரும் ஆசிரியர் சமூகத்தைச் சிறப்பிக்கும் விதமாகவும், ஆசிரியர்கள் நலனைக் காக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.03.2023 அன்று பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்தார். அந்த அறிவிப்பில் ஒன்றாக, மாறிவரும் கற்றல், கற்பித்தல் முறைகளுக்கேற்பத் தங்களைச் சிறப்பாக மெருகேற்றிக் கொள்வதற்கென அனைத்து இடைநிலை, பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கைக்கணினி (Tablet) வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, தமிழ்நாடு அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 79,723 ஆசிரியர்களுக்கு ரூ.101.48 கோடிச் செலவில் கைக்கணினிகள் (Tablets) வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்குக் கைக்கணிகள் வழங்கித் தொடங்கி வைத்தார்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்தின் மூலம் தொலைவிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் சார்ந்த இடங்கள், இயற்கை சூழல்மிக்க இடங்களுக்கு செல்லாமலேயே நேரடியாக ஒளிப்பதிவுக் கூடத்தின் மூலம் மாணவர்களின் கண்முன் கொண்டு வந்து சுவாரசியமாக அறிந்து கொள்ளும் வகையில் காணொலிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்காணொலிகள், கல்வித் தொலைக்காட்சி, Tamil Nadu Teachers Platform (TNTP), YouTube வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பள்ளிவேலை நேரத்தில் மட்டுமன்றி எந்த இடத்திலிருந்தும் எந்த நேரத்திலும் ஆசிரியர்கள் தேவைக்கேற்ப இதனை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இக்கைக்கணினிகள் (Tablets) வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், ஆசிரியர்கள் கற்பித்தல் பணியினை மேற்கொள்ளும் பொழுது இதனை ஒரு கூடுதல் வளமாகப் பயன்படுத்தி, மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்பதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பள்ளிக்கல்வித் துறையின் ஐம்பெரும் விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து, 2024ஆம் ஆண்டு 10, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 43 மாணவ, மாணவியர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பள்ளிக்கல்வித் துறை நிகழ்ச்சிகளில் பொதுவாகவே நான் ஆர்வத்துடன் கலந்து கொள்வது வழக்கம். ஆனால், என்னை விட அதிகமாகக் கலந்துகொள்ளும் ஒருவர் இருக்கிறார். இந்த மேடையில் இருக்கும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி! அதனால், இந்த முறை நான் முன்பே, ரிசர்வ் செய்துவிட்டேன்.

தேர்வு முடிவுகள் வந்ததும், நானே நம்முடைய அமைச்சர் மகேஸ் அவர்களுக்கு ஃபோன் செய்து, "தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிந்ததும், நான் கலந்துகொள்ளும் முதல் அரசு விழாவாக, இந்தப் பாராட்டு விழாதான் இருக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லியிருந்தேன். அதன்படி, இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும், அவருக்குத் துணைநின்ற அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். இந்த விழாவில் கலந்துகொள்வது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், பள்ளி மாணவர்களான உங்களைப் பார்க்கும்போது, எனக்கும் இளமை திரும்பி ஆற்றல் வந்துவிடுகிறது.

பொதுவாக, அரசியல் மேடைகளில்தான் ஐம்பெரும் விழாக்கள், முப்பெரும் விழாக்களை நடத்துவோம். ஆனால், இப்போது பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ஐம்பெரும் விழா ஏற்பாடு செய்திருக்கிறார் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

முதல் விழா, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சிப் பெற வைத்த அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டு.

இரண்டாவது விழா, பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் 100 விழுக்காடு தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டு.

மூன்றாவது, தொடக்கக் கல்வித் துறை ஆசிரியர்களுக்கு TAB வழங்குவது.

நான்காவது, அரசுப் பள்ளியில் திறன் (ஸ்மார்ட்) வகுப்பறைகள் தொடங்குவது.

ஐந்தாவது, விளையாட்டில் தேசிய அளவில் பதக்கம் வாங்கியவர்களுக்குப் பாராட்டு.

இப்படியாக இந்த ஐம்பெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு முன்பு மாணவர்களுக்காக நம்முடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களைப் பற்றி கேட்டபோது, பள்ளிக் கல்வித் துறையில் இருந்து ஒரு பெரிய பட்டியலே வந்தது. அதில் மிக முக்கியமான சில திட்டங்களின் பெயரை மட்டும் சொல்ல வேண்டும் என்றால், 16 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் "காலை உணவுத் திட்டம்", 27 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் "இல்லம் தேடிக் கல்வி", 28 இலட்சம் மாணவர்களுக்குத் திறன்பயிற்சி வழங்கி வரும் "நான் முதல்வன்", 23 இலட்சம் மாணவர்கள்

பயன்பெறும் "எண்ணும் எழுத்தும் திட்டம்", 30 இலட்சம் மாணவர்கள் பயனடையும் "வாசிப்பு இயக்கம்", "மாணவர் மனசு" என்ற பெயரில் "ஆலோசனைப் பெட்டி", 23 இலட்சம் பெற்றோர்களை உள்ளடக்கிய "பள்ளி மேலாண்மைக் குழுக்கள்", அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டுக்காக "நம்ம ஸ்கூல்-நம்ம ஊரு பள்ளி" திட்டம், "நடமாடும் அறிவியல் ஆய்வகம்", "வானவில் மன்றம்", மாணவர்களை நல்வழிப்படுத்தும் "சிற்பி" திட்டம், தகைசால் பள்ளிகள், மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழாக்கள், மாணவர்களை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் "கல்விச் சுற்றுலா திட்டம்", பள்ளி செல்லாதப் பிள்ளைகளைக் கண்டறிய "செயலி", சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குச் "சிறப்பு நிதி", பயிற்சித் தாள்களுடன் கூடிய "பயிற்சிப் புத்தகங்கள்", 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி-வினா போட்டிகள், கணித ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி, வகுப்பறை உற்றுநோக்கு செயலி, மின் ஆசிரியர் என்ற உயர்தர டிஜிட்டல் செயலி - இப்படி நிறைய இருக்கிறது.

அதிலும் மாணவிகளுக்கு மாதா மாதம் ரூ.1,000 வழங்குகிற மற்றொரு முக்கியமான திட்டம் இருக்கிறது! அதுதான் "புதுமைப்பெண் திட்டம்". எனக்கு மாணவிகளிடம் இருந்து வந்த கடிதங்களாக இருந்தாலும், இந்தத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் சந்தித்த மாணவிகளாக இருந்தாலும், பலரும் இந்தப் "புதுமைப்பெண்" திட்டத்தை மிகவும் பாராட்டிப் பேசினார்கள். மாணவிகள் தங்களின் சிறிய சிறிய தேவைகளுக்கு யாரையும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலை இனி இல்லை என்றும், இந்தத் திட்டத்தில் மாதா மாதம் கிடைக்கும் ஆயிரம் ரூபாய் தங்களின் தேவைக்கு உதவியாக இருப்பதாகவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

அந்த மகிழ்ச்சி மாணவர்கள் முகத்திலும் ஏற்பட வேண்டும் என்பதற்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற "தமிழ்ப் புதல்வன் திட்டம்" செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருந்தேன். நீங்கள் கல்லூரி சென்றவுடனே வருகின்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து அந்த ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என இந்த மேடையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் கவனிப்பில், பள்ளிக்கல்வித் துறை ஒரு பொற்காலத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று பெருமையுடன் சொல்லலாம்.

பல்வேறு நாடுகளுக்குச் சென்று, அங்கு இருக்கும் நவீன வசதிகளை நம்முடைய ஊரில், நம்முடைய பிள்ளைகளுக்காக அறிமுகப்படுத்தி செயல்படுத்தவேண்டும் என்று அமைச்சர் மிகவும் ஆர்வமாக இருக்கிறார். அதேபோல, நம்முடைய பள்ளி மாணவ, மாணவியர்களை வெளிநாடு சுற்றுலாவுக்கும் அதிகஅளவில் அழைத்துக்கொண்டு செல்கிறார். தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தும் முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கிறார்.

இப்படிப்பட்ட முன்னெடுப்புகளுக்கு அவருக்குத் துணையாக நிற்பது

ஆசிரியர்கள்தான். அந்த ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டியது அரசினுடைய கடமை! பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சிப் பெற வைத்த 1,728 அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் சாதனையை ஊக்கப்படுத்த அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட இருக்கிறது. தலைமை ஆசிரியர்களுக்கு வழங்குகிறோம் என்றால் அது அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கும் அங்கீகாரம்.

100 விழுக்காடு தேர்ச்சி என்று சொல்லி பாராட்டுவது மூலமாக அந்த இலக்கை அனைவரும் அடையவேண்டும் என்று ஊக்கப்படுத்துவதற்குதான் இந்த விழா! அந்த வகையில், தேர்வு எழுதிய எல்லா மாணவர்களுக்கும், அவர்களை வழி நடத்திய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும். இதே சாதனையை அடுத்த ஆண்டு அனைத்துப் பள்ளிகளும் செய்ய வேண்டும்.

அடுத்ததாக, தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்ற மாணவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். எந்தப் பாடத்தில் நூறு மதிப்பெண் எடுத்தாலும் பாராட்டுக்குரியதுதான். ஆனால், நம்முடைய தாய்மொழி தமிழ். அதுவும் உயர்தனிச் செம்மொழி என்பதால், அதில் 100 மதிப்பெண் பெற்றவர்கள் சிறப்பான பாராட்டுக்குரியவர்கள்.

12ஆம் வகுப்பில் 35 பேரும், 10ஆம் வகுப்பில் 8 பேரும், தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்றிருக்கின்றனர். அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது.

அடுத்ததாக, கடந்த ஆண்டு தேசியப் பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்தும் போட்டிகளில் கலந்துகொண்டு, 95 தங்கப் பதக்கங்களையும், 112 வெள்ளிப் பதக்கங்களையும், 202 வெண்கலப் பதக்கங்களையும் வென்ற மாணவர்களையும் மனதார நான் பாராட்டுகிறேன்.

ஜூன் 10 பள்ளிகள் திறந்தபோது, நான் போட்ட சமூக வலைத்தளப் பதிவில் கூட மாணவர்களின் மனநலனுடன் உடல்நலனும் முக்கியம் என்று சொல்லியிருந்தேன். அதற்கு விளையாட்டு மிகவும் முக்கியமான ஒன்று.

இந்தப் பதக்கம் பெற்றவர்கள், அடுத்து, உலக அளவிலான போட்டிகளில் பங்கேற்க வேண்டும். தம்பி உதயநிதி முன்னெடுப்பில், விளையாட்டிற்காக அதிகமான திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களில் இருந்து பல ஒலிம்பிக் சாம்பியன்கள் உருவாகவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இப்போது எல்லாமே இணையதளத்தில் இருக்கிறது. A.I. என்று சொல்லும் செயற்கை நுண்ணறிவு இப்போது பெரிய பேசும்பொருளாக ஆகியிருக்கிறது. புதிய வளர்ச்சிகளுக்கேற்ப நம்மை 'அப்டேட்' செய்துகொள்வது மிகவும் முக்கியம்.

பள்ளிக் கல்வித் துறையை நவீனப்படுத்த பேராசிரியர் அன்பழகனார் பெயரில் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அதன்படி, தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 79,723 ஆசிரியர்களுக்கு 'TAB' என்னும் கையடக்கக்

கணினி வழங்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் இதைப் பயன்படுத்தி, மாணவர்கள் விரும்பும் வகையில் கற்பித்தல் முறைகள் அமையும் என்று நம்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் 22,931 ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்பட இருக்கின்றன. வகுப்பறையைக் குழந்தைகள் மனதிற்குப் பிடித்த இடமாக வண்ணமயமாக மாற்ற, அங்குத் திறன் பலகை (ஸ்மார்ட் போர்டு) ஒன்றைப் பொருத்தப் போகிறோம். இங்கு இணையதள வசதியும் இருக்கும்.

முதற்கட்டமாக, 500 ஸ்மார்ட் வகுப்பறைகளை இன்றைக்குத் துவக்கி வைத்திருக்கிறேன். இது எல்லாமே உங்களுக்காகத்தான். என்னுடைய ஆசையெல்லாம், உலகத்தில் எந்த ஊர் மாணவர்களுக்கும், என்னுடைய தமிழ்நாட்டு மாணவர்கள் சவால் விடுகின்ற அளவிற்கு வளர்ந்து இருக்கவேண்டும். அதுதான் என் கனவு. அதற்காகதான் இந்தத் துறையில் நிறைய திட்டங்களைக் கொண்டு வருகிறோம். நிதி நெருக்கடி எத்தனை இருந்தாலும், கல்வித்துறையில் நிறைய புதுப்புதுத் திட்டங்களைத் தொடங்குகிறோம் என்றால், உங்களுக்காகத்தான். மற்ற எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். பதிலுக்கு, மாணவர்களான உங்களை நான் கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான்... படியுங்கள்.. படியுங்கள்.. படித்துக்கொண்டே இருக்க வேண்டும். எங்கும் தேங்கி நிற்காமல், முன்னோக்கி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். உங்கள் கண்முன்னால் "புல் ஸ்டாப்" தெரியக் கூடாது. 'கமா' தான் தெரியவேண்டும். கீப் ரன்னிங். கீப் வின்னிங். கீப் ஷைனிங். Make Tamil Nadu proud!

கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருட முடியாத ஒரே சொத்து. ஆனால், அதிலும் கூட, மோசடிகள் செய்வதை "நீட்" போன்ற தேர்வு முறைகளில் பார்க்கிறோம். அதனால்தான் அதை கடுமையாக எதிர்த்து வருகிறோம். "நீட்" போன்ற தேர்வுகள் மோசடியானவை என்று முதன்முதலில் கூறியது தமிழ்நாடுதான். அதை இன்றைக்கு இந்தியாவே சொல்லத் தொடங்கி இருக்கிறது. இந்த மோசடிக்கு நிச்சயம் ஒரு நாள் முடிவுகட்டுவோம். அது எங்கள் பொறுப்பு. மாணவச் செல்வங்களான நீங்கள் படிக்க சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவுமே தடையாக இருக்கக் கூடாது. அதுதான் என்னுடைய எண்ணம். அதுதான் இந்தத் திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை!

கல்வி எனும் நீரோடை தடங்கல் இல்லாமல் பாய்வதற்கு உங்களுடைய இந்த அரசு முழுமையாக ஆதரவாக நிற்கும்! அதை நீங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எந்தக் கவனச் சிதறலும் இல்லாமல் படிக்க வேண்டும். "படிக்காமலும் பெரிய ஆள் ஆகலாம்" என்று யாரோ ஒன்று இரண்டு பெயரைப் பார்த்து தவறான பாதையில் செல்லாமல், கல்விதான் உண்மையான, பெருமையான அடையாளம் என்று புரிந்துகொள்ள வேண்டும். கல்வி இருந்தால் மற்ற எல்லாம் தானாக வரும். நீங்கள் எல்லோரும் உலகை வெல்லும் ஆற்றலைப் பெற்று, பகுத்தறிவோடு செயல்பட தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களின் குடும்பத்தில் ஒருவனாக இருந்தும் வாழ்த்துகிறேன்!

உங்கள் கனவுகள் மெய்ப்படட்டும்! All the best!

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகை உயர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவு – 26.06.2024

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் காரீப் 2024-2025 நெல் கொள்முதல் பருவத்திற்கு ஆதார விலையுடன் ஊக்கத்தொகையும் சேர்த்து விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 26.06.2024 அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கடந்த 2023-2024 காரீப் கொள்முதல் பருவத்தில் 25.06.2024 வரையில் 3,175 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 3,72,310 விவசாயிகளிடமிருந்து 29,91,954 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.6,442.80 கோடி விற்பனைத் தொகையாக வழங்கப்பட்டது ஆகிய விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அதே அடிப்படையில், இந்த ஆண்டும் காரீப் கொள்முதல் 2024-2025 பருவத்தில் தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

இந்த ஆண்டு 12.06.2024 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட இயலாத சூழ்நிலையில், டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் குறுவைத் தொகுப்புத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திட உத்தரவிட்டார். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் விவசாயிகளின் நலன் கருதி காரீப் 2024-2025 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2024 முதல் மேற்கொள்ள ஒன்றிய அரசை, இவ்வரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் காரீப் 2024-2025 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2024 முதல் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

ஒன்றிய அரசு அண்மையில் காரீப் 2024-2025 பருவத்திற்குக் குறைந்தபட்ச ஆதார விலையாகச் சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,300 என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,320 என்றும் நிர்ணயித்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டில் நெல்

உற்பத்தியினைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் வாழ்வை வளப்படுத்தி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு, 2024-2025 காரீப் கொள்முதல் பருவத்திற்கு (Kharif Marketing Season) சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130ம் கூடுதல் ஊக்கத் தொகையாகத் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து வழங்கிடவும், அதன்படி விவசாயிகளிடமிருந்து சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,405 என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,450 என்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தவிட்டுள்ளார்.

இந்த புதிய குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகை 01.09.2024 முதல் நடைமுறைக்கு வரும். அத்துடன், தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, அடுத்துவரும் 2025-2026ஆம் நிதியாண்டில், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500 என்ற வீதத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் காரீப் கொள்முதல் பருவத்திற்குச் சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130ம் கூடுதல் ஊக்கத் தொகையாகத் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காகப் பல்வேறு மாவட்ட விவசாயச் சங்க நிருவாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 27.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில், 2024-2025ஆம் ஆண்டு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் காரீப் கொள்முதல் பருவத்திற்குச் சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130ம் கூடுதல் ஊக்கத் தொகையாகத் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காகப் பல்வேறு மாவட்ட விவசாய சங்க நிருவாகிகள், விவசாய பெருமக்கள் ஆகியோர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை, உழவர்களின் நலனைப் பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம், வேளாண் பெருமக்களின் வருவாயினைப் பன்மடங்காக உயர்த்திட முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், விவசாயிகளுக்கு ஒன்றரை இலட்சத்திற்கும் மேலாக இலவச விவசாய மின் இணைப்புகள், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், ரூ.206 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி வருவதற்காகவும், இந்த ஆண்டு 12.06.2024 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட இயலாத சூழ்நிலையில், டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் குறுவைத் தொகுப்புத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி வருவதற்காகவும், 2024-2025 காரீப் கொள்முதல் பருவத்திற்கு (Kharif Marketing Season) சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130ம் கூடுதல் ஊக்கத் தொகையாகத் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து வழங்கப்படும் என்றும் அறிவித்தமைக்காகவும், காவேரி டெல்டா பாசன விவசாய சங்கங்கள் கூட்டமைப்புத் தலைவர் திரு. கே.வி.இளங்கீரன், தஞ்சாவூர் – அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் திரு.கோவிந்தராஜ், மயிலாடுதுறை மாவட்ட காவேரி டெல்டா பாசனதாரர்கள் முன்னேற்றச்

சங்கத்தின் தலைவர் திரு.கோபி கணேசன், திருச்சி – தமிழக ஏரி, ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு.விஸ்வநாதன், இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின் (தமிழக விவசாயிகள் சங்கம்) மாநிலத் தலைவர் திரு. வேட்டவலம் கே. மணிகண்டன், விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத்தின் மாநிலச் செயலாளர் திரு. அக்ரி கா. பசுமை வளவன், தஞ்சாவூர் – தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் திரு. கண்ணன், காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர், உழவர் உற்பத்தியாளர் குழுத் தலைவர் திரு.பார்த்திபன், வாலாஜாபாத் வட்டாரம் உழவர் உற்பத்தியாளர் குழுத்தலைவர் திரு. ஆறுமுகம், காஞ்சிபுரம் மாவட்டம் – உழவர் நண்பர் திரு.சந்திரமோகன், இந்திய விவசாயிகள் சங்கத்தின் திரு.தனபதி, சேலம் – ஐக்கிய விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. சங்கரய்யா, பொருளாளர் திரு. சரவணன், இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலச் செயலாளர் திரு.வாரணாசி இராஜேந்திரன், காவேரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. பாலு, காஞ்சிபுரம் மாவட்ட விவசாய சங்க அமைப்பாளர் திரு. ஞானப்பிரகாசம், செங்கல்பட்டு மாவட்டம் – பாலாறு படுகை விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. தனசேகரன், திரு. ஜீவகுமார், திரு. இராமுலு, திரு.வெங்கடாத்திரி உள்ளிட்ட விவசாயச் சங்கத்தினர் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 119ஆவது பிறந்தநாள்

படமும்/செய்தியும்

சென்னை, தியாகராய நகரில், 26.06.2024 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 119ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. த. வேலு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சமூகக் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டுக் குற்றவாளிகளுக்கு முறையான தண்டனை வாங்கித் தரப்படுகிறது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், திருநெல்வேலி மாவட்டம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது குறித்த கவன ஈர்ப்புக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 25.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் சம்பவத்தில், திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் 13.06.2024 அன்று இருவேறு சமூகத்தைச் சார்ந்த மணமக்களுக்குச் சாதி மறுப்புத் திருமணம் செய்து வைக்கப்பட்டு, அதுதொடர்பான புகைப்படம் முகநூல் பக்கத்திலே பதிவிடப்பட்டதாகத் தெரிகிறது.

இதனையடுத்து, மணப்பெண்ணின் குடும்பத்தினர் கடந்த 14.06.2024 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குச் சென்று, இதுகுறித்துக் கேட்டு, தகராறில் ஈடுபட்டு, அங்கிருந்த பொருட்களைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக, அக்கட்சியின் சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், பெருமாள்புரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 14 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 7 பெண்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்; 7 ஆண்கள் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். விசாரணையில் இச்சம்பவத்தில் சாதிய வன்கொடுமை நிகழ்ந்திருப்பதற்கான முகாந்திரம் உள்ளதாகத் தெரிய வந்ததையடுத்து, இவ்வழக்கில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளும் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூகநீதிக் கொள்கையைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், பெண் கல்வி, சமஉரிமை, சாதி மறுப்புத் திருமணம் ஆகியவற்றைத் தனது ஆரம்பகாலம் தொட்டே ஆதரித்து வரக்கூடிய இயக்கமாகும். இதனை இந்த அவையில் உள்ள அனைவரும் அறிவார்கள்.

நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுபோன்ற பிற்போக்குத்தனமான சமூகக் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, இதுபோன்ற இனங்களில் பதிவுசெய்யப்படும் வழக்குகளில் குற்றவாளிகளுக்கு முறையான தண்டனை வாங்கித் தரப்படுகிறது.

உறுப்பினர்கள் குறிப்பிட்டபடி இதற்கென ஒரு சிறப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதை விட, தற்போது இதுபோன்ற குற்றங்களுக்கு நடைமுறையிலுள்ள சட்டப்பிரிவுகள், குறிப்பாக வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில், தீவிரமான, வேகமான நடவடிக்கை எடுத்துக் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது சரியானது என்று இந்த அரசு கருதுகிறது. அந்த வகையில் சமீபத்தில் பல வழக்குகளில், அதிலும் கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற குற்றங்களில்கூட விசாரணை துரிதப்படுத்தப்பட்டு, குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வாங்கித் தரப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் காவல் சரகம், புதுக்கூரைப்பேட்டையில் 08.07.2003 அன்று நடைபெற்ற இரட்டைக்கொலை வழக்கில் கடந்த 29.02.2024 அன்று குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதேபோல, 2015ஆம் ஆண்டில், நாமக்கல் மாவட்டத்தில் கோகுல்ராஜ் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கு முறையாகக் கண்காணிக்கப்பட்டு, வேகப்படுத்தப்பட்டு, இம்மாதம் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில், மதுரை மாவட்ட வன்கொடுமைச் சிறப்பு நீதிமன்றம் 08.03.2022 அன்று வழங்கிய தீர்ப்பு, மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையால் உறுதிசெய்யப்பட்டது.

அதேபோல, கடலூர் மாவட்டத்தில் ஆதிவராக நத்தத்தைச் சேர்ந்த சீதா என்பவர் 15.06.2014 அன்று கொலை செய்யப்பட்டதையடுத்து, தொடர்புடைய குற்றவாளிகள் 16.07.2014 அன்று கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கின் விசாரணையை, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்பிறகு வேகப்படுத்தி 29.02.2024 அன்று குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

எனவேதான், நான் முன்பு தெரிவித்தபடி, இதுபோன்ற குற்றங்களில் வழக்குகளை முறையாக நடத்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தித் தண்டனைப் பெற்றுத்தருவது என்பது, புதிய சட்டங்களை இயற்றுவதைவிட சரியானதாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

இந்தக் குற்றங்களை வெறும் குற்றவியல் நிகழ்வாக மட்டும் பார்க்காமல், இதன் சமூகப் பொருளாதாரப் பின்னணிக் காரணிகளை வைத்து அவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுத் தருவது ஒருபுறம் இருந்தாலும், சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சியின் மூலமாகப் பெண் கல்வி உயரும்போதும், கல்விப் பொருளாதாரம், வேலைவாய்ப்பில் ஒரு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக உயரும்போதும் இதுபோன்ற குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாக குறையும்.

அதுபோன்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம், அதன் காரணமாகவே, நாம் நடைமுறைப்படுத்தும் புதிய திட்டங்களில் எல்லாம் பெண்களின் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை, கல்வியை, அவர்களது உரிமைகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம்.

எடுத்துக்காட்டாக, புதுமைப் பெண் திட்டம், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம், உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று சொல்லிக்கொண்டே போகலாம். இவற்றையெல்லாம் நாம் தொடர்ந்து கொண்டு செல்லும்போது சமூகத்தில் மனமாற்றம் ஏற்படும். புதிய புதிய சட்டங்களுக்கான தேவையும் குறையும். அதை நோக்கித்தான் இந்த அரசு பயணிக்கிறது.

இருப்பினும், தற்போது நமது இலக்குச் சற்றுத் தொலைவில் இருப்பதாகத் தோன்றினாலும், நடைமுறையில் இன்று சந்தித்து வரும் சமூகரீதியிலான பிரச்சினைகளை, அதன் விளைவுகளை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல உடனடியாக எதிர்கொள்ளவும், அதற்கொரு தனி முக்கியத்துவம் அளிக்கும் விதமாகவும், சாதி மறுப்புத் திருமணம் தொடர்பான அனைத்து வகை குற்றங்களிலும் வழக்குகளை விரைந்து நடத்திட, அரசுத் தரப்பில் பிரத்தியேகமாக சிறப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் (Special Public Prosecutors) நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, தற்போது இதுபோன்ற

குற்றங்களில் எல்லாம், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் ஆய்வாளர் விசாரணை அலுவலராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இவ்வழக்குகளில் விசாரணையின் தன்மையை மேலும் தீவிரப்படுத்தும் வகையிலும், வேகப்படுத்தும் நோக்கிலும் விசாரணை அலுவலராகக் காவல் துணைக் கண்காணிப்பாளரை நியமிப்பது குறித்துச் சட்ட ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, இக்குற்றங்களைக் குறைக்கும் வகையில் மாவட்ட அளவிலான குழுக்கள், அவை அமைக்கப்பட்டதன் பின்னணி, அவற்றின் செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றியெல்லாம் மீண்டும் ஆய்வு செய்து, அதுகுறித்தும் தேவையான முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்து அமைகின்றேன்.

படமும் / செய்தியும்

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 129ஆவது பிறந்தநாள்

சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 129ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 05.06.2024 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர், தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர், மாநிலப் பொதுச் செயலாளர், துணை மேயர், பெருநகரச் சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர், மண்டலக் குழு தலைவர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர், தமிழ் வளர்ச்சி, செய்தித் துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்நாட்டைச் சார்ந்த 5 வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.35 இலட்சம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக், பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வாகியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 5 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஊக்கத்தொகையாகத் தலா ரூ.7 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.35 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார் – 01.07.2024

அந்த வகையில், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக், பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள இதுவரை தமிழ்நாட்டைச் சார்ந்த 15 வீரர்கள், வீராங்கனைகள் தேர்வாகியுள்ளனர். இவர்களில், திரு. பிருத்விராஜ் தொண்டைமான் (துப்பாக்கி சுடுதல்), செல்வி துளசிமதி முருகேசன் (பாரா பேட்மிண்டன்), திருமதி மனிஷா ராமதாஸ் (பாரா பேட்மிண்டன்), செல்வி நித்யா ஸ்ரீ சுமதி சிவன் (பாரா பேட்மிண்டன்), திரு.சிவரஞ்சன் சோலைமலை (பாரா பேட்மிண்டன்) ஆகியோருக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காகச் சிறப்பு ஊக்கத்தொகையாகத் தலா ரூ.7 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.35 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக ரூ.3 கோடி மதிப்பிலான 5 புதிய அதிநவீனச் சொகுசு சுற்றுலாப் பேருந்துகள்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கொடியசைத்துத்
தொடங்கிவைத்தார் - 01.07.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக ரூ.3 கோடி மதிப்பிலான 5 புதிய அதிநவீன சொகுசு சுற்றுலாப் பேருந்துகளின் சேவையினைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

ஏராளமான உள்ளூர் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை, வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

மேலும், உள்நாட்டுச் சுற்றுலாசப் பயணிகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக வருகைதரும் வகையில் தமிழ்நாட்டின் நகரங்களை, நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களுடன் இணைக்கும் வகையிலான இரயில் சேவைகளும், தேசிய, மாநில நெடுஞ்சாலை இணைப்பு வசதிகளும் அதிக அளவில் கொண்ட மாநிலமாகவும், பேருந்து உள்ளிட்ட அனைத்து விதமான போக்குவரத்து வசதிகள் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கின்றது.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971ஆம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பேருந்து சேவைகள், சுற்றுலாப் பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், படகு குழாம்கள் போன்ற பல்வேறு சேவைகளைச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு - ஒகேனக்கல், மைசூர்-பெங்களூர், குற்றாலம், நவக்கிரகக் கோவில்கள் தொகுப்பு, மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலாப் பயண திட்டங்களும், சென்னை-மாமல்லபுரம், காஞ்சிபுரம்-மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ஸ்ரீபுரம் தங்கக் கோவில், புதுச்சேரி என ஒரு நாள் சுற்றுலாப் பயணத் திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவா-மந்த்ராலயம் சுற்றுலாப் பயணத் திட்டங்களும், 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்தியச் சுற்றுலாப் பயணத் திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டுச் சின்னங்களைப் பார்வையிடும் சுற்றுலாப் பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுலாப் பயணத் திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணத் திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், அதிநவீனச் சொகுசுப் பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள் என மொத்தம் 15 சொகுசு பேருந்துகளை இயக்கி வருகிறது. இந்தச் சுற்றுலாப் பேருந்துகள் மூலமாக 07.05.2021 முதல் 31.05.2024 வரை 3,03,721 நபர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத்திட்டங்களின்கீழ்ச் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில், சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக ரூ.3 கோடி மதிப்பிலான 35 இருக்கைகள் கொண்ட 4 பேருந்துகள், 18 இருக்கைகள் கொண்ட 1 பேருந்து என 5 புதிய அதிநவீனச் சொகுசு சுற்றுலாப் பேருந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

இந்த பேருந்துகளில் நீண்ட தூரம், நீண்ட நாட்கள் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள குளிர்சாதன வசதி, மிதவை அமைப்பு (AIR SUSPENSION) வசதி, வாகனத்தின் இருப்பிடத்தை அறிய GPS கருவி, wifi வசதி, ஒவ்வொரு இருக்கையிலும் போன் சார்ஜ் செய்யும் வசதி, 35 பயணிகளும் நீண்ட நாள் பயணத்திற்கான தங்கள் பொருட்களைத் தாராளமாக வைத்துக் கொள்ள மிகப்பெரிய அளவிலான பொருட்கள் வைப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

படமும்/செய்தியும்

இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டுக் கலை நிகழ்ச்சிகள்

சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கத்தில், 29.06.2024 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் (கலை பண்பாட்டு இயக்ககம்) சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் திரு. வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், இந்து திரு. என்.ராம், அரசு உயர் அலுவலர்கள், கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

சமூக விரோத சக்திகளிடம் இருந்து மக்களைக் காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பேன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்
மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்துக் கொண்டுவரப்பட்ட
கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரை - 21.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், அதாவது கடந்த 19.06.2024 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், கருணாபுரத்தைச் சேர்ந்த 47 நபர்கள் மெத்தனால் கலந்த விஷச்சாராயம் அருந்திய காரணத்தினால் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மிகவும் துயரமான சம்பவம் குறித்து உங்களைப் போலவே நானும் மிகுந்த வேதனையும், வருத்தமும் அடைந்தேன். அதுதொடர்பாக நேற்றைய தினம் இந்தப் பேரவையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தியிருக்கிறோம்.

இறந்து போன உயிர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உறவினர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் இந்த அவையில் தெரிவிக்கப்பட்டு வரக்கூடிய நிலையிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு ஒரு சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருணாபுரம் சம்பவத்தைப் பொருத்தமட்டில், காவல்துறை, வருவாய் துறையினர் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில், மெத்தனால் கலந்த சாராயத்தை அருந்தியதால் பலர் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் கிடைத்தது. உடனடியாகப் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான அவசர மருத்துவ உதவிகளைச் செய்திட அறிவுறுத்தினேன்.

மருத்துவப் பணிகளை விரைவுபடுத்திட கூடுதலாக 57 அரசு மருத்துவர்கள், விழுப்புரம், சேலம், திருச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலிருந்து கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

போதுமான செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே உள்ள 161 மருத்துவர்களோடு இவர்களும் அங்கு இணைந்து பணியாற்றி வருகிறார்கள்.

அரசு மருத்துவமனைகளில் இதுபோன்ற நிகழ்வுகளில் சிகிச்சைக்குப் பயன்படுத்தக்கூடிய உயிர்காக்கும் மருந்துகள் அனைத்தும் போதுமான அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில், பாதிக்கப்பட்டவர்களின்

இவர்களோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்பதை இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல் எனக்குத் தெரிந்தவுடன் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரான மாண்புமிகு திரு. எ.வ.வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோரை உடனடியாக கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு உத்தரவிட்டேன். அவர்களும் 19ஆம் தேதி இரவே அங்கு நேரில் சென்று அந்தப் பணிகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக 20ஆம் தேதி காலையில் ஆய்வுக் கூட்டத்தை உயர் அதிகாரிகளோடு நடத்தினேன். அதனையடுத்து, அமைச்சர்கள் எ.வ.வேலு, உதயநிதி, மா.சுப்பிரமணியன் ஆகிய மூவரையும் மீண்டும் கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி வைத்தேன். அவர்களும் கள்ளக்குறிச்சிக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, அரசு அறிவித்த தலா ரூ.10 இலட்சம் நிவாரண உதவியை வழங்கினார்கள். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்பட உள்ளது.

அமைச்சர்கள் மட்டுமல்லாமல், உள்துறைச் செயலாளரையும், டி.ஜி.பி.யையும் நேரில் செல்ல உத்தரவிட்டிருந்தேன். அவர்களை இரண்டொரு நாளில் விசாரணை அறிக்கையைக் கொடுக்கச் சொல்லி இருக்கிறேன். அந்த அறிக்கை கிடைத்ததும் அதன் மீதான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவேன் என உறுதி அளிக்கிறேன்.

உயிர்களைக் காத்திடும் பொருட்டு, அவை வெளிச்சந்தையில் வாங்கியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவப் பணிகளை ஒருங்கிணைத்திட தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் அவர்களும், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களும் முன்பே அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 164 நபர்களில் 117 நபர்கள் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். 47 நபர்கள் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்திருக்கிறார்கள்.

தற்போது 67 நபர்கள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 32 நபர்கள் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 2 நபர்கள் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 16 நபர்கள் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, கோவிந்தராஜ் என்கிற கண்ணுக்குட்டி என்பவர் காவல் துறையினரால் உடனடியாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரிடமிருந்து 200 லிட்டர் மெத்தனால் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும், இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய தாமோதரன், மதன், விஜயா (க/பெ. கோவிந்தராஜ்) ஆகிய 3 நபர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். புதுச்சேரியில் இருந்து மெத்தனால் கொண்டு வரப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நம் அனைவருக்கும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு வேதனையை அளித்துள்ள இந்தத் துயரச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தாங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

❖ இதன் முதற்கட்டமாக, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் உடனடியாகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

❖ கள்ளக்குறிச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

❖ மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த காவல் துணைக் கண்காணிப்பாளர்-

❖ கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் -

❖ திருக்கோவிலூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் -

❖ திருக்கோவிலூர், உதவிக் காவல் ஆய்வாளர் -

❖ திருக்கோவிலூர் சட்டம்-ஒழுங்குக் காவல் நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவல் நிலைய எழுத்தர், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், திருக்கோவிலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரும் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

❖ மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் தலைமை இயக்குநர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் மாற்றப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து தீர விசாரிக்கவும், அதனடிப்படையில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்த வழக்கினை உடனடியாக சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்க உத்தரவிட்டேன்.

அதனைத் தொடர்ந்து சி.பி.சி.ஐ.டி. ஐ.ஜி.யும் நேரில் சென்று விசாரணையைத் தொடங்கியிருக்கிறார்.

எதிர்காலச் சமுதாயத்தை மிக மோசமான வகையில் பாதிக்கும் போதைப் பொருட்களை எந்தவகையிலும் அனுமதிக்க இயலாது என்ற அடிப்படையில், இவற்றை விற்பனை செய்பவர்கள் மீது சட்டரீதியாக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் தீவிரமாக எடுத்து வருகின்றோம்.

தொடர் நடவடிக்கை குறித்து இங்கு அனைவரும் பேசினீர்கள்.

கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற இதேபோன்ற சம்பவம் தொடர்பான வழக்கினை இந்த அரசு சி.பி.சி.ஐ.டி.யிடம் ஒப்படைத்தது. அந்த வழக்கு இரண்டு மாவட்டங்கள் தொடர்புடையது. அதில், விழுப்புரம் வழக்கினைப் பொறுத்தவரையில், 21 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்; 8 குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். காவல் துறை அலுவலர்கள் 16 பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வழக்கில் கள்ளச்சாராயம் தயாரிக்க மெத்தனால் ஆந்திர மாநிலத்திலிருந்து கொண்டுவரப்பட்டது விசாரணையில் தெரியவந்தது.

இந்த வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு, விழுப்புரம் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்ட வழக்கினைப் பொறுத்தவரையில், 6 வழக்குகள் பதியப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 9 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் 5 நபர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 6 காவல் துறை அலுவலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். இந்த வழக்கின் விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல், போலி மதுபானங்கள் கடத்துவது, விற்பனை செய்வது போன்ற குற்றச் செயல்கள் நடைபெறாவண்ணம் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அவற்றைப் பட்டியலிட்டுச் சொல்ல விரும்புகிறேன்,

❖ கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க,மாவட்ட காவல்துறையுடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுமற்றும்வருவாய்துறையினரால்அடிக்கடி சிறப்புச் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

- நமது அரசுப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மீது 4 இலட்சத்து 63 ஆயிரத்து 710 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4 இலட்சத்து 61 ஆயிரத்து 84 பேர் கைது செய்யப்பட்டனர்.
- இந்த அரசுப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 565 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.
- 16 இலட்சத்து 51 ஆயிரத்து 633 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
- 1 இலட்சத்து 42 ஆயிரத்து 19 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
- 28 இலட்சத்து 79 ஆயிரத்து 605 லிட்டர் ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் மொத்தம் 45 நிரந்தர மதுவிலக்குச் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு சட்டவிரோத மதுபான கடத்தல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- கள்ளச்சாராயத்தில் முக்கியமாக மெத்தனால் பயன்பாட்டால் உயிரிழப்புகள் ஏற்படும் நிலையில், மாநிலத்தில் உள்ள அனைத்து மெத்தனால் உற்பத்தி அலகுகள், பயனர்கள், மெத்தனால் வைத்திருப்பதற்கான, பயன்படுத்துவதற்கான உரிமம் பெற்ற தொழிற்சாலைகள் போன்றவற்றைத் தணிக்கை செய்ய மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அவர்களின் மாதாந்திர அறிக்கைகள் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுத் தலைமையகத்தில் கண்காணிக்கப்படுகின்றன. ஆனால், அண்டை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மெத்தனால் சட்டவிரோதமாக கள்ளத்தனமான முறையில் நம் மாநிலத்திற்குள் கொண்டு வரப்பட்டு இதுபோன்ற சம்பவங்களுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது.

- மேலும், அரசின் அறிவுரையின்படி, கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்கள் தடுப்புச் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் காவல்துறை, வருவாய்த் துறைத் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மாவட்ட மேலாளர் ஆகியோரைக் கொண்டு ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது பாரபட்சமின்றிக் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளேன்.
- சம்பவம் நடைபெற்ற கள்ளக்குறிச்சியைப் பொருத்தமட்டில், இந்த அரசுப் பொறுப்பேற்றதிலிருந்து 14,606 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 10,154 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 58 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ்ச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இப்படி இந்த அரசானது கள்ளச்சாராயத்தை அறவே ஒழிப்பதற்கு மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையிலும், இதுபோன்ற சில விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படுவது மிகவும் வேதனைக்குரியது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும்.

அதனடிப்படையில், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கவும், அவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு ரூ.10 இலட்சம் நிவாரண நிதியுடன் பின்வரும் நிவாரணங்கள் கூடுதலாக வழங்கப்படும்.

பெற்றோர் இருவரையோ அல்லது ஒருவரையோ இழந்து வாடும் குழந்தைகளின் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும்.

பெற்றோர்கள் இருவரையும் இழந்து ஆதரவின்றித் தவிக்கும் ஒவ்வொரு குழந்தையும் பாதுகாவலர் பராமரிப்பில் வளர, அவர்கள் 18 வயது நிறைவடையும் வரை மாத பராமரிப்புத் தொகையாக தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படும்.

பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு உடனடி நிவாரணத் தொகையாக அவர்களின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிலையான வைப்புத் தொகையில் வைக்கப்படும். அவர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் அந்தத் தொகை வட்டியுடன் அவர்களுக்கு வழங்கப்படும்.

பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்து வாடும் குழந்தைகளுக்குத் தலா ரூ.3 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும்.

பெற்றோர் இருவரையோ அல்லது ஒருவரையோ இழந்து வாடும் குழந்தைகளுக்கு, அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கப்படும்.

பெற்றோரை இழந்த குழந்தைகள், அவர்களது விருப்பத்தின் பேரில், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேர்க்கப்படுவர்.

மேலும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாவண்ணம் அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கவும், கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து ஒரு விரிவான விசாரணை மேற்கொள்ள, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.கோகுல்தாஸ் அவர்கள் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைத்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆணையம், இதுகுறித்து முழுமையாக விசாரித்து, தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும். அதனடிப்படையில் இந்த அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நடைபெற்ற சம்பவத்துக்கு முதலமைச்சர் பொறுப்பேற்க வேண்டும்" என்று இங்கு பேசினார்கள்.

உள்துறையைக் கவனிப்பவன் என்ற முறையில்மட்டுமல்ல:தமிழ்நாட்டின்முதலமைச்சர் என்ற முறையில் எந்தப் பிரச்சினையில் இருந்தும் ஓடி ஒளிபவனல்ல நான். பொறுப்பை உணர்ந்ததால்தான் பொறுப்புடன் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். எடுத்த நடவடிக்கைகளையும் பட்டியலிட்டிருக்கிறேன். குற்றவாளிகளைக் கைதுசெய்து விட்டுத்தான் உங்களுக்குப் பதில் அளித்திருக்கிறேன். திறந்த மனத்தோடு இரும்புக் கரம் கொண்டு குற்றம் புரிந்தவர்களை அடக்கி வருகிறேன்.

எதிர்க்கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில், போதைப் பொருட்கள் விவகாரத்தில் அமைச்சர்கள், உயர்காவல்துறை அதிகாரிகள் ஈடுபட்டது விசாரிக்கப்பட்டு அந்த வழக்கு நீதிமன்றத்திலும் இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட கள்ளச்சாராய மரணங்கள் பற்றிய பட்டியல் என் கையில் இருக்கிறது. அதையெல்லாம் வைத்து அரசியல் பேச நான் விரும்பவில்லை.

துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை, சமூக விரோத சக்திகளிடம் இருந்து மக்களைக் காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என உறுதி அளிக்கிறேன்.

ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 10 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்தும் "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்"

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கிராமப்புறச் சாலைகள் திட்டம் குறித்துச்
சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ்
அளித்த அறிக்கை - 24.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம். நகரம், கிராமம் என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து வளர்ச்சிகளையும் வழங்கி வருகிறோம். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்பதையே நமது திராவிட மாடல் அரசின் இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இதில் சாலை வளர்ச்சி என்பது மிக, மிக முக்கியமானது. நகரம், கிராமம் என்ற வேறுபாடு இல்லாமல் சாலை மேம்பாட்டைத் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டு வறுமையை ஒழிப்பதில் முக்கியக் காரணியாக உள்ளன.

தமிழ்நாட்டில் சுமார் 1 இலட்சத்து 38 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உள்ளன. ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளை மேலும் மேம்படுத்தும் விதமாக ஒரு புதிய அறிவிப்பை இப்போது நான் வெளியிட விரும்புகின்றேன்.

ஊரகச் சாலைகளில் செய்யப்படும் முதலீட்டிற்கும் ஊரக மக்களின் நலனிற்கும் நேரடித் தொடர்பு உள்ளது. சாலைகளின் உட்கட்டமைப்பு, போக்குவரத்துச் சேவைகளின் மேம்பாடு என்பது ஊரகப் பகுதிகளில் வணிகச் செயல்திறனை அதிகப்படுத்துகிறது. அதன்மூலம், இடுபொருள் செலவினைக் குறைத்து வேளாண் உற்பத்தியினை அதிகரித்து, ஊரக வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. தரமான சாலைகள், கிராமப்புற மக்களின் வருமான அளவினை உயர்த்துகிறது.

கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை வழங்கி, அறிவாற்றலைப் பரவலாக்கி, சமூகப், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவுகிறது.

எனவேதான், பேருந்து செல்லக்கூடிய சாலைகள், குக்கிராமங்களை இணைக்கும் முக்கிய சாலைகள், பல்வேறு முக்கிய சேவைகளைக் கிராமங்களுடன் இணைக்கும் சாலைகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு நமது அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது.

அதன்படி, கடந்த 13.01.2023 அன்று என்னால் சட்டப்பேரவையில் "முதல்வரின் கிராமச்சாலைகள்

மேம்பாட்டுத் திட்டம்” என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராம ஊராட்சிச் சாலைகளை மேம்படுத்த ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி தற்போது வரை 8,120 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்,
- நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி,
- பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்,
- நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழும், கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 16,596 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 425 உயர்மட்டப் பாலங்கள் அமைக்கத் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ.9,324.49 கோடி. இதனைத் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

வருகிற இரண்டு ஆண்டுகளில் “முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்” மூலம் கூடுதலாக மேலும் 10 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை இம்மாமன்றத்துக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகிறேன்.

நன்றி, வணக்கம்.

நீட் எனும் பிணியை அழித்தொழிக்கக் கரம்கோப்போம்...

சமீபத்திய நீட் தேர்வு முடிவுகள் தொடர்பாக வெளிவரும் செய்திகள் அத்தேர்வுக்கு எதிரான நமது கொள்கை நிலைப்பாடு நியாயமானது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

வினாத்தாள் கசிவுகள், குறிப்பிட்ட மையங்களில் இருந்து மொத்தமாக அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள், கருணை மதிப்பெண்கள் என்ற போர்வையில் நடைமுறைக்குச் சாத்தியமற்ற அளவில் மதிப்பெண்களை அள்ளி வழங்குவது போன்ற குழப்பங்கள் தற்போதைய ஒன்றிய அரசின் அதிகாரக்குவிப்பின் குறைபாடுகளை வெட்டவெளிச்சமாக்குகின்றன.

இவை, தொழிற்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறையைத் தீர்மானிப்பதில் மாநில அரசுகள் மற்றும் பள்ளிக் கல்வி முறை மீண்டும் முதன்மை பெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

மீண்டும் ஒருமுறை அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறோம்:

- நீட் மற்றும் பிற தேசிய நுழைவுத் தேர்வுகள் ஏழை மாணவர்களுக்கு எதிரானவை.
- அவை கூட்டாட்சியியலை சிறுமைப்படுத்துபவை.
- சமூகநீதிக்கு எதிரானவை.
- தேவையுள்ள இடங்களில் மருத்துவர்களின் இருப்பைப் பாதிப்பவை.

நீட் எனும் பிணியை அழித்தொழிக்கக் கரம்கோப்போம்! நீட்டை ஒழித்துக்கட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 07.06.2024

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளிக்க வலியுறுத்தும் தீர்மானம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை – 28.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலும், பல்வேறு பொது சுகாதாரக் குறியீடுகளிலும் நாட்டிற்கே முன்னோடியாக நம்முடைய தமிழ்நாடு திகழ்கிறது. பல ஆண்டுகளாக நமது தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட சிறப்பான மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை முறைதான் இந்தச் சாதனைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. முனைவர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் தொழிற்பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை இரத்து செய்து இந்தச் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

பள்ளிக்கல்வி மதிப்பெண்களின் அடிப்படையில், சமூகநீதியையும், அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குச் சமவாய்ப்பையும் உறுதி செய்யக் கூடிய முன்னோடி சேர்க்கை முறையை நாம் பின்பற்றி வருகிறோம். இந்த முறையால்தான் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மருத்துவர்கள் உருவாகவும், அனைத்துப் பகுதிகளுக்கும் சிறப்பான மருத்துவச் சேவைகளை வழங்கிடவும் முடிந்தது. ஆனால் 2017ஆம் ஆண்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வை ஒன்றிய அரசு கட்டாயமாக்கிய பின்பு, இந்த நிலை முற்றிலும் மாறி, மருத்துவப் படிப்பு என்பது ஏழையெளிய மாணவர்களுக்கு எட்டாக்கனி ஆகிவிட்டது. பயிற்சி வகுப்புகளுக்குச் செல்ல முடியாத கிராமப்புற, ஏழை, எளிய மாணவர்களால் இந்தத் தேர்வில் வெல்ல இயலாது. அதுமட்டுமல்ல; கிராமப்புறப் பகுதிகளிலும் பின்தங்கிய பகுதிகளிலும் வழங்கப்படும் மருத்துவச் சேவைகளையும் எதிர்காலத்தில் இந்த முறை பாதிக்கும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், நீட் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, அதனை அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். தி.மு.க. சார்பில் மட்டுமல்ல; கழக இளைஞரணி சார்பிலும் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, மாணவர் அணியையும், மருத்துவர் அணியையும் ஒருங்கிணைத்து, "நீட் விலக்கு-நம் இலக்கு" என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இவற்றையெல்லாம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள் தன்னுடைய பரிந்துரையில் விரிவாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

நீட் தேர்வு விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள், சமூகச் சிந்தனையாளர்கள் என அனைவரிடமும் அசைக்கமுடியாத கருத்தொற்றுமை நிலவி வருகிறது. இதனடிப்படையில், ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஏ.கே.இராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இந்தச் சட்டமன்றப் பேரவையில் 13.09.2021 அன்று தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021 என்ற சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகும் மாண்புமிகு ஆளுநரால் அதற்கான ஒப்புதல் வழங்கப்படாமல், மறுபரிசீலனை செய்திட திருப்பி அனுப்பப்பட்டது.

இந்நிலையில், என் தலைமையில் 05.02.2022 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவினை மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவது தொடர்பான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, 08.02.2022 அன்று சட்டமுன்வடிவு மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு மாண்புமிகு ஆளுநரால் அனுப்பப்பட்டு, இதுகுறித்து ஒன்றிய அரசால் கோரப்பட்ட அனைத்து விளக்கங்களுக்கும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் உரிய பதில்களை வழங்கியுள்ள நிலையிலும், இதற்கு ஒப்புதல் அளிக்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருகிறது.

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற நீட் தேர்வின் போது அரங்கேறியுள்ள சம்பவங்கள், போட்டித் தேர்வுகளின் மீது நமது மாணவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையே நிலைகுலையச் செய்துள்ளன.

- இதுவரை இருந்திராத அளவிற்கு, அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றது.
- தேர்வுகள் காலதாமதமாகத் தொடங்கியதாகக் காரணம் காட்டி, விதிகளில் இல்லாத முறையில் கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதால், இந்தக் கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்பட்டு, இவர்களுக்கு மறுதேர்வு நடத்தப்பட்டது.
- பல்வேறு தேர்வு மையங்களில் தேர்வுக்கு முன்னரே வினாத்தாள் வெளியானதாகத் தகவல்கள்.
- தேர்வு மையத்தில், தேர்வுக் கண்காணிப்பாளரே விடைத்தாள்களை நிரப்பிய ஊழல் எனக் குவிந்துள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பல ஆண்டுகாலம் உழைத்து, பெரும் செலவழித்து, இந்தப் போட்டித் தேர்வுக்குத் தயாரான மாணவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்து, தவறே நடைபெறவில்லை என்று கூறிய ஒன்றிய அரசு, பின்பு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் குட்டு வாங்கிய பின்னரே, இந்தத் தேர்வை நடத்தும் NTA அமைப்பின் தலைவரை மாற்றியுள்ளது. தேர்வு முறைகேடுகள் குறித்து எழுப்பப்படுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட்டுள்ளது. முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டு காலமாக நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் தனியே போர் தொடுத்து வந்த நிலையில், நீட் தேர்வின் உண்மையான அவலநிலையை உணர்ந்து, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிரான எதிர்ப்புக் கிளம்பி வருகின்றது. தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாக நாடு முழுவதும் எதிரொலிப்பதை அண்மை நிகழ்வுகள் காட்டுகின்றன.

"மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளே முடிவெடுத்த பழையநிலையைமீண்டும்கொண்டுவரவேண்டும்" என மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள், பிரதமருக்கே கடிதம் எழுதியுள்ளார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. அகிலேஷ் யாதவ், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர்

திரு.தேஜஸ்வி யாதவ் எனப் பலரும் நீட் தேர்வை இரத்து செய்ய வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குப் பெற நாம் எடுத்த முயற்சிகளை வெற்றியடைய செய்யவும், தேசிய அளவில் நீட் தேர்வை அறவே அகற்றிடவும் தேவையான முன்னெடுப்பாக, இந்த மாமன்றம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம்

"கிராமப்புற, ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக்கல்வி வாய்ப்புகளைக் கடுமையாகப் பாதிக்கும் வகையிலும், பள்ளிக் கல்வியை அவசியமற்றதாக்கும் வகையிலும், மாநில மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறிக்கும் வகையிலும் அமைந்துள்ள நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும்.

இந்தத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து, பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12ஆவது வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்வதற்காக, இந்தச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வேண்டுமென்றும், தொடர்ந்து பல முறைகேடுகளுக்கு வழிவகுத்து வரும் இந்தத் தேர்வு முறையை பல்வேறு மாநிலங்களும் தற்போது எதிர்த்து வரும் நிலையில், தேசிய அளவில் நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது."

சவாலான சூழல்களிலும் இணையற்ற அறிவுக்கூர்மையை வெளிப்படுத்திய நமது இந்திய அணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பாராட்டு - 30.06.2024

முழுமையான ஆதிக்கத்துடன், நம் இந்திய அணி வீரர்கள் இரண்டாவது முறையாக டி20 உலகக் கோப்பையை வென்றுள்ளதைக் கொண்டாடுவதில் உற்சாகமடைகிறேன்.

சவாலான சூழல்களிலும் இணையற்ற அறிவுக்கூர்மையை வெளிப்படுத்திய நமது இந்திய அணி, தோல்வியே காணாமல் உலகக் கோப்பைத் தொடரை நிறைவு செய்துள்ளது.

இந்திய அணிக்குப் பாராட்டுகள்!

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் 75,000க்கும் மேற்பட்ட அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் விதி 110-இன்கீழ் அளித்த அறிக்கை - 25.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலனை, இளைஞர் எதிர்காலத்தை, இளைஞர்களின் மேன்மையை எப்போதும் மனதில் வைத்துத் திட்டங்களைத் தீட்டி வருவது திராவிட மாடல் ஆட்சியின் தனித்தன்மை! இளைய சக்தியை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மிக மிகக் கவனமாகச் செயல்பட்டு வருகிறோம். அதனை அடிப்படையாகக் கொண்ட அறிவிப்பைத்தான் இப்போது வெளியிட விரும்புகிறேன்.

வளமான அரசாக, அமைதியான அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. தொழில் வளம் நிறைந்த தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அதன்மூலம் நமது இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றிடவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறோம். நமது மாணவச் செல்வங்களுக்குத் தரமான பள்ளிக் கல்வியையும் உயர்கல்வியையும் அளிக்கின்றோம். அத்துடன் அவர்களது வேலைவாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. கல்வியின் மூலமாக ஒரு அறிவுசார் பொருளாதாரத்தை நாம் உருவாக்கி வருகிறோம்.

இவற்றை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டவைதான் புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்கள். அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கும் அரசுதான் நமது திராவிட மாடல் அரசு. கழக அரசுப் பொறுப்பேற்றதிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் வாயிலாக 32,774 நபர்களுக்குப் பல்வேறு அரசுத் துறைகளில் நேரடிப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டன.

அதேபோல், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு அரசு அமைப்புகளில் 32,709 இளைஞர்கள் பணிநியமனம் பெற்றனர். மொத்தம் 65,483 இளைஞர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில்

அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, பெருந்தொழில் மற்றும் குறு, சிறு நிறுவனங்களின் மூலமாகவும் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளோம். நமது அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகளின் காரணமாகவும், மிகச்சிறப்பான முறையிலே நடத்தி முடிக்கப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் கிடைக்கப் பெற்ற பெரும் முதலீடுகள் காரணமாகவும் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வெறும் வார்த்தையாக அல்ல, ஆதாரங்களோடுதான் இதனை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் அமைப்பு சார்ந்த தனியார் துறைகளில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்த புள்ளி விவரங்கள் ஒன்றிய அரசின் தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டது. இது ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின்கீழ்ச் செயல்படும் ஓர் அமைப்பாகும். இந்த நிறுவனத்தின் தரவுகளின்படி, கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 77,78,999 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. அவர்களுக்குத் தொழிலாளர் வைப்பு நிதி கணக்குகளும் தொடங்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி, என்னுடைய கனவுத் திட்டம் என்று நான் எப்போதும் பெருமையோடு குறிப்பிடக்கூடிய "நான் முதல்வன் திட்டம்" மூலமாகச் சிறப்புப் பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன. இதன் மூலம் படித்த இளைஞர்களின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலமாக இதுவரை, 3,06,459 நபர்களுக்குத் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறையின் மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக கடந்த 3 ஆண்டுகளில் 2,01,596 இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. இந்த இரண்டையும் சேர்த்து, தமிழ்நாடு அரசின் முயற்சியினால், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், மொத்தம் 5,08,055 தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'நம் இளைஞர்கள்தான் நம் பலம்! அவர்கள்தான் நமது எதிர்கால வளத்திற்கு அடிப்படையானவர்கள்!' இதனை உணர்ந்த காரணத்தினால், தமிழ்நாடு அரசு இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியினை எதிர்நோக்கி இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்குத் தற்போது ஒரு மகிழ்ச்சியான செய்தியினைப் பேரவையில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் ஜனவரி 2026க்குள், அதாவது இன்னும் 18 மாதங்களுக்குள் பல்வேறு அரசுப் பணியிடங்களுக்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 17,595 பணியிடங்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 19,260 ஆசிரியப் பணியிடங்களும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 3,041 பணியிடங்களும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 6,688 பணியிடங்களும் நிரப்பப்படும். அதாவது வரும் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் மொத்தம் 46,584 பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதவிர, சமூக நலத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட முக்கியத் துறைகளில் காலியாக இருக்கக்கூடிய 30,219 பணியிடங்களும் நிரப்பப்படும்.

இவற்றை மொத்தமாக சேர்த்துப் பார்க்கையில், 75,000க்கும் மேற்பட்ட அரசுப் பணியிடங்கள் வரும் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நிரப்பப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்து அமைகிறேன்.

சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்திடக்கோரி அரசினர் தனித்தீர்மானம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 26.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற உயர்ந்த கோட்பாட்டின் வழியில் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற சமுதாய சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு, தனது சமூகநீதிப் பயணத்தை இந்த அரசு முன்னெடுத்து வருகிறது.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் கல்வி, வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் சம வாய்ப்புகளையும், சமஉரிமைகளையும் கொண்டவர்களாக மாற்றுவதன் மூலம்தான் உண்மையான, பரவலான பொருளாதார வளர்ச்சி அடைந்த சமுதாயமாக நாம் மாற இயலும். அந்த நோக்கத்துடன்தான் கல்வி, சமூகம், பொருளாதாரம் ஆகிய தளங்களிலும் அனைத்துத்தரப்பு மக்களிடையேயும் ஒரு சமநிலையைக் கொண்டுவருவதற்காக இடஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள் எனச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒருங்கே வளர்ச்சியடைய வழிவகை செய்து, அதனைக் கடைபிடித்து வருகிறோம்.

சமீபகாலமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம்கூட, இந்தப் பேரவையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு.கோ.க.மணி அவர்கள் பேசும்போதுகூட, சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தினைத்

தெரிவித்திருந்தார். சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தும் என்பதை முதலில் இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பொருள் குறித்து இந்தப் பேரவைக்கு முழுமையான விவரங்களை எடுத்துரைப்பது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அதாவது, ஒன்றிய அரசால் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948இன்கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு மாபெரும் பணி. இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒன்றிய அரசால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாபெரும் பணி. மக்கள்தொகை தொடர்பான புள்ளிவிவரங்கள் அனைத்தும் இக்கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசால் தொகுத்து வெளியிடப்படுகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 3இன்படி ஒன்றிய அரசுதான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தவேண்டும். ஆனால், பொதுவெளியில் பரவலாகத் தெரிவிக்கப்படும் ஒரு கருத்து என்னவென்றால், புள்ளிவிவரச் சட்டம் 2008, அதாவது, Collection of Statistics Act, 2008இன் அடிப்படையில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ளலாம் என்பதாகும்.

இந்தச் சட்டத்தின்படி மாநில அரசுகள் சமூகப் பொருளாதார புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதே தவிர, இதே சட்டத்தின் பிரிவு 3, உட்பிரிவு (அ)இன்படி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7ஆவது அட்டவணையிலுள்ள இனங்கள் தொடர்பாகப் புள்ளிவிவரங்கள் சேகரிக்க இயலாது. அந்த 7ஆவது அட்டவணையில்தான் மக்கள்தொகை கணக்கெடுப்பு 69ஆவது இனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இச்சட்டத்தின் பிரிவு 32இன்படி மக்கள்தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948இன்கீழ்க் கணக்கெடுக்கப்படும் மக்கள்தொகை தொடர்பான புள்ளிவிவரங்களைச் (Census data) சேகரிக்க இயலாது என்று மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் தொடர்பான வழக்குத் தற்போது மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், பொதுவெளியில் சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளபடி 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் சட்டத்தின்கீழ்ச் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள இயலாது. சட்டப்படியாக நிலைக்கக்கூடிய கணக்கெடுப்பு என்றால், அது ஒன்றிய சட்டமான மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின்கீழ்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவேதான், இப்பணியை ஒன்றிய அரசு மேற்கொள்வதுதான் முறையாக இருக்குமென்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246இன்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணியான மக்கள்தொகை கணக்கெடுப்பினை 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளாமல் ஒன்றிய அரசு இன்றுவரை காலம் தாழ்த்தி வருவது எதனால்? முதல் ஆண்டு கோவிட் பெருந்தொற்றைக் காரணமாக சொன்னார்கள். தற்போது கோவிட் சென்று 3 ஆண்டுகளுக்கு மேலான பின்பும் அப்பணியை மேற்கொள்ளாமல் இருப்பது ஒன்றிய அரசு தன் கடமையைப் புறக்கணிக்கும் செயல் அல்லவா?

நாம் தொடர்ந்து கோரிக்கை வைப்பது மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மட்டுமல்ல, அத்துடன் சேர்த்துச் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று வலியுறுத்தி கடந்த 20.10.2023 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். அவ்வாறு ஒன்றிய அரசு களப்பணியை மேற்கொள்ளும்போது கிடைக்கப்பெறும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மாநில அரசு எடுக்கும் முடிவுகளுக்கும், இயற்றும் சட்டங்களுக்கும் தான் சட்டரீதியான பாதுகாப்பு எப்போதும் இருக்கும். மாறாக, அந்தந்த மாநில அரசுகள் ஒரு சர்வே (Survey) என்ற பெயரில் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது, பின்னர் அதன் அடிப்படையில் சட்டங்களை இயற்றுவது என்றால் அது பின்னொரு நாளில் நீதிமன்றங்களால் இரத்து செய்யப்படும் வாய்ப்புள்ளது. எனவேதான், இந்தக்

காரணங்களின் அடிப்படையில், ஏற்கெனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் சாதி வாரியான மக்கள்தொகைக் கணக்கெடுப்பையும் சேர்த்தே நடத்தவேண்டும் என்றும் இந்தப் பேரவை வாயிலாகப் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிய விரும்புகிறேன்.

தீர்மானம்

"இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழிவகை செய்ய சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பு அவசியம் என்று இப்பேரவை கருதுகிறது.

எனவே, 2021ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதி வாரியான கணக்கெடுப்பையும் இணைத்தே நடத்தவேண்டும் என்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது".

இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

ஜூலை 11: வீரன் அழகுமுத்துக்கோன் அவர்கள் பிறந்த நாள்

"விடுதலைப் போருக்கான விதையை விதைத்த மாவீரன்"

எட்டையபுரத்தை மீட்டெடுக்க விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் படை திரட்டினார். மாவேலி ஓடை, பெத்தனாயக்கனூர் பகுதியிலிருந்து வீரர்கள் பலர் படையில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு வீரன் அழகுமுத்துக்கோன் போர்ப் பயிற்சியளித்தார்.

எட்டையபுரத்தை மீட்பதற்குப் பெரிய படையினை உருவாக்கி அதனை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார் வீரன் அழகுமுத்துக்கோன். ஒன்றிற்கு மன்னர் வெங்கடேஸ்வர எட்டப்பரும், மற்றொன்றிற்கு விடுதலை வீரர் அழகுமுத்துக்கோனும் தலைமை ஏற்றனர். படைகள் இருவேறு திசையில் புறப்பட்டன. வீரன் அழகுமுத்துக்கோன் தலைமை ஏற்ற படை இரவில் பெத்தனாயக்கனூர் கோட்டையில் தங்கியது. இதனை, உளவறிந்த கான்சாகிப், இதுதான் சரியான தருணம், இப்பொழுது அழகுமுத்துக்கோனை அழிக்காவிட்டால் எட்டையபுரம் ஆங்கிலேயரிடம் இருந்து பறிபோய்விடும் என்று முடிவெடுத்து அழகுமுத்துக்கோன் தங்கியிருந்த பெத்தனாயக்கனூர் கோட்டையை முற்றுகையிட்டான்.

வீரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நேரம் பார்த்து திடீர் தாக்குதல் யுத்தியைக் கையாண்டான் கான்சாகிப். இந்தத் திடீர் தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் வீரர்கள் போரில் வீரமரணம் அடைந்தார்கள்.

அழகுமுத்துக்கோன் உட்பட உயிருடன் பிடிபட்ட 255 வீரர்களை நடுக்காட்டூர் சீமை என்ற இடத்திற்கு இழுத்துச்சென்று 248 பேரின் வலது கரங்களை வெட்டி எறிந்தார்கள். அழகுமுத்துக்கோன், கெச்சிலணன் சேர்வை, வெங்கடேசுரரெட்டு சேர்வை, முத்தழகு சேர்வை, பரிவாரம் முத்திருளன் இவரது தம்பி செகவீர ரெட்டுலட்சுமணன், தலைக்காட்டுபுரம் மயிலுப்பிள்ளை ஆகிய ஏழு பேரையும் பீரங்கி வாயில் கட்டி வைத்து சுட்டுத் தள்ளினார்கள். 1759ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தக் கொடூரத்தை நிகழ்த்தினார்கள் வெள்ளையர்கள். வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, பீரங்கி வாயில் வைத்துப் பிளந்தாலும் தன் உரிமையை விட்டுத் தந்திட மாட்டோம். அடிமைப்பட்டு உயிர் வாழ்வதைவிட சுதந்திர மனிதனாக உயிர் விடுவோம் என்று, தன் உயிரை இழந்த மாவீரர் அழகுமுத்துக்கோன் விடுதலைப் போருக்கான விதையைத் தமிழ்நாட்டில் விதைத்தார்.

நன்றி - **தடம் பதித்த தலைவர்கள்** என்னும் நூலிலிருந்து..

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம்

மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110-இன்கீழ் அறிவிப்பு - 27.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உட்கட்டமைப்புக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைக்கப் போகும் மாபெரும் அறிவிப்பு ஒன்றையும், தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப் போகும் அறிவுலகம் வரவேற்கும் முக்கியமான அறிவிப்பு ஒன்றையும் இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ந்து வருகிறது. அதில் மிக முக்கியமானது பெருந்தொழில்கள். வளர்ச்சிமிகு தமிழ்நாடாகவும், அமைதிமிகு தமிழ்நாடாகவும் இருப்பதால், தமிழ்நாட்டை நோக்கிப் பல்வேறு நிறுவனங்கள் உலகம் முழுவதும் இருந்து தொழில் தொடங்குவதற்கு வந்து கொண்டேயிருக்கிறார்கள். இந்தத் தொழில் நிறுவனங்கள் மூலமாகத் தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சி அடைகிறது என்பது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் இளைய சக்தியான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

2022ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே தமிழ்நாடு 'நம்பர்-1' மாநிலமாக முன்னேற்றம் கண்டுள்ளது. மோட்டார் வாகனங்கள், உதிரிபாகங்கள், தோல் பொருட்கள், மின்னணுப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. புத்தொழில் வளர்ச்சிக்கான மாநிலங்களின் தரவரிசையில், 2020ஆம் ஆண்டில் கடைசி நிலையில் இருந்த தமிழ்நாடு, தற்போது சிறந்த செயற்பாட்டாளர் அந்தஸ்தை பெற்று முதலிடம் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் 'ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக' உயர்த்திட வேண்டும் என்ற இலக்கினை விரைவில் அடைவதற்காக, தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. உலக முதலீட்டாளர்களை ஈர்க்கும் மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்து வருவதை இதன் மூலம் அறியலாம்.

அனைத்து மாவட்டங்களிலும் தொழில்களைப் பரவலாக உருவாக்கி வருகிறோம். இதில் மின்னணு, மின் வாகனங்கள் உற்பத்தித் துறையில் ஓசூர் கடந்த சில ஆண்டுகளில் முதலீடுகளை அதிகளவில் ஈர்த்து வருகிறது. இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்டு வேகமாக வளர்ந்து வரும் ஓசூர் நகரத்தினை, தமிழ்நாட்டின் முக்கியமான பொருளாதார வளர்ச்சி மையமாக உருவாக்குவதற்காக, அங்கு நவீன உட்கட்டமைப்புகளை அமைக்கும் நோக்கில், பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு தற்போது செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், ஓசூர் நகரத்திற்கான ஒரு புதிய பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு, அது முடிவடையும் தருவாயில் உள்ளது. ஓசூர் மட்டுமல்லாது, கிருஷ்ணகிரி, தருமபுரி பகுதிகளின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஓசூரில் ஒரு விமான நிலையம் அமைப்பது அவசியம் என இந்த அரசு கருதுகிறது.

ஓசூரில் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில், ஆண்டுக்கு 30 மில்லியன் பயணிகளைக் கையாளக்கூடிய வகையில், ஒரு பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்பதனை இந்த மாமன்றத்தில் நான் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து, இரண்டாவது அறிவிப்பை வழங்க விரும்புகிறேன்.

திராவிட இயக்கம் என்பது மாபெரும் அறிவியக்கம். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் தலைமை நிலையத்துக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'அறிவகம்' என்று பெயர் சூட்டினார். தற்போதைய தலைமை நிலையத்துக்கு 'அறிவாலயம்' என்று பெயர் சூட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தி.மு.கழகம் எங்கெல்லாம் கிளை பரப்பியதோ, அங்கெல்லாம் படிப்பகங்கள் உருவாக்கப்பட்டன. அரசியல் இயக்கமாக மட்டுமல்லாமல், தமிழ் இலக்கிய இயக்கமாகவும் வளர்ந்தது.

வாசிப்பதற்கும் சுவாசிப்பதற்கும் வேறுபாடு காணமுடியாத வாழ்க்கை வாழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். பாதி வரை படித்த புத்தகங்களின் மீதியைப் படிப்பதற்கு ஏதுவாக அறுவை சிகிச்சையைத் தள்ளி வைக்கச் சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்தப் பேரறிஞரின் நூற்றாண்டைக் கொண்டாடி மகிழ்ந்த தலைவர் கலைஞர், கோட்டூர்புரத்தில் எட்டு மாடிகள் கொண்ட, ஒரே நேரத்தில் 1,200 பேர் உட்கார்ந்து படிக்கிற வகையில், மூன்று இலட்சத்து முப்பத்து மூன்றாயிரம் சதுர அடிகள் கொண்ட நூலகத்தை உருவாக்கி, அதற்கு 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்.

அந்த வகையில், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வசிப்பவர்களும் நூலகங்கள் மூலம் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில், சங்கம் வைத்து மாத்தமிழ் வளர்த்த மதுரையில் 15.07.2023 அன்று கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டு, என்னால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர்வாழ் பொதுமக்களுக்கும் இளைய தலைமுறைக்கும் பயன்படும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம், முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தோம். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

அந்த வரிசையில் காவிரிக் கரையில் அமைந்த மாநகரமான திருச்சிராப்பள்ளி மாநகரில், உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்பதை இந்த அவைக்கு மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு வசதிகளை உள்ளடக்கி, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியப் பகுதியில் ஓர் அறிவுக் களஞ்சியமாக அது அமைந்திடும். தினந்தோறும் திட்டங்கள் தீட்டும் நாளாக, விடியும் நாளாக, விடியல் தரும் நாளாக உருவாக்கி வருகிறோம் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

ரூ.1,146 கோடி மதிப்பீட்டில் 6,746 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் மற்றும் புதிய திட்டப்பகுதிகளில் கட்டுமானம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அளித்த விதி எண் 110இன்கீழான அறிக்கை -28.06.2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற பேரறிஞர் அண்ணா வழி நடந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழச் சிறந்த பல திட்டங்களை உருவாக்கி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் இதுவரை 29,439 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 1,70,462 தனி வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 172 திட்டப் பகுதிகளில் 79,094 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 89,429 தனி வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டப் பணிகளுக்காக ரூ.6,685 கோடி செலவிடப்பட்டுள்ளது.

புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டும் பணியில் மட்டும் கவனம் செலுத்தி, அத்துடன் நின்றுவிடாமல், இந்த அரசு பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுசீரமைப்பிலும் கவனம் செலுத்துகிறது. சென்னை, இதர நகரங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பல ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில நீண்டகாலப் பயன்பாடு, தட்பவெப்பநிலை காரணமாகச் சிதிலமடைந்துள்ளன. இந்தக் குடியிருப்புகளை முறையாகக் கணக்கெடுத்து, அவற்றை மறுகட்டுமானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மறுகட்டுமானத்திற்குப் பின் இக்குடியிருப்புகள், புதுமையான, மேம்படுத்தப்பட்ட அம்சங்கள், வசதிகளுடன் பழைய குடியிருப்புகளில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கும், இதே திட்டப் பகுதிகளின் அருகில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தற்போது, தமிழ்நாடு முழுவதும் 1,93,891 அடுக்குமாடிக் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள், 28,643 குடியிருப்புகள் சிதிலமடைந்துள்ளதாகத் தொழில்நுட்ப வல்லுநர் குழுவால் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மறுகட்டுமானம் செய்யப்படும்.

இதன் முதற்கட்டமாக, 2024-2025ஆம் ஆண்டில், சென்னை மாநகரில் கிழக்குக் கல்லறை சாலை, கொடுங்கையூர், வ.உ.சி. நகர் போன்ற திட்டப்பகுதிகள், தஞ்சாவூரில் ஏ.வி.பதி நகர் திட்டப்பகுதி, திருச்சியில் கோட்டக்கொல்லை திட்டப்பகுதி ஆகியவற்றில் உள்ள 6,746 அடுக்குமாடிக் குடியிருப்புகள், ரூ.1,146 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானமும், புதிய திட்டப்பகுதிகளில் கட்டுமானமும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்கவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 11.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆய்வுக் கூட்டத்தின் நிறைவில், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுவது தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, வீடுகட்டும் திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்டு வரும் வீடுகளின் நிலை குறித்தும் வினவினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், முழுமையான சேதம் மற்றும் பகுதியாகச் சேதமடைந்த வீடுகள் என்று இருவகைப்படுத்தியுள்ளதாகவும், அதில் 1,360 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்த வீடுகள் என்று கண்டறியப்பட்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும், தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்பு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அங்குத் தங்கியிருக்கும் அனைவரும் அப்புறப்படுத்தப்பட்டு வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல மிக்ஜாம் புயலால் தொழில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாவட்ட:த தொழில் மையம் மூலமாக கடனுதவி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், மகளிர் சுய உதவிக்குழுவினருக்கும் அவர்களின் கடனுதவி அளவினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து, **காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,** காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் தாலுகாவில் மிக்ஜாம் புயலால் பெரும்பாதிப்பு ஏற்பட்டது என்றும், காஞ்சிபுரம் தாலுகாவிலும் பயிர் சேதங்கள் ஏற்பட்டது என்று தெரிவித்தார். தகுதியுள்ள அனைவருக்கும் 100 சதவிகிதம் பயிர் இழப்பீடு வழங்கப்பட்டு விட்டதாகவும், அதுதவிர தற்காலிகமாகச் சரி செய்ய வேண்டியது, நிரந்தரமாகக் கட்டிக் கொடுக்கக் வேண்டியது என்று சேதமடைந்த வீடுகளை வகைப்படுத்தி அந்த வீடுகளை எல்லாம் கட்டும் பணி தொடங்கப்பட்டுவிட்டதாகவும், சில வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும், சான்றிதழ்களை இழந்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பாதிப்படைந்த வீடுகளைச் சீர்செய்திட

தேர்தலுக்கு முன்பே அனைவருக்கும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாகவும், வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு, நிறைய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ள வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். மேலும், பாதிப்பு அடைந்த மக்களுக்கு கடன்வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டதாகவும், பாதிப்படைந்த பகுதிகளில் குறிப்பாகப் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் எல்லாம் வழங்கிட சிறப்பு முகாம் நடத்தித் தேவையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 40 ஆயிரம் வீடுகள் கட்டும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்ததாவது

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கடலூர் மாவட்டத்தை:ப பொறுத்தவரை சுமார் 11,455 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டியுள்ளதுச் என்றும், அதில், 1,245 வீடுகள் இன்னும் தொடங்காத நிலையில் இருக்கிறது என்றும் தெரிவித்தார். கிராம அளவில் ஒரு அலுவலரை நியமித்துள்ளதாகவும், பஞ்சாயத்து செயலாளர், மேல்நிலைத் தொட்டி இயக்குபவர் (OHT Operator) ஆகியோருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அப்பணிகளைப் பார்வையிட வேண்டும் என்ற பொறுப்பு அளித்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், மண்டலத் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணிகளை முழுவதும் கண்காணிக்கிறார்கள். இவர்கள் பணிகுறித்த ஆய்வுக் கூட்டம் 2 வாரத்திற்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது என்றும் பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நாகப்பட்டினம், மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் சுமார் 6,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டியுள்ளது என்றும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். மேலும், வாரந்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுப் பணிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும், பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 33,000 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், கிராமப் பஞ்சாயத்து அளவில் நேரடியாகச் சென்று அப்பகுதிகளிலுள்ள கிராம பஞ்சாயத்துத் தலைவர்களை அழைத்துக் கூட்டம் நடத்தி அவர்களது தேவைகள் குறித்துக் கேட்டறிந்து அவற்றைச் சரிசெய்து, கொடுத்திருக்கிறோம். 5,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது என்றும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் நடைமுறைச் சிக்கல்கள் குறித்துக் கேட்டறிந்து அவற்றிற்கு தீர்வு காணப்பட்டு நிலுவையில் உள்ள வீடுகள் விரைந்து கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் நிறைவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வீட்டுவசதி இல்லாதவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டித்தருவது அரசின் தலையாய கடமையாகும் என்றும், இதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி இப்பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், மழைக்காலம் தொடங்கப் போகிறது, ஏரி, குளம், குட்டை, கண்மாய்களையெல்லாம் தூர்வாரி, குடிமராமத்துப் பணிகளை மேற்கொண்டு, மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போதே தொடங்க வேண்டும் என்றும், அந்தப் பணிகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற மாநாட்டிற்குப்பிறகு இன்று மீண்டும் சந்திக்கிறோம்.

தேர்தல் பணிகளை மிகச்சிறப்பாகக் கையாண்ட உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

மிகக் கடுமையான இந்தக் கோடை காலத்தில், குடிநீர் பிரச்சினை, மின்வெட்டு ஆகியவை ஏற்படாமல் கவனமாக கையாண்ட உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2021-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நாம் செயல்படுத்தியுள்ள திட்டங்கள் அனைத்தும் மக்களிடம் சென்று சேர்ந்து, திட்டங்களின்

பயன்கள் தேவையானவர்களுக்குச் சென்று சேர்ந்து கொண்டிருக்கிறது. இதனை மக்களுடன் உரையாடிய எனது நேரடி அனுபவங்களில் இருந்தே சொல்கிறேன்.

நமது அரசு கொண்டு வரும் திட்டங்களைக் கடைக்கோடி மனிதரிடமும் கொண்டு போய்ச் சேர்த்ததில் பெரும் பங்கு அரசு அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் இருக்கிறது. இதனைக் கண்காணித்த மாவட்ட ஆட்சியர்களான உங்களுக்கு என்னுடைய நன்றி!

அடுத்து வரப்போகும் நாட்களிலும் இன்னும்பல திட்டங்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம். புதுமைப்பெண் திட்டம் போல, மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதுபோன்ற திட்டம் தான் தமிழ்நாட்டின் இளைய சக்தி வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் திட்டங்கள்!

இதுபோன்ற திட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் தங்களது கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த இரண்டு ஆண்டுகள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மிக முக்கியமான ஆண்டுகள்! புதிய உத்வேகத்துடன் மக்கள் நலப்பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

ஒரு சிறந்த நல்லாட்சியை வழங்க -

* சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு;

* சிறந்த சமூகநலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்;

* கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்;

* பொதுமக்களுக்குத் தங்குதடையின்றி எளிதாக அரசு சேவைகள் கிடைப்பதை உறுதி செய்தல்;

ஆகிய நான்கு குறிக்கோள்களில் நாம் கவனம் செலுத்த வேண்டியது மிக மிக அவசியம்! இவைதான் நல்லாட்சியின் இலக்கணங்கள்! அத்தகைய நல்லாட்சியைத்தான் நாம் வழங்கி வருகிறோம்!

ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். புதிய புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டு இருக்கிறது.

இது நமது அரசு என்று மக்களை நினைக்க வைத்துள்ளோம். இவை அனைத்தும் தொய்வில்லாமல் வரும் ஆண்டுகளிலும் தொடர வேண்டும்.

அதற்கு அடிப்படையாக நீங்கள் முழுக்கவனம் செலுத்த வேண்டியவற்றை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு உண்டு.

- ✶ "மக்களுடன் முதலமைச்சர்" திட்டத்தினை வரும் ஜூலை திங்கள் 15ஆம் நாள் முதல் செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் வரை ஊரகப் பகுதிகளில் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- ✶ "உங்களைத் தேடி உங்கள் ஊரில்", "நீங்கள் நலமா?" போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்படவுள்ளது.
- ✶ வருவாய்த் துறையில், பட்டா மாறுதல், சான்றிதழ்களைப் பெறுவதில் பொதுமக்கள் அடையும் சிரமங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் இதில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
- ✶ "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்திற்கும்; இரண்டரை இலட்சம் தொகுப்பு வீடுகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கும் நீங்கள் தனிக்கவனம் செலுத்திப் பணிகளைத் துரிதமாக முடிக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.
- ✶ அனைத்துப் பள்ளிக் குழந்தைகளும் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் வகையில் "கல்லூரிக் கனவு" "உயர்வுக்குப் படி" போன்ற திட்டங்களை நீங்கள் ஆர்வத்துடனும், முனைப்புடனும் செயல்படுத்த வேண்டும்.
- ✶ அதேபோல், விரைவில் தொடங்கப்படவிருக்கும் "தமிழ்ப்புதல்வன்" திட்டமும் மிகவும் முக்கியமானத் திட்டமாகும். இதுபற்றி முதலிலேயே சொல்லி இருக்கிறேன்.
- ✶ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தையும் நீங்கள் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.
- ✶ 2024-2025ஆம் ஆண்டில் தங்கள் மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்

பணிகளை விரைவில் காலம் தாழ்த்தாமல் முடிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் ஏற்படும் இயற்கை இடர்ப்பாடுகளின் காரணமாக பணிகள் தாமதப்படக்கூடும். இதனைக் கருத்தில்கொண்டு கிடைத்துள்ள குறுகிய காலத்திற்குள் சரியாகத் திட்டமிட்டு மாவட்டங்களில் திட்டப் பணிகளை நல்ல தரத்துடன் விரைவாக முடிக்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான ஒரு கடமையும் உங்களுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டில் போதைப் பொருட்கள் நடமாட்டத்தைப் பெருமளவில் நாம் கட்டுப்படுத்தி இருக்கிறோம். ஆனால் அது போதாது! போதைப் பொருள் நடமாட்டம் என்பது சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை மட்டுமல்ல, சமூக ஒழுங்குப் பிரச்சினை! எனவே தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும். இதற்காகப் பெரும் இயக்கத்தை நாம் தொடங்க இருக்கிறோம்.

மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் நகராட்சித் துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து, போதைப் பொருட்கள் பயன்பாட்டை உங்கள் மாவட்டத்தில் முற்றிலுமாக ஒழிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

போதைப் பொருள் நடமாட்டம் இருக்கும் எனக் கண்டறியப்படும் பகுதிகளில் தனிக்கவனம் - தீவிரக் கவனம் செலுத்தியாக வேண்டும். “போதை பொருட்களின் நடமாட்டம் அறவே இல்லை, முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம்” என்ற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

இன்றைய கூட்டத்தில் பல்வேறு முக்கிய திட்டங்களைப் பற்றி, தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுரை வழங்கவுள்ளார்கள். தலைமைச் செயலாளர் வழங்கும் அறிவுரைகளின் அடிப்படையில், உங்கள் பணிகளைச் சிறப்பாக ஆற்றவும், மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டும்மென்றும் உங்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ■

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 98ஆவது பிறந்தநாள்

படமும்/செய்தியும்

சென்னை, தியாகராய நகரில், 24.06.2024 அன்று கவியரசு கண்ணதாசன் அவர்களின் 98ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், கவியரசு கண்ணதாசன் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ரூ.206 கோடி மதிப்பீட்டில் "முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார் - 12.06.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் 4,000 மெ.டன் பசுந்தாள் உர விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் குறைந்த வாடகையில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக டிராக்டர்கள், கொத்துக் கலப்பைகள், ரோட்டவேட்டர்களை வழங்கிடும் வகையிலும், கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர் இயக்குவதற்குப் பயிற்சி அளித்திடும் வகையிலும் டிராக்டர்களை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கைத்தாக்கல் செய்து, உழவர்களின் நலனைப் பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்து, வேளாண் பெருமக்களின் வருவாயினைப் பன்மடங்காக உயர்த்திட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கியது, விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கும் திட்டம், பயிர் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

பசுந்தாள் உர விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டம்"

வேளாண்மை – உழவர் நலத்துறையின் 2024–2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தற்போது வேளாண்மையில் ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதாலும், மண்ணிலிருந்து சத்துக்களை அதிகம் உறிஞ்சும் பயிர்களைச் சாகுபடி செய்வதாலும், மண்ணின் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இதுதவிர, உற்பத்தி அதிகரிப்பிற்கென அதிக அளவில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண்வளமும், நலமும் குன்றியுள்ளன. எனவே, மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளையும் ஊக்கப்படுத்திடவும் 2024–2025ஆம் ஆண்டில் ரூ.206 கோடியில், 22 இனங்களுடன் "முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டம்" என்ற புதிய;த திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், முதல் இனமாகப் பசுந்தாள் உரவிதை விநியோகம் அறிவிக்கப்பட்டுள்ளது. பசுந்தாள் உரப் பயிர்கள் மூலம் மண்வளம் பேணிக்காக்கப்பட்டு, மண்ணில் வாழும் நுண்ணுயிர்கள் பாதுகாக்கப்பட்டு, உயிர்ம முறையில் மண்ணின் சத்துக்கள் அதிகரிக்கப்படும். இதனால் வேளாண் விளைபொருட்களின் தரம் மேம்பட்டு, மக்களின் நலம் பேணிக்காக்கப்படும்.

மண்ணில் வளர்ந்து, மண்ணிலே மக்கி, மண்ணின் வளம் பெருக்குவது "பசுந்தாளுரப் பயிர்கள்". இதன் சாகுபடியை விவசாயிகளிடத்தில் ஊக்குவித்திட ஆயக்கட்டு, இறவைப் பாசனப் பகுதிகளில் முதற்கட்டமாக 2024–2025ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏக்கரில் ரூ.20 கோடி மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, விவசாயிகளுக்கு "பசுந்தாளுர விதைகளை" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர்க் காப்போம் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். இதன்மூலம் சுமார் 2 இலட்சத்திற்கும் மேலான விவசாயிகள் பயன்பெறுவர்.

குறைந்த வாடகையில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக டிராக்டர்கள், விவசாய கருவிகள் வழங்குதல்

வேளாண்மை – உழவர் நலத்துறையின் 2023–2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், வேளாண் இயந்திரங்களுக்குப் பெரிய அளவில் வரவேற்பு இருக்கும் காரணத்தால், அவற்றைக் கடைக்கோடியில் இருக்கும் சிற்றூருக்கும் எடுத்துச் செல்லும் பொறுப்பு அரசுக்கு இருப்பதால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, வட்டார அளவில் வேளாண் பணிகளைத் தங்குதடையின்றி மேற்கொள்ள உதவும்பொருட்டு, டிராக்டர்கள், ரோட்டவேட்டர்கள், எந்திரக் கலப்பைகள், கரும்பு அறுவடை இயந்திரங்கள், நெல் அறுவடை இயந்திரங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுத் தேவைப்படும் விவசாயிகளுக்குத் துறையின் இ-வாடகை செயலியின் மூலமாகக் குறைந்த வாடகைக்கு விடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ரூ.10.25 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட 90 டிராக்டர்கள், 180 கொத்துக் கலப்பைகள், 90 ரோட்டவேட்டர்கள் ஆகியவற்றினை அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த வாடகையில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டிராக்டர்களை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர் இயக்குவதற்குப் பயிற்சி வழங்குதல்

வேளாண்மை – உழவர் நலத்துறையின் 2023–2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்குத் திறன்வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கிட டிராக்டர், அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றை இயக்குவதற்கும், கையாள்வதற்கும் 500 ஊரக இளைஞர்களுக்கு வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருவாரூர், திருநெல்வேலி ஆகிய ஆறு இயந்திரப் பணிமனைகளில் ஒரு கோடி ரூபாய் செலவில் இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர் இயக்குவதற்குப் பயிற்சி அளிப்பதற்கான டிராக்டர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்தியாவிலேயே குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு...

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றிடுவோம்!
அவர்கள் வாழ்வில் கல்வி தீபம் ஏற்றிடுவோம்!

உலகெங்கும் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 12ஆம் நாள் "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புத் தினம்" கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கல்வி, ஆடல், பாடல், விளையாட்டு என்று வாழ்க்கையை மகிழ்வுடன் வாழ வேண்டிய குழந்தைப் பருவத்தில், சில குழந்தைகள் தொழிலாளர்களாக குறைந்த கூலிக்கு நீண்ட நேரம் உழைப்பது மிகவும் கொடுமையான செயலாகும். இது அவர்களது எதிர்காலத்திற்கும், ஆரோக்கியத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும், மனவளர்ச்சிக்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகும். நல்ல குடிமக்களாக உருவாக வேண்டிய குழந்தைகள் குழந்தைப் பருவத்திலேயே தொழிலாளர்களாக மாறுவதால் ஒரு நாடு தனது சமூக வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், அமைதி, சமூகத்தின் சமச்சீர் தன்மை மற்றும் ஆற்றல் மிக்க மனித வளத்தையும் இழக்க நேரிடுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
குழந்தைத் தொழிலாளர் முறை
எதிர்ப்புத் தினச் செய்தி - 11.06.2024

கல்விச் செல்வம் பெறவேண்டிய சமயத்தில், கடுமையான வேலைச் சுமைகளைச் சுமந்து நிற்கின்ற பிஞ்சு குழந்தைகளை, குழந்தைத் தொழிலாளர் முறை என்ற கொடுமையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும் அளித்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதே தமிழ்நாடு அரசின் அடிப்படை நோக்கமாகும்.

பெற்றோர்களுக்குப் போதிய வருமானம் இல்லாமையினாலும், குடும்ப சூழ்நிலைகளினாலும் குழந்தைத் தொழிலாளர்களாக மாறிய குழந்தைகளை மீட்டு, அவர்களுக்குத் தரமான கல்வி அளித்திடவும், பெற்றோர்களின்

சுமைகளை குறைத்திடவும், அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கட்டணமில்லாக் கல்வி, விலையில்லாப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பை, சீருடைகள், சத்தான காலை, மதிய உணவு, காலணிகள், இலவசப் பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது கண்டறியப்படும் சூழலில், அக்குழந்தைகளை உடனடியாக மீட்டெடுத்து சிறப்புப் பயிற்சி மையங்களில் சேர்த்துக் கல்வி அளித்துக் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

குழந்தைத் தொழிலாளர்கள் அற்ற சமுதாயத்தை உருவாக்கிட மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வுநிகழ்ச்சிகள்நடத்தப்பட்டுவருகின்றன. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவது தொடர்பான சட்டம், விதிமுறைகள் சீரிய முறையில் அமலாக்கம் செய்யப்படுகின்றன. சட்ட அமலாக்கம், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலுக்கான மாநிலச் செயல் திட்டம் (State Action Plan), நிலையான இயக்க நடைமுறைகள் (Standard Operating Procedures) ஆகியவற்றினையும் தீவிரமாகச் செயல்படுத்தி, தமிழ்நாட்டினை 2025ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் தொழிலாளர்கள் அற்ற மாநிலமாக மாற்றிட தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது. அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு கூட்டு முயற்சிகளால் மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை வெகுவாக குறைந்துள்ளது.

தற்போது, பொதுமக்களும் வேலை அளிப்போரும் இப்பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர்த்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர்களும் அரசு அலுவலர்களும் தங்களது மாவட்டங்களைக் குழந்தைத் தொழிலாளர்கள் அற்ற மாவட்டமாக அறிவிக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அரசின் இந்தச் சீரிய முயற்சிகளால் தமிழகமெங்கும் குழந்தைத் தொழிலாளர்களே இல்லை என்ற இலக்கினை 2025ஆம் ஆண்டிற்குள் அடைவோம் என்பது உறுதி.

எனவே, 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அனைத்து வகையான தொழில்களிலும், அபாயகரமான தொழில்களில் வளரிளம் பருவத்தினரையும் வேலைக்கு அனுப்பமாட்டோம் என அனைத்துப் பெற்றோர்களும், பணியில் அமர்த்த மாட்டோம் என வேலையளிப்பவர்களும் உறுதி பூண்டு, நம் நாட்டை வளமிக்கதொன்றாக மாற்றுவோம் என அனைவரும் சூளுரைப்போம். தமிழ்நாட்டைக் குழந்தைத் தொழிலாளர் முறை அற்ற மாநிலமாக மாற்றிடுவோம்!

குழந்தைத் தொழிலாளர் இல்லாத
எதிர்காலம் அதுவே தமிழ்நாட்டிற்குப் பொற்காலம்

படமும்/செய்தியும்

மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்கள் பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.06.2024 அன்று மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்களின் 94ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் டெல்டா குறுவைச் சாகுபடிச் சிறப்புத் தொகுப்புத் திட்டம் 2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிக்கை - 17.06.2024

வேளாண் உற்பத்தியைப் பெருக்கி உழவர் பெருமக்களின் நல்வாழ்வில் வளமை ஏற்படுத்திட பல முன்னோக்குத் திட்டங்களைச் கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், உழவர் பெருமக்களின் வருமானத்தை அதிகமாக ஈட்டவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தொலைநோக்குத் திட்டங்களை இவ்வரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது.

பருவ மழைகளால் நிரம்பப் பெறும் மேட்டூர் அணை நீர், தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகிய காவேரி டெல்டா மாவட்டங்களில் குறுவைப் பயிர்ச் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் நாள் திறந்து விடப்படுவது மரபு. எதிர்பாராத சூழ்நிலைகளால் பருவமழை காலந்தாழ்த்தி இருப்பதால் இந்த ஆண்டு 2024 மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாததால், டெல்டா சாகுபடிக்கு நீரை திறந்துவிட காலதாமதம் ஏற்பட்டு உள்ளது. இது மிகுந்த மனவேதனையைத் தந்தாலும் வேளாண்மை மக்களின் நலனை முன்னிறுத்தி, அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும் குறுவைச் சாகுபடியாளர்களின் எதிர்பார்ப்பைக் கருத்தில் கொண்டும் டெல்டா விவசாயிகளைக் காக்கும் விதமாக ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் குறுவை சாகுபடி தொகுப்பை உழவர் நலன் கருதிக் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது.

1,00,000 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு, 2,000 மெட்ரிக் டன் நெல் விதைகள் மானிய விலையில் ரூ.3.85 கோடி மதிப்பில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படும்.

நெற்பயிர் இயந்திர நடவு பின்னேற்பு மானியமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.4 ஆயிரம் வீதம், 1 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்குத் தமிழ்நாடு அரசு ரூ.40 கோடி நிதி வழங்கப்படும்.

நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுள்ள 7,500 ஏக்கர் பரப்பளவில், நெல் நுண்ணூட்டக் கலவை 50 சதவிகித மானியத்தில் விநியோகிக்க ரூ.15 இலட்சம் வழங்கப்படும். அதோடு, துத்தநாக சத்துக் குறைபாடு உள்ள இடங்களில், துத்தநாக சல்பேட் உரத்தைப் பயன்படுத்துவதற்கு, ஏக்கருக்குப் ரூ.250 வீதம், 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு, ரூ.62.50 இலட்சமும், 25 ஆயிரம் ஏக்கரில் ஜிப்சம் பயன்படுத்துவதற்காக ஏக்கருக்கு மானியமாக ரூ.250 வீதம் ரூ.62.50 இலட்சமும் வழங்கப்படும்.

பயறு வகைப் பயிர்களை 10,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடிச் செய்வதற்கு, 50 சதவிகித மானியத்தில் தரமான விதைகள், சூடோமோனாஸ், திரவ உயிர் உரங்கள் மற்றும் இலை வழி உரம் தெளிக்கவும், ரூ.1.20 கோடி நிதியும், பயறு

வகைப் பயிர்களில் மகசூல் திறனை அதிகரிக்க 50 சதவிகித மானியத்தில் 10,000 ஏக்கருக்கு நுண்ணூட்டச்சத்து வழங்கிட ரூ.20 இலட்சம் நிதியும் வழங்கப்படும்.

வேளாண்மை பொறியியல் துறை மூலம் விசை உழுவை, களையெடுக்கும் கருவி, விதை மற்றும் உரமிடும் கருவி, இயந்திரக் கலப்பை, சுழற் கலப்பை, சாகுபடிக் கலப்பை, பலதானியப் பிரித்தெடுக்கும் கருவி, ஆளில்லா வானூர்திக் கருவி, சூரிய சக்தியால் இயங்கும் பம்ப்செட் போன்ற 442 கருவிகள் வழங்கிட மானியமாக ரூ.7.52 கோடி நிதி வழங்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் டெல்டா மாவட்டங்களில் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் குறுவைச் சாகுபடித் தொகுப்புத்திட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் ரூ.24.50 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கிடவும் உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு, அரசு நிதியிலிருந்து, நிதி பெற்றும், பல்வேறுத் திட்டங்களை ஒருங்கிணைத்தும், ரூ.78.67 கோடி மதிப்பீட்டில், குறுவைச் சிறப்புப் தொகுப்புத் திட்டத்தினை இவ்வரசு செயல்படுத்தும்.

தெரிந்துகொள்வோம்

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் தொடர் நடவடிக்கைகள்

- குடும்ப அட்டைதாரர்கள் வசதிக்கென மே 2021 முதல் மே 2024 முடிய 727 முழு நேர, 1,330 பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் கூடுதலாக:த தேவைப்படும் இடங்களில் நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் ஏதேனும் சிரமம் ஏற்படின் அல்லது புகார் தெரிவிக்க விரும்பினால் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1800 425 5901, 1967 ஆகிய தொலைபேசி எண்களில் புகார்கள் தெரிவிக்கலாம் என்றும் இப்புகார்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் குறைகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு வருகிறது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி வரையறை செய்யப்பட்டுள்ள நேர்மறையற்ற வணிக முறை, தரமற்ற சேவைகள் தொடர்பான புகார்கள் மாவட்ட, மாநில அளவில் செயல்படும் நுகர்வோர் குறை தீர் ஆணையங்கள் முன்பாகச் சமர்ப்பிக்க நுகர்வோர்கள் முன்வர வேண்டும் அதன் மீது உரிய விசாரணை மேற்கொண்டு நுகர்வோர் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கே.எம்.எஸ். 2023-2024 கொள்முதல் பருவத்தில் 3,157 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 28.57 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 3,66,726 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 60 இடங்களில் 272 சேமிப்புக் கிடங்குகளுடன் 7.71 இலட்சம் மெ.டன் கொள்ளளவுடன் செயல்பட்டு வருகிறது.
- கடந்த 3 ஆண்டுகளில் புதுக்கோட்டை, திருமங்கலம், இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் தலா 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட 3 சேமிப்புக் கிடங்குகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- இந்நிறுவனம் 203 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளை (Negotiable Ware house Receipts) பல்வேறு சரக்கு வைப்பாளர்களுக்கு (Depositor) வழங்கியதன் மூலம், சரக்கு வைப்பாளர்கள் ரூ.45.36 கோடி கடன் வசதி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

"நான் முதல்வன்" திட்டத்தின் ஒரு சிறப்பு முத்திரை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான "நான் முதல்வன்" திட்டமானது. கடந்த 01.03.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது, இந்த மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டமானது ஈராண்டுகளைக் கடந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் இங்கிலாந்து சென்று திரும்பிய மாணவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்! - 17.06.2024

இத்திட்டத்தின் மூலம் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று, வேலை வாய்ப்புகளையும் பெற்று வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, நான் முதல்வன், பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இணைந்து நடத்திய S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளிலிருந்து மொத்தம் 1,267 விண்ணப்பங்கள் வந்த நிலையில், அவற்றிலிருந்து 100 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதலில் 24 மணி நேர ஆன்லைன் பயிற்சியில் பங்கேற்று, அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 மாணவர்களும், 14 மாணவியர்களும், ஜூன் 9 முதல் 16 வரை இங்கிலாந்தின் Durham பல்கலைக்கழகத்தில் தரவு அறிவியல் (Data Science), செயற்கை நுண்ணறிவு

(Artificial Intelligence) ஆகிய முன்னணித் துறைகளில் ஒருவாரகாலம் நேரடியாகப் பயிற்சி பெற்றனர்.

இத்திட்டம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான கல்லூரி மாணவர்களுக்குச் சர்வதேச அனுபவம், மேம்பட்ட திறன்களைப் பெறுவதற்கான அரிய வாய்ப்புகளைத் தந்துள்ளது.

இத்திட்டத்திற்காக, மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களின் பயணம், தங்குமிடம், பயிற்சி முதலிய செலவுகளை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பிரிட்டிஷ் கவுன்சில் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து ஏற்றுக்கொண்டுள்ளன.

S.C.O.U.T பயிற்சி பெற்றுத் தமிழ்நாடு திரும்பிய இந்த 25 மாணவர்களும், 17.06.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களையும், மாண்புமிகு இளைஞர் நலன், மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் நேரில் சந்தித்துத் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, அவர்களின் வாழ்த்துகளையும் பெற்றனர். இவர்களில் 20 மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். அவர்களில் சுஜாதா குப்புசாமி, கிருத்திகா துளசிமணி ஆகிய 2 மாணவிகள் "புதுமைப் பெண்" திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

ஜூலை: 07

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாள்

"சமூகப் புரட்சியாளர்"

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தென்னாப்பிரிக்கா சென்று நேட்டாலில் தங்கி, நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அங்கே காந்தியடிகளும் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த கால கட்டம் அது. அப்பொழுதுதான் அண்ணல் காந்தியடிகளுக்குத் தமிழில் கையெழுத்திடக் கற்றுக் கொடுத்தார். குறளின் அருமை பெருமைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தார் என்றெல்லாம் சரித்திரக் குறிப்புகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. 1921ஆம் ஆண்டு இந்தியா திரும்பி சமுதாய நலப்பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று அவர் முடிவு செய்து நீதிக் கட்சியில் சேர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

சென்னை மாகாண சட்டமன்றத்தில் 15 ஆண்டுகள் அவர் பணியாற்றியிருக்கிறார். அந்தப் பொறுப்பைத் தன்னுடைய சமுதாய மக்களின் நல்வாழ்வுக்கு எப்படியெல்லாம் செலவிட வேண்டுமோ அந்த அளவிற்கு அவர் செலவிட்டார். சம உரிமை எல்லா மக்களுக்கும் வேண்டும். தொட்டால் தீட்டு, தண்ணீர் எடுத்தால் தீட்டு என்ற அநியாயங்கள் எல்லாம் ஒழிய வேண்டும் என்ற வகையில் சட்டமன்றத்தில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1928ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் அவர் இலண்டன் வட்டமேஜை மாநாட்டிற்கு இரண்டு முறை சென்று அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு இந்திய மக்களுக்கும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் சம உரிமை பெற வேண்டும் என்பதற்காகவும் அயராது தொண்டினை ஆற்றியிருக்கிறார், குரல் கொடுத்திருக்கிறார். இவருக்கு ராவ் சாகிப், ராவ் பகதூர், திவான் பகதூர் என்ற பட்டங்கள் வழங்கப்பட்டு இறுதிவரை உறுதியோடு வாழ்ந்த பெருமகன் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. ●

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் 15.08.2000 அன்று இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டு ஆற்றிய உரையிலிருந்து...

கொந்தகை, வெம்பக்கோட்டை, கீழ்நமண்டி, பொற்பனைக்கோட்டை, திருமலாபுரம், சென்னானூர், கொங்கல்நகரம், மருங்கூர் ஆகிய எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 18.06.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை சார்பில் 2024ஆம் ஆண்டிற்கான அகழாய்வுப் பணிகளின் தொடக்கமாக சிவகங்கை மாவட்டம் – கீழடி, அதனைச் சுற்றியுள்ள பகுதியான கொந்தகை, விருதுநகர் மாவட்டம் – வெம்பக்கோட்டை, திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்நமண்டி, புதுக்கோட்டை மாவட்டம் – பொற்பனைக்கோட்டை, தென்காசி மாவட்டம் – திருமலாபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் – சென்னானூர், திருப்பூர் மாவட்டம் – கொங்கல்நகரம், கடலூர் மாவட்டம் – மருங்கூர் ஆகிய எட்டு இடங்களில் அகழாய்வுப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு 15 இலட்சம் ஆண்டுகள் மனிதகுல வரலாற்றுத் தொன்மைக் கொண்ட நிலப்பரப்பாகும். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வு முடிவுகள் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றில் புதிய வெளிச்சம் ஏற்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வு, தொல்லியலாளர்கள் இடையே மட்டுமன்றி உலகத் தமிழர்கள் இடையேயும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்ச் சமூகமானது, கி.மு. ஆறாம் நூற்றாண்டில் படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதைத் கரிமப் பகுப்பாய்வுகளின் முடிவுகள் வாயிலாக உறுதியாக நிலைநிறுத்தியுள்ளது. பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3,200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற நெல் உமியினைப் பகுப்பாய்வு செய்ததன் வாயிலாக உறுதி செய்ய முடிகிறது.

அதேபோன்று, கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறை அகழாய்வில் பெறப்பட்ட இரண்டு Accelerator Mass Spectrometry (AMS) காலக் கணிப்பு முடிவுகள் வாயிலாகத் தமிழ்நாட்டில் இரும்பு 4,200 ஆண்டுகளுக்கு முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்டது உறுதி செய்ய முடிகிறது.

அண்மைக்காலத் தொல்லியல் சாதனைகள் மூலம் நமது புகழ்பெற்ற, நீண்ட வரலாற்றில் காணும் பண்பாடு, கால வரிசை இடைவெளிகளை நிரப்புவதற்கு நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காகத் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல், வரலாற்றுக் காலம் வரையிலான தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு, தொழில்நுட்பம், விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் தற்போது 2024ஆம் ஆண்டில் கீழ்க்காணும் எட்டு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்ற ஆண்டில் எட்டு இடங்களில் அகழாய்வு செய்ததைப் போன்று இவ்வாண்டிலும் எட்டு இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது சிறப்பாகும்.

★ கீழடி, அதன் அருகிலுள்ள தொல்லியல் தளமான கொந்தகை, சிவகங்கை மாவட்டம் – பத்தாம் கட்டம்

★ வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் – மூன்றாம் கட்டம்

★ கீழ்நமண்டி, திருவண்ணாமலை மாவட்டம் – இரண்டாம் கட்டம்

★ பொற்பனைக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் – இரண்டாம் கட்டம்

★ திருமலாபுரம், தென்காசி மாவட்டம் - முதல் கட்டம்

★ சென்னானூர், கிருஷ்ணகிரி மாவட்டம் – முதல் கட்டம்

★ கொங்கல்நகரம், திருப்பூர் மாவட்டம் – முதல் கட்டம்

★ மருங்கூர், கடலூர் மாவட்டம் – முதல் கட்டம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் கடந்த 06.04.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அகழாய்வுப் பணிகளை தொடங்கி வைத்தார். அந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் விவரங்கள்:

கீழடி ஒன்பதாம் கட்ட அகழாய்வு விவரங்கள்

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் கீழடியில் அமைந்துள்ள பள்ளிச்சந்தைத் திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் 2014ஆம் ஆண்டு முதல் தொடர் அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன. சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வகழாய்வில் பதினான்கு குழிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தங்க அணிகலன், தந்தத்தினாலான பகடைகள், அழகிய

வேலைப்பாடுகளுடன் கூடிய சுடுமண்ணால் செய்யப்பட்ட விலங்கின உருவங்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட தக்களிகள், வட்டச் சில்லுகள், அஞ்சனக் கோல்கள், செப்புக் காசுகள், செப்பு ஊசி, இரும்பினால் செய்யப்பட்ட ஆணிகள் என 804 தொல்பொருட்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. மேலும், வெவ்வேறு நிலைகளிலிருந்து எலும்பு, கரி மாதிரிகள் அறிவியல் பகுப்பாய்விற்கு சேகரிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, அகழ்ந்தெடுக்கப்பட்ட நான்கு அகழாய்வுக் குழிகளில் சுமார் 35 செ.மீ. ஆழத்தில் களிமண், சுண்ணாம்புக் கலவைக் கொண்டு அமைக்கப்பட்ட தரைதளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தரைத்தளம் 3 முதல் 6 செ.மீ. தடிமனுடன் காணப்படுகிறது. மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில், தரைதளத்தின் கீழே, சுமார் இரண்டு அடி ஆழத்திற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கருப்பு-சிவப்பு, சிவப்பு பூச்சு, சிவப்பு நிறப் பானை ஓடுகள் குவியலாகக் கண்டறியப்பட்டுள்ளன. விரிவான அகழாய்வுகள் மூலம் முழுமையான பண்பாட்டு வளத்தினைக் வெளிக்கொண்டு வருவதற்கு அடுத்தக்கட்ட அகழாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கொந்தகை நான்காம் கட்ட அகழாய்வு விவரங்கள்

கொந்தகையில் மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வில் 10 x 10 மீ. என்ற அளவிலும் 4 x 4 மீ. என்ற அளவிலும் தோண்டப்பட்ட இரண்டு அகழாய்வுக் குழிகளில் 24 முதுமக்கள் தாழிகள் மூன்று நிலைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஈமத்தாழிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் மனித எலும்புக் கூடுகளுடன் 110 மேற்பட்ட கருப்பு-சிவப்பு, சிவப்பு பூச்சு பெற்ற மட்கலன்களும் 9 தொல்பொருட்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தொல்பொருட்களில் வேலைப்பாடுகளுடன் சூதுபவள மணிகள், இரும்பினால் செய்யப்பட்ட கத்திகள், உளி, வளையம், குறிப்பிடத்தக்கவையாகும். இவை தவிர ஈமத்தாழியிலிருந்து தந்தத்தினால் செய்யப்பட்ட வளையம் ஒன்று முதன்முறையாக கண்டறியப்பட்டுள்ளது.

வெம்பக்கோட்டை இரண்டாம் கட்ட அகழாய்வு

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டை 2021-2022ஆம் ஆண்டு வெம்பக்கோட்டையில் அகழாய்வு தொடங்கப்பட்டது. இத்தொல்லியல் மேடு உள்ளூர் மக்களால் மேட்டுக்காடு அல்லது உச்சிமேடு என்று அழைக்கப்படுகிறது. வெம்பக்கோட்டை வாழ்விட மேட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் இம்மேடானது வரலாற்றுக் கால முதல் -இடைக்கால வரையிலான தொடர்ச்சியான எச்சங்களை வெளிப்படுத்துகிறது. இங்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டு கட்ட அகழ்வாராய்ச்சியில் மொத்தம் 34 அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும் 7,800க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

நுண்கற்காலக் கருவிகள், கண்ணாடி மணிகள், சுடுமண்ணாலான காதணிகள், உருவங்கள், தக்களிகள், மணிகள், சங்காலான வளையல்கள், மோதிரங்கள், வட்டச்சில்லுகள், இரும்பு உருக்குக் கழிவுகள், பல பொருட்கள் கிடைத்துள்ளன. மேலும் முழுமை பெறாத சங்குவளையல்கள் மிக அதிகமாக இந்தத் தொல்லியல் மேட்டில் கிடைக்கின்றன. மேலும், 100க்கும் மேற்பட்ட இரும்புப் பொருட்களும்,

40க்கும் மேற்பட்ட செப்புப் பொருட்களும் கிடைத்துள்ளன. இவ்விடத்தில் பல வரலாற்றுச் சான்றுகளைக் கண்டெடுத்திட அடுத்தக்கட்ட அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கீழ்நமண்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுப் பணிகளின் விவரங்கள்

கீழ்நமண்டி கிராமம், திருவண்ணாமலை மாவட்டத்தில், வந்தவாசி வட்டத்தில் அமைந்துள்ளது. சுமார் 55 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்த இடத்தில் 200க்கும் மேற்பட்ட பெருங்கற்காலக் கல் வட்டங்கள் உள்ளன. சில சேதமடைந்த கல் வட்டங்களுக்குள் ஈமப்பேழையின் எச்சங்கள் காணப்படுகின்றன.

சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் இங்குப் புதைவிடம் மற்றும் வாழ்விட பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. புதைவிடப் பகுதியில் 12 அகழாய்வுக் குழிகளும், வாழ்விடப் பகுதியில் 10 அகழாய்வுக் குழிகளும் தோண்டப்பட்டன. புதைவிடப் பகுதியில் மொத்தம் 21 ஈமப்பேழைகள் கண்டறியப்பட்டன அவற்றில் 6 ஈமப்பேழைகள் மட்டுமே முழுமையான நிலையில் உள்ளன, மற்றவை உடைந்தநிலையில் காணப்படுகின்றன.

புதைவிடப் பகுதியில் 30க்கும் மேற்பட்ட கீறல் குறியீட்டுப் பானை ஓடுகள், 43 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வாழ்விடப் பகுதியில் 45 கீறல் குறியீட்டுப் பானை ஓடுகள், 46 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புதைவிடப் பகுதியில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் ஒரு சிறிய குன்றின் மேல் 30க்கும் மேற்பட்ட கற்கோடாரி பட்டைதீட்டும் பள்ளங்கள் காணப்படுகின்றன.

தற்போது, இவ்விடத்தின் பல்வேறு பண்பாட்டுக் காலவரிசையைப் புரிந்து கொள்ளுதல், புதிய கற்காலத்திலிருந்து இரும்புக் காலக் கட்டத்திற்கு மாறிய பண்பாட்டு மாற்றத்தைப் புரிந்து கொள்ளுதல், இரும்பு உருக்கும் தொழில்நுட்பம், இரும்புக் கால மக்களின் ஈம பழக்க நடைமுறைகளை மதிப்பிடுதல், பெருங்கற்கால இடங்களைச் சரியான தொல்லியல் சூழலில் அடிப்படையில் அடையாளம் காணுதல் இந்த அகழாய்வின் நோக்கமாகும்.

பொற்பனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுப் பணிகளின் விவரங்கள்

பொற்பனைக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டத்தில் மணிமங்கலம், ஆலங்குடி இடையே அமைந்துள்ளது. செங்கல்லின் அளவு, நினைவுக் கல், கருப்பு-சிவப்பு பானை ஓடுகள், குறியீட்டு அடையாளங்கள், பிராமி பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் வாயிலாக இந்த இடம் சங்க காலத் தொல்லியல் தளமாக அறியப்படுகிறது.

சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் வட்ட வடிவ சுட்டச் செங்கற் கட்டுமானமானது சுமார் 38 செ.மீ. ஆழத்தில் கண்டறியப்பட்டது. வடமேற்குப் பகுதியில் தொடங்கி தென்கிழக்குப் பகுதிவரை நீண்டு, மூன்று அடுக்கினைக் கொண்டுள்ளது. இதன் விட்டம் 230 செ.மீ. ஆகும். இதன் தொடர்ச்சியாக, வடகிழக்குப் பகுதியில் 57 செ.மீ. ஆழத்தில் வாய்க்கால் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 255 செ.மீ. ஆகும். மேலும், வட்டச் சில்லுகள், கெண்டிமூக்குகள், கண்ணாடி வளையல்கள், கண்ணாடி மணிகள், சுடுமண் விளக்கு, தக்களிகள், காசு, சூதுபவளமணிகள், மெருகேற்றும் கற்கள், எலும்பு முனைக் கருவிகள், ஆறு இதழ் கொண்ட தங்க மூக்குத்தி / தோடு என 533 தொல்பொருட்களும், கீறல் குறியீடுகளும், தமிழி (தமிழ் பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்கல ஓடு ஆகியவை கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில், ஏராளமான இரும்புக் கசடுகள், சுடுமண் குழாய்கள், உலைகள் கிடைப்பது தொடக்க வரலாற்றுக் காலங்களிலும் இடைக்காலத்திலும் இரும்புத் தொழில் முழு வீச்சில் இருந்தது என்பதைக் குறிக்கிறது. இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவது இந்த அகழாய்வின் நோக்கமாகும்.

திருமலாபுரத்தில் முதல் கட்ட அகழ்வாய்வுப் பணி தொடக்கம்

தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், வாசுதேவநல்லூர் திருமலாபுரம் கிராமத்தில் குலசேகரப்பேரிக் கண்மாயின் அருகில் சாலை அமைப்பதற்காக மண் எடுக்கும்பொழுது ஏறக்குறைய நான்கு அடி ஆழத்தில் தொல்லியல் எச்சங்கள் வெளிக்கொணரப்பட்டன.

இத்தொல்லியல் மேடானது சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்புதைவிடப் பகுதியில் கற்பதுக்கை, முதுமக்கள் தாழி வகை ஈமச்சின்னங்கள் அமைந்துள்ளது. இப்பகுதியில் வெண்மை நிறத்தினால் அலங்கரிக்கப்பட்ட கிண்ணங்கள், மூடிகளும், மெருகூட்டப்பட்ட சிவப்பு பானை ஓடுகள், ஈமத்தாழிகள், செம்பினாலானக் கிண்ணம், இரும்பினாலானப் பொருட்கள் (ஈட்டி, வாள், குறுவாள், வில் கத்தி) ஆகியவை முக்கிய தொல்பொருட்களாகும்.

மேற்கண்ட விவரங்களின்படி, இத்தளத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளுதல், இத்தளத்தில் உள்ள பெருங்கற்கால புதைவிடத்தின் எல்லையைக் கண்டறிதல், இரும்புக் கால வாழ்விடப் பகுதியைக் கண்டறிதல். வாழ்விடப் பகுதியின் தன்மை, பெருங்கற்காலப் புதைவிடத்தைப் பற்றிய கூடுதல் சான்றுகளை வெளிக்கொண்டு வருதல், இரும்புக்கால மக்களின் ஈமச்சடங்கைப் பற்றி அறிந்து கொள்ளுதல், இப்பகுதியின் வாழ்வியல், கலை, கலாச்சாரம், மட்பாண்டங்கள், குடியேற்றமுறைப் பற்றி மேலும் அறிதல், இரும்பு காலம், தொடக்க வரலாற்றுக் காலங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கண்டறிதல் போன்ற முக்கிய நோக்கங்களுடன் அகழாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னானூரில் முதல் கட்ட அகழ்வாய்வுப் பணி தொடக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கிராமமான சென்னானூர் அமைந்துள்ளது. சென்னானூர் குட்டை என்னும் மலையின் மேற்குப் பக்க அடிவாரத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் தொல்லியல் மேடானது காணப்படுகின்றது. இத்தொல்லியல் மேடானது சுமார் 2.5 மீ அளவுக்கு தொல்லியல் எச்சங்களைத் தாங்கி நிற்கிறது. இத்தொல்லியல் மேட்டில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் கருப்புச் சிவப்புப் பானை ஓடுகள், கருப்பு வண்ணப் பானை ஓடுகள், சிவப்பு வண்ண பூச்சு பானை ஓடுகள், சொர சொரப்பான சிவப்பு வண்ண பானை ஓடுகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவை தவிர நுண்கருவிக் காலத்தினைச் சார்ந்த கருவிகள், புதியச் கற்காலத்தினைச் சார்ந்த கற்கருவிகள், வட்ட சில்லுகள், சுடுமண் விளக்கு, தக்களி போன்றவை இத்தொல்லியல் மேட்டில் கண்டெடுக்கப்பட்டன. இவை தவிர இப்பகுதியில் உழவுத் தொழிலின் சங்ககாலச் செங்கற்கல் பல கிடைத்துள்ளன இவை தவிர தொல்லியல் மேட்டின் அருகில் உள்ள மலையில் மூன்று குகைகளில் பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை வெண்மை நிறத்தில் தீட்டப்பட்டுள்ளது.

திருமலாபுரம்

சென்னானூர்

கிடைக்கப்பெற்ற சான்றுகளின் அடிப்படையில் சென்னானூரில் அகழாய்வு மேற்கொண்டால் புதிய கற்காலம், நுண்கற்கால மக்களின் பண்பாட்டினை அறியலாம். மேலும், இப்பகுதியில் மனிதர்கள் எந்தக் காலக் கட்டத்தில் இருந்து தொடர்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதனை அறிய முடியும். சென்னானூரில் மேற்கொள்ளப்படும் அகழாய்வின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வரலாறு முழுமையாக அறியமுடியும்.

கொங்கல்நகரத்தில் முதல் கட்ட அகழ்வாய்வுப் பணி தொடக்கம்

கொங்கல்நகரம் கிராமம், உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தற்போதைய கொங்கல்நகரம் கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் தொல்லியல் மேடு அமைந்துள்ளது. மேலும், பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கல்வட்டம், கற்திட்டைக் கொங்கல்நகரம் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ளப் பகுதியிலும் அமைந்துள்ளது. இப்பகுதி பல்வேறு இரும்புக் காலத் தளங்கள், பாறை ஓவியங்கள், எண்ணற்ற இரும்புக் காலம், தொடக்க வரலாற்றுப் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இங்குள்ள வாழ்விடத் தொல்லியல் மேடு 20 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது, தற்போதைய தரை மட்டத்திலிருந்து 2 மீட்டருக்கு மேல் உயர்ந்து காணப்படுகின்றது. புதைவிடப் பகுதியில் கல்வட்டங்கள், பரல் உயர் பதுக்கை, கூராக்கப்பட்ட கற்பதுக்கை, முதுமக்கள் தாழிகள் ஆகியன காணப்படுகின்றன. ஒரு பரல் உயர் பதுக்கையின் விளிம்பில் குத்துக்கல் ஒன்றும் அமைந்துள்ளது. குறியீடுகள், தமிழி (தமிழ் பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் தவிர, பானை வனைப்பான், காதணி, சேர நாணயம் போன்ற பிற முக்கிய தொல்பொருட்களும் இவ்விடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

பரந்த தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் அதன் ஆரம்ப கவனத்தைக் கோருகிறது. இப்பகுதியில் குறியீடுகள், தமிழியின் தோற்றத்தைக் கண்டறியவும், அதன் மண் அடுக்கு, கால வரிசையை ஆய்வு செய்யவும், இது மிகவும் சாத்தியமான தளமாகும்.

மருங்கூரில் முதல் கட்ட அகழ்வாய்வுப் பணி தொடக்கம்

மருங்கூர் கடலூரிலிருந்து மேற்கே 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமாகும். மருங்கூர் கிராமத்திலிருந்து கீழக்கொல்லை செல்லும் சாலையின் வடக்குப் பகுதியில், குளத்தின் கிழக்குப் பகுதியில், சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொல்லியல் மேடு உள்ளது.

வெளிர் சாம்பல் நிற ரவுலட் மட்பாண்டங்கள், கருப்பு, சிவப்புப் பானை ஓடுகள் மேட்டின் மையத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன. மேட்டின் மேற்குப் பகுதியில் செங்கல் கட்டுமானப் பகுதி உருவாகியுள்ளது. இந்தக் கட்டுமானத்திற்கு 7 x 21 x 42 செ.மீ அளவுள்ள செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. செங்கல் கட்டுமானம் வெளிப்படும் பகுதிக்கு அருகில் குளத்தின் கரையில் ஏராளமான கருப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன.

இவ்வகழாய்வுத் திட்டத்தின் நோக்கம், தொல்லியல் ரீதியான இடங்களை உருவாக்குதல்,

குடியேற்றத் திட்டங்கள், தொல்லியல் தன்மை என்பவற்றை வெளிப்படுத்துவதாகும். மேலும், இரும்புக் காலப் பண்பாட்டின் மையத்தைக் கண்டறிவதும், இப்பகுதியின் ஆரம்பக்கால வரலாற்றுக் காலம் தொடர்பான சான்றுகளை பகுப்பாய்வு செய்வதும் ஆகும்.

பெரும்பாலை அகழாய்வு அறிக்கை, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXVIII ஆகிய இரண்டு நூல்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் 2022-2023ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம், பெரும்பாலை என்னும் தளங்களில் மேற்கொண்ட அகழாய்வின் அறிக்கை, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 138 கல்வெட்டுகளின் விளக்க உரைகள் அடங்கிய தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXVIII ஆகிய இரண்டு நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

பத்மஸ்ரீ விருது பெற்ற செல்வி ஜோஷ்னா சின்னப்பா அவர்களுக்கு வாழ்த்து

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 18.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில், ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் துணை இயக்குநருமான (விளையாட்டு) செல்வி ஜோஷ்னா சின்னப்பா அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது பெற்றதற்காகச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டில் நடைபெற்ற 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற திரு.டி.மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருநிறுவனங்கள், தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்றுத் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பாராலிம்பிக் தடகளப் போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற திரு. டி.மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல்

கடந்த மே மாதம் 17 முதல் 25 வரை ஜப்பான் நாட்டின் கோபில் (KOBE) நடைபெற்ற 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்த தமிழ்நாட்டு வீரர் திரு. டி.மாரியப்பன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை உயரிய ஊக்கத் தொகையாக வழங்கி வாழ்த்தினார்கள்.

2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற திரு. டி.மாரியப்பன் அவர்களுக்கு ரூ.75 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கி வாழ்த்தினார் - 11.06.2024

முன்னதாக, திரு.டி. மாரியப்பன் அவர்களுக்கு 2019ஆம் ஆண்டு ஐக்கிய அரேபிய எமிரேட்ஸ் நாட்டின் துபாயில் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 2020ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டின் டோக்கியோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக 2 கோடி ரூபாய்க்கான காசோலை, 2023ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற International Wheelchair and Amputee Sports Federation போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதற்காக 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை உயரிய ஊக்கத் தொகையாகத் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவிட

போக்சோ இணைய முகப்பு

குழந்தைகள் நலனில் எப்போதுமே, அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாகப் பெண் குழந்தைகள் மாநிலத்தில் பாதுகாப்பாக வளர்ந்து, ஆற்றல் பெற்றுத் தன்னிறைவு அடைய, பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போக்சோ சட்டத்தினை அமல்படுத்துதல் தொடர்பாக நடந்த ஆய்வுக் கூட்டத்தில் போக்சோவுக்கெனத் தனி இணையதளம் உருவாக்கப்படவேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் துவக்கி வைத்தார் – 18.06.2024

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.06.2024 அன்று சென்னை முகாம் அலுவலகத்தில், போக்சோ இணையதளம் https://www.

pocsoportal.tn.gov.in தனி நபர் பராமரிப்புத் திட்டச் செயலியையும் (Individual Care Plan Application) குழந்தைச் பராமரிப்பு இல்லங்களை ஆய்வு செய்வதற்கான செயலியையும் (Inspection and Monitoring Application), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசிச் செயலியையும் துவக்கி வைத்தார்கள்.

போக்சோ இணைய முகப்பு (POCSO PORTAL)

போக்சோ இணையதள முகப்பு (POCSO PORTAL) மூலம், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான வழக்குகளைப் காவல் துறை, போக்சோ நீதிமன்றம் / மகளிர் நீதிமன்றம் மற்றும் குழந்தைகள் நலன், சிறப்புச் சேவைகள் துறை ஆகிய துறைகள், விவரங்களை உடனுக்குடன் பதிவு செய்யவும், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வழக்குகள் காவல்துறையால் பதிவு செய்யப்படுவது முதல், நீதிமன்ற இறுதி தீர்ப்பு வரையும், ஒவ்வொரு நடவடிக்கையையும் அத்துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கண்காணித்து வழக்கினை விரைவுபடுத்த இயலும்.

மேலும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டுத் தொகையினைத் தாமதமின்றி, எவரையும் அணுகாமல், இணையதளம் மூலமாக நேரடியாக அவர்களின் வங்கி கணக்கிற்கு செலுத்தவும், துறை சார்ந்த உயர் அலுவலர்களால் வழக்குத் துரிதமாகத் தீர்வு செய்வதை கண்காணிப்பதற்கும் இவ்விணைய தளம் பயனுள்ளதாக அமையும். குழந்தை தொடர்பான விவரங்கள் எவருக்கும் தெரியாத வண்ணம் இவ்விணைய தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனி நபர் பராமரிப்புத் திட்டச் செயலி (Individual Care Plan Application)

தற்போதுள்ள நடைமுறையின்படி தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கான தனி நபர் பராமரிப்புத் திட்டம் (Individual Care Plan) மூலம், ஒவ்வொரு குழந்தையும் குழந்தைகள் இல்லங்களில் சேர்ப்பதிலிருந்து, அவர்களின் ஆரோக்கியம், மனநலன், கல்வி முன்னேற்றம் போன்ற குழந்தைகள் தொடர்பான அனைத்து முக்கிய விவரங்கள் தனி நபர் கோப்புகளில் பராமரிக்கப்படுகின்றன. இதனைத் தவிர்த்து, நிகழ்நேரக் கண்காணிப்பு (Real time monitoring) செய்வதற்கு ஏதுவாக தொழிற்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, அனைத்துக் குழந்தைகளின் பல்வேறு குறியீடுகளைத் தொடர்ந்து கண்காணிக்க (continuous monitoring) இச்செயலி பயனுள்ளதாக அமையும்.

ஆய்வு, கண்காணிப்புச் செயலி (Inspection and Monitoring application)

குழந்தைகள் நலனை உறுதிபடுத்த தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களையும் ஆய்வு செய்வது அத்தியாவசியமாகும். அது சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிபடுத்த ஆய்வு செய்யும் அலுவலர்களின் ஆய்வு நேரம், இடம், நிறுவன விவரங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரவுகளும் உடனுக்குடன் பெறுமாறு ஆய்வு கண்காணிப்பு செயலி (Inspection and Monitoring application) வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி புவியியல் குறியிடல் (Geographical tagging) வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி:ச செயலி

தமிழ்நாட்டின் கிராமங்கள், நகர்ப்புரங்களில் வாழும் ஏழை, எளிய கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், பேரிளம்பெண்கள் தங்களுக்குத் தேவையான உதவிகளை அரசிடமிருந்து எளியமுறையில் பெற, அவர்களுக்கு அருகில் உள்ள இ-சேவை மையங்களில், www.tnwidowwelfareboard.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களின் விவரங்களை பதிவு செய்து, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினராகலாம். இந்த வலைபயன்பாட்டின் (Web Application) வாயிலாக அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளான சமூக நலத் துறையின் திட்டங்கள், ஓய்வூதியம், தற்காலிகத் தங்கும் இடம், திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் சுய தொழில் செய்ய மானியம் போன்ற உதவிகளைத் தேவைகளை விரைந்து பெற்றிட, இவ்வாரியத்தின் மூலம் தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

சிறுகதை

வெள்ளை வெய்யில்

– ம. காமுத்துரை

"மா . . ."

தெருவில் ஒரு கண்ணும், வீட்டுக்குள் இன்னொரு கண்ணுமாய் வாசலில் நின்றபடி நழுவிய டவுசரை ஏத்திக் கொண்டு, கொஞ்சுகிற பாவனையில் குரல் கொடுத்தான் அசோகன்.

காலைப் பனியினைத் துளைத்துக் கொண்டு கிழக்கில் வெள்ளை வெய்யில் பொழியத் துவங்கியிருந்தது. வாசல் தெளித்த ஈரமெல்லாம் உலர்ந்து அம்மா போட்ட ஒம்பது புள்ளி பிறை நிலாக் கோலம் கரும்பலகை ஓவியமாய் மனசைக் கவர்ந்தது. கோலப்பொடியில் சீனிக்கல்லின் துகள்கள் வெய்யிலில் மின்னின.

"என்னாடா ? பல்லத் தீத்தி முடிச்சிட்டியா ?"

கேட்ட தேவி, இரும்பு அடுப்பில் சோறாக்கிக் கொண்டிருந்தாள். விறகு என்றால் தீ, தீபமாய் சீராய் எரியும். 'செரட்டைச் சனியன் புஸ்வாணமாய்ச் சீற்றத்துடன் எரிந்து பொசுக்கென அமந்து போகிறது. ஓசியாய்க் குடுத்த சிலிண்டரும் அடுப்பும் மூலையைக் காத்துக் கிடந்தன. புது சிலிண்டர் ஆயிரத்துக்கு மேல் விலை ஏறிப் போனது. தினக்கந்து முடியணும். புதுக்கந்து வாங்கித்தான் சிலிண்டர் பதியணும். அதுவரை பரக்கத் மாமி தரும் தேங்காய்ச் சிரட்டைகளும், காய்ந்த முள் செடிகளும் மானத்தைக் காக்கின்றன.

வாய் கொப்பளிப்பதற்காகக் கையில் பிளாஸ்டிக் குவளையை வைத்திருந்தான் அசோகன்.

ஒருவாய்த் தண்ணீரைக் கொப்பளித்துத் துப்பியபோதுதான் எதிர்ச் சந்தின் முனையில் வளர்ந்திருந்த வாதாம் மரத்தடியில் குத்துக்காலிட்டு ஒரு கிழவியைப்போல உட்கார்ந்து இருந்தது அந்தப் பூனைக்குட்டி காதுகள் இரண்டும் நிமிர்ந்து நிற்க, கண்கள் ஆந்தை மாதிரி இமை திறந்திருக்க, வாலை அப்படியும் இப்படியுமாய்ப் புரட்டிப் போட்டபடி. அசோகனைக் கண்ணுக்குக்

கண் பார்த்தது. அம்மாவின் கைப்பிடியளவுதான் இருக்கும். சாம்பல் நிறம் கொண்டிருந்தது. முகத்தில் ஏக்கமும் உடம்பில் பசியின் வாட்டமும் தெரிந்தன.

"குட்டிப் பூன, இன்னம் இங்கியே நின்னுக்கிருக்கும்மா!"

பூனைகள் ஆளரவம் கண்டதும் வெருக்கென்ற உலுக்கலுடன் நழுவி ஓடும். இது அச்சுப் பிசகாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறது!

"ஒன்னு இல்லடா, நாலு குட்டி போட்ருக்கு. வேணும்னா வேலைக்குப் போம்போது தொணைக்கி கூட்டிக்கிட்டுப் போ" தேவி அலட்சியமாய்ச் சொல்லிவிட்டுச் சோற்றை வடிக்க பாத்திரத்தைத் தேடினாள்.

"வடி குண்டான எங்கடி அங்காயி"

கொல்லையில் உட்கார்ந்து அவசரமாய்ப் பாவாடையைத் தாவணியைச் சோப்புப்போட்டு அலசிக் கொண்டிருந்த அங்காளஈஸ்வரி எனும் பெயரிட்ட மூத்தமகளை கூப்பாடு போட்டு அழைத்தாள்.

"இந்தா அலசிட்டேம்மா, ஒர் நும்சம்" குண்டானில் தண்ணீர் நிரப்பி மளமளவேன அலசியவள், பிழிந்து படார் படாரென உதறினாள். நன்றாக வெய்யில் படுமிடத்தில் காயப்போட்டால் சாப்பிட்டு வருவதற்குள் தாவணி காய்ந்து விடும். பாவாடை பழசே போதும் தாவணி மட்டும் பளிச்சென இருந்தால் நல்லது. அடுப்பில் அம்மாவுக்குக் குண்டானைத் தந்துவிட்டு பாவாடையை கொல்லைப் பக்கமிருந்த கொடியில் காயப் போட்டவள். தாவணியை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். வாதாம் மரத்தில் வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. குடை போலிருந்த கிளைகள் மேல் தாவணியை விசிறிவிட எத்தனித்தவள் காலடியில் ஓடிய பூனைக்குட்டியைப் பார்த்து பயந்து போனாள்.

"அய்யோம்மா"

அவளது அந்தத் திடுக்கிடல் கண்டு ஒண்ணாம் வகுப்புப் படிக்கும் சின்னவன் சேது, கைகொட்டிச் சிரித்தான்.

"என்னாச்சு ரீ?" - தேவி

"அக்கா பூனக்குட்டிய மிதிச்சுப்புடுச்சு" சேதுவுக்கு சிப்பாணியை அடக்க முடியவில்லை.

"அடத் தரித்திரியமே! பூனப்பாவம் பொல்லாது டீ! செத்துக்கித்துப் போப்போது" கேட்டபடி, குண்டானில் சோத்துச் சட்டியைக் கவிழ்த்து வடிய விட்டாள்.

"அச்சச்சோ செத்துப் போச்சா?" பதட்டத்துடன் கழுவிய முகத்தைத் துடைத்தும் துடைக்காமலும் மறுபடி வெளியில் வந்தான் அசோகன்.

"யே எரும மாடே, இதென்னா நீ வளக்குறயாக்கும். ஒழுக்கமா அங்கிட்டுப் பத்திவிடு. கால்குள்ள கைக்குள்ள வந்துக்கிருக்கு" பூனைக் குட்டியைத் தாண்டிய பதட்டம் இன்னும் மாறவில்லை அங்காயிக்கு. வாதாம் மரக்கிளையில் படரவிட்ட தாவணியின் சுருக்கங்களை எடுத்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

பாட்டில் கம்பெனிக்கு வேலைக்கு அழைத்துப் போகும் டெம்போ காலை எட்டே கால் மணிக்கெல்லாம் கீரக்கல் மார்க்கட்டுக்கு முன்னால் வந்து நின்றுவிடும். சீக்கிரமாய்ப் போகாவிட்டால் வண்டியில் உட்கார இடம் கிடைக்காது. எட்டாம் வகுப்பை முத்தையா பள்ளியில் முடித்ததும் முழுப்பரீட்சை லீவில் நாகேஸ்வரி அத்தை, அங்காயியை பாட்டில் கம்பெனி வேலைக்கு அழைத்துப் போனார்.

பழைய இரும்புக் கடைகளிலிருந்து மூட்டை கட்டி வரும். கண்ணாடி பாட்டில்களை சோப்பு நீரில் அலசி, பிரஷ் வைத்து சுத்தம் செய்து தரம் பிரித்து அடுக்க வேண்டும். நாள்முழுக்க. தண்ணீருக்குள்ளேயே புழங்க வேண்டும், பாட்டிலின் நாத்தம் விதவிதமாய் நாறிக் குமட்டும். சாப்பிட ஒப்பாது. லீவு முடிந்து பள்ளிக்கூடம் சேரும் நாளில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெருவாரியான சண்டை வந்தது. அப்பா, அம்மாவின் மண்டையை உடைக்க, அம்மா நெற்றியில் வழிந்த ரத்தவெறிச்சியுடன் அறுவாமனையை எடுத்து விரட்டியதில் ஓடிப்போன அப்பா, இன்னவரை வீடு திரும்பவே இல்லை. இப்போ திருப்பூரில் குடியிருப்பதாய்த் தகவல்.

சோற்று நீர்க் குண்டானில் வடிந்து கொண்டிருக்க, ரசத்துக்கு தக்காளி வாங்க. காசை எடுத்துக்கொண்டு கடைக்குக் கிளம்பிய தேவி, வாசலில் பிள்ளைகளது கும்மர்ச்சம் பார்த்து அதட்டல் போட்டாள்.

"அவெயவனுக்கு வேலைக்குப் போகணும்ன எண்ணங், கவல, இல்லியா? காத்தால வெளாண்டுக்கிருக்கீக!ம்?"

"ம்மா, அங்க பாருமா, பாவத்த. அதுக்கு எதுனாச்சும் துன்னக் குடும்மா" அசோகன் கை

நீட்டிய திக்கில் வெறுந்தரையில் வெய்யில் காய்வது போல கால்களை நீட்டி மல்லாக்கப் படுத்துக் கிடந்தது குட்டிப்பூனை.

"ம்? வீட்ல இருக்க குட்டிகளுக்கே திங்க எதுமில்லாமத்தான பொண்டு பொடுசுக அத்தனியும் கஞ்சிச்சட்டியத்தூக்கிட்டுவேலைக்கிக்கெளம்பறம். நெனவில்லியா?" பதில் வார்த்தைக்கு நில்லாமல் பலசரக்குக் கடைக்கு ஓடினாள்.ரசம் வைத்து விட்டு, தானும் வேலைக்குப் புறப்படவேணும்.

"பூனக்குட்டி செத்துப் பூச்சா ண்ணே!" அசோகனின் கையைப் பிடித்துக் கொண்டு எட்டிப் பார்த்த சேது,பரிசோதிக்க,டவுசர் சேப்பிற்குள்ளிருந்து ஒரு கல்லை எடுத்து எறிந்தான். பூனைக்குட்டியும் அசோகனும் ஒரு சேர திடுக்கிட்டார்கள். சிணுங்கிய குரலில் குட்டி தட்டுத்தடுமாறி எழுந்து ஓடியது,

"யே வெண்ணெ!" என்ற வசவுடன் சேதுவின் பிடறியினைச் சேர்ந்து அறைந்தான் அசோகன். நகராட்சியில் ஒலிக்கும் சங்கொலியாய் ஓவென ஓலமிட்டு அழுதான் சேது.

"இந்த வெங்கணத்தி எப்பவுமே ஜேப்பில கல்லப் பெறக்கி வச்சிட்டே திரியிறான்மா. கோழிய எறியறது, நாய வெரட்றது. ஒரு நாளைக்கி அந்த கெழக்குவீட்டு நாயி, ஒங் காலக் கவ்வப் போதுடீ! அப்பத் தெரியும்" சோறு சாப்பிடும் போது அசோகன் அம்மாவிடம் ஒப்பித்தான்.

"ம், நாயி கடிக்க வந்தா நாந்தா வே மா ஓடிப் போய்ருவேன்ல! ஏம்மா?" ஒருகாலை நீட்டி மறுகாலை குத்திட்டு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த தேவியின் தொடையில் தட்டிச் சொன்னான் சேது. அவன் கையிலிருந்த சோற்றுப் பருக்கையில் சில தேவியின் சேலையில் உதிர்ந்தன.

சிதறிய பருக்கைகளை எடுத்து வாயிலிட்டுக் கொண்ட தேவி, "சாப்புடும் போது சோத்துப் பருக்க சிந்தாமச் சாப்புடணும். அன்னத்த தரையில சிந்த ஆகாது." என்றாள்.

"அசோவன அமட்டி வையிம்மா. எதுக்கெடுத்தாலும் சுளீர்ச்சுளீர்னு அடிக்கிறியா" அங்காயி சேது அடிவாங்கியதைப் போட்டுக் கொடுத்தாள்.

"ஆம்மா, அப்பிடீ வலிச்சுச்சும்மா" பிடறியைத் தடவிக் கொண்டான் சேது.

"ம்? பூனக்குட்டி செத்துப் போயிருந்தா? நிய்யா குடுப்ப. பாவம்ல" வேகமாய்ப் பேசினான் அசோகன். சேது கல்லெறிந்த ஆத்திரம் இன்னும் அடங்கவில்லை.

"அதுக்காக பொடனிலயா அடிப்பாக? படாத எடத்துல பட்டுச்சுன்னா அம்மான்னாலும் வருமா ஆத்தான்னாலும் வருமா! யாரயும் அடிக்கறப்ப மெய்யடி பொய்யடி பாத்துச் செய்யணும். அப்பிடி என்னா மானங்கெட்ட கோவம்? ந்நொப்பனுக்கு வாரிசுப் பட்டத்துக்கு வாரியாக்கும்? சரியில்ல மகனே! சொட்ட எலும்ப ஒடிச்சுப் போடுவே"

"செரிம்மா நா போய்ட்டாறே" சாப்பாட்டுத் தூக்கும் சிறுதுண்டும் எடுத்துக்கொண்டு காய்ந்த தாவணியை உடுத்திக் கொண்டு வேலைக்குக் கிளம்பிய அங்காயி, "ஓம் மயே பூனக்குட்டிக்கி வடிச்ச கஞ்சிய ஊத்தறேன்னு வாசல நாற வெச்சிருக்கியாம் பாருமே" வாசலில் சிந்திக்கிடந்த வடிகஞ்சியை வெறித்தபடி நகர்ந்தாள்.

"லூசாடா நிய்யி? வடிகஞ்சியக் குடிக்க அதென்னா ஆடா மாடா இல்ல கன்னுக்குட்டியா?' தேவி தலையில் அடித்துக் கொண்டாள்.

"சோறு திங்குமா?" வெளியில் எட்டிப்பார்த்தான் அசோகன். சிரட்டையில் ஊற்றிய வடிகஞ்சி ஆடை படிந்து கெட்டியாகக் கிடந்தது. குட்டிப்பூனை வாதாம் மரத்தடியில் நான்கு கால்களையும் கிடத்தி கழுத்தை உயர்த்தி புலிக்குட்டிபோல காதுகளைப் பக்கவாட்டில் திருப்பிக் கம்பீரமாய் அமர்ந்திருந்தது.

"குட்டியெல்லா பாலத்தே குடிக்கும், பெருசுன்னா மீனு, கோழி, கருவாடுன்னு, சோத்தக் கூடத் திங்கிம். வெருவாய்க்களங் கெட்டதனமா எதையும் செஞ்சுக்கிருக்காத. ஒருநாளைக்கி பாவம்னு ஊத்துனா அதே சோகுக்கு பூனைக தெனமும் வந்து நிக்கிம். எந்திரி, டயமாச்சில்ல கௌம்பணும்" சாப்பாட்டுக் கடையை ஒதுக்கி வைத்தாள்.

வேணுகோபால் எஞ்சினியர் அசோகனை வரச்சொல்லியிருந்தார். வேலையைப் பார்த்துச் சம்பளம் தருவார். இங்கிலீஷ் ஏறவில்லை என நாலாம் வகுப்போடு படிப்பை நிறுத்தியிருந்தான். வீட்டில் விட்டால் கெட்டு முட்டச்சாம்பல் ஆகிடுவான்.

சேதுவிடம் தூக்குச் செம்பும் பத்து ரூபாயும் கொடுத்து காப்பி வாங்கிவரச் சொன்னாள். காலையில் வேலைக்குக் கிளம்பும்போது ஒரு மொடக்கு காப்பித்தண்ணி சுரீரென தேவிக்குத் தொண்டையில் இறங்கவேண்டும்.

காப்பி வந்ததும் தனக்கும் சின்னவனுக்குமாய்ப் பகிர்ந்து கொண்டபோது அசோகன் ஒரு டம்ளரை நீட்டினான்.

"ஒனக்குதே காப்பி புடிக்காதே"

"குட்டிப் பூனைக்கி"

"ஆத்தாடி, நானே பார்சலுன்னா கொள்ளக்கா சாகும்னு கௌாஸ் காப்பி வாங்கி குடிச்சுக்கிருக்கே. இதுல தருமம் பண்ண நமக்கு அக்குசு இல்ல மகனே" சேதுவுக்கு ஒரு டம்ளரில் தந்துவிட்டு மடமடவென வாயில் ஊற்றிக் கொண்டாள் தேவி.

"பாவமா இருக்கும்மா செத்துப்போகும்மா"

"படச்சவனுக்குத் தெரியும் பாவம் புண்ணியமெல்லா. நானுந்தே நாலப் பெத்திருக்கே. எனக்கு ஆரு பாவம் பாக்குறா, மரம் வச்சவெ தண்ணி ஊத்துவாண்டா. வெசனப்பட காலமிருக்கு. இப்பக் கௌம்பு"

பள்ளிக்கூடம் போகும்போது கதவைச் சாத்திவிடவும் சத்துணவு வாங்கி வீணாக்காமல் உண்ணவும் சேதுவுக்கு:ச சொல்லிவிட்டு வாங்கித்தின்ன கையில் காசும் தந்துவிட்டுக் கிளம்பினாள் தேவி.

"அட்ஜேய், இங்கோரு குட்டிப் பூனைய எதுனாச்சும் பண்ணுன . . இறுக்கிப் பொடுவேன்" சேதுவை எச்சரித்துவிட்டு அம்மாவோடு இணைந்து கொண்டான் அசோகன்.

எண்ணெய் தேய்த்து, கண்ணாடிப் பார்த்துத் தலைசீவிக் கொண்ட சேது, தோள்பையோடு வெளியில் வந்தான். மரத்தடியில் கம்பீரம் மாறாமல் குட்டிப்பூனை சேதுவின் கண்பார்த்தது. அருகில் வந்த சேது சிரட்டையில் இருந்த வடிகஞ்சியைச் சாக்கடையில் கொட்டினான். டம்ளரில் இருந்த காப்பியை சிரட்டையில் ஊற்றினான்.

வெள்ளை வெய்யில் நிறம் மாறிப் பூத்தது.

ஜூலை –15 பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த நாள்

"தியாகச் சீலர்"

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரால் மணிமண்டபம் மாத்திரம் அல்ல, அவருடைய உயிர் பிரிந்தவுடன் முதலில் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தி என் கண்ணீரை அவருடைய காலடிகளுக்குக் காணிக்கையாக்கி, அவருடைய உடல் அடக்கம் செய்ய முயற்சி எடுத்தபோது கொட்டுகின்ற மழையிலே நாங்கள் கிண்டி ராஜ்பவனத்தில் நின்று கொண்டு புதர்களையெல்லாம் அழிக்கச் செய்து மறுநாள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் உடல் அடக்கத்தை அங்கே நடத்தி வைத்தோம்.

அந்த இடத்தில் அவர்களின் நினைவாக மண்டபம் எழுப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பண்பாடு அரசியலுக்கு அப்பாற்பட்டு அவர் போற்றி வந்த அரசியல் நாகரிகம், நட்புணர்வு, பழகுகின்ற எளிய தன்மை, இவைகளை எல்லாம் யாரும் மறக்க முடியாது. அவரோடு பழகியவர்களுக்குத்தான் அது நன்றாகத் தெரியும். தொலைவிலே இருந்து பார்ப்பவர்களுக்கு அது தெரியாது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் உறுதியானவர், திடமானவர், தியாக சீலர், பல ஆண்டுக்காலம் சிறைச்சாலையிலேயே தன்னுடைய வாழ்க்கையைக் கழித்தவர். இந்திய நாட்டின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர். முதலமைச்சராக ஒரு காலத்தில் ஆவேன் என்று எதிர்பார்த்து இந்தப் பணிகளிலே அவர் ஈடுபட்டவர் அல்ல. சகிப்புத் தன்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்.

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள், 27.06.1999 அன்று கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் மணிமண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து..

மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.''

– என்ற வள்ளுவத்தின் வாக்கினை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உழைப்பவர்களின் வாழ்க்கை:க உயர்வடைய வேண்டும் என்ற எண்ணத்தை கருத்தில்கொண்டு, உழைப்பவர்களுக்காக அதாவது கைத்தொழில் செய்பவர்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு எண்ணற்ற முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு விலையில்லா மின்விசைச் சக்கர இயந்திரங்கள், மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன

குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்பாண்டத் தொழிலாளர்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், கிராமங்களில் வசிக்கும் கைவினைஞர்களின் மனித ஆற்றலைப் பயன்படுத்தி அவர்களின் பாரம்பரியத் திறமைகளை வெளிக்கொணர்ந்து, கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப்பெருட்களைக் கொண்டு இலாபகரமான வேலைவாய்ப்பினை உருவாக்கி அவர்தம் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதே கிராமத் தொழில்களின் முக்கிய நோக்கமாகும்.

இதன்மூலம் ஊரகப் பகுதியில் வாழும் கைவினைஞர்களின் சுயசார்பு நம்பிக்கையினை மேம்படுத்தி அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன் மனதிடத்தினை வளர்க்கவும் கிராமத் தொழில்கள் பெரிதும் உதவுகின்றன.

அந்தவகையில் மண்பாண்டத் தொழில் தமிழகத்தின் பண்டைகாலத் தொழில்களில் ஒன்றாகும். இத்தொழில், கிராமப்புறங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம், பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு உதவுகிறது. மழைக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் இன்னல்களைப் போக்கிட மண்பாண்டத் தொழிலாளர் குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,000 மழைக்கால பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மழைக்கால பராமாரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 358 குடும்பங்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் ரூ.17.90 இலட்சம் மதிப்பீட்டில் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் 19 மண்பாண்ட தொழிலாளர்களுக்கு ரூ.21,420 மதிப்பிலான விலையில்லா மின்விசைச் சக்கர இயந்திரங்கள் ரூ.4.07 இலட்சம் மதிப்பீட்டில் 12.02.2024 அன்று வழங்கப்பட்டுள்ளன. எனவே இத்தகைய நலத்திட்ட உதவிகளைப் பெறும் மண்பாண்டத் தொழிலாளர்கள் இதனை உரியமுறையில் பயன்படுத்தி அவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொண்ட மண்பாண்டத் தொழிலாளர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த புதுக்கோட்டை நகராட்சி, கொசலாக்குடி பகுதியைச் சேர்ந்த பயனாளி திருமதி வேலம்மாள் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

திருமதி.வேலம்மாள்

எனது பெயர் வேலம்மாள். நாங்கள் பரம்பரைப் பரம்பரையாக மண்பாண்டத் தொழில்களே செய்து வருகிறோம். தற்பொழுது உள்ள இந்த நவீன க்காலங்களில் இதுபோன்ற தொழில்கள் நலிவடைந்து வருகிறது. இந்தப் பாரம்பரியமிக்கத் தொழில்களை மீட்டெடுக்கும் வகையில், எங்களைப் போன்ற நலிவடைந்த தொழிலாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு பேருதவிகளைச் செய்து ஊக்கமளித்து வருகிறார்கள்.

மழைக்காலங்களில் எங்களது தொழில் சற்றுச் சிரமமாக இருக்கும். இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ரூ.5,000 மழைக்கால உதவித் தொகை வழங்கி வருவதன் மூலம் எங்களது வாழ்க்கைக்கு பேருதவியாக உள்ளார்கள். வயதான எங்களால் மரச் சக்கரங்களைக் கொண்டு மண்பாண்டங்கள் செய்வது மிகக் கடினமாக இருந்தது. மேலும் மர சக்கரங்களை கொண்டு குறைந்த அளவு மண்பாண்டங்கள் செய்வதால் போதிய வருமானம் ஈட்ட முடியாத சூழ்நிலையினால் எங்களது குடும்பம் மிகவும் வறுமை நிலையில் வாழ்ந்து வந்தோம். இத்தகைய காரணங்களால் எங்களது பாரம்பரியத் தொழிலைக் கைவிட்டு மாற்றுத் தொழில்களை செய்து வந்தோம்.

பாரம்பரியத் தொழில்களை மீட்டெடுக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குப்பல்வேறுநலத்திட்டங்களை செய்து வருகிறார்கள். எங்களுக்கு விலையில்லா மின்விசைச் சக்கர இயந்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் எவ்வித சிரமங்களின்றி அதிக அளவில் மண்பாண்டங்கள் செய்ய முடிகின்றன. அதனால் போதுமான வருமானமும் கிடைக்கிறது. எங்கள் பிள்ளைகளும் இத்தொழிலை செய்வதற்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நல் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், எங்களைப் போன்றவர்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த புதுக்கோட்டை நகராட்சி, கொசலாக்குடி பகுதியைச் சேர்ந்த பயனாளி திரு.தங்கவேல் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

எனது பெயர் தங்கவேல். நான் கொசலாக்குடியில் மண்பாண்டத் தொழில் செய்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற கைவினைக் கலைஞர்களுக்கு எண்ணற்றநலத்திட்டஉதவிகள் செய்து வருகிறார்கள். நாங்கள் மரச்சக்கரத்தைக் கொண்டு கைகளினாலே மண்பாண்டங்கள் செய்து வந்தோம். இதனைத் தெரிந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்கள் நாங்கள் சிரமப்படாமல் தொழில்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக மின்விசையுடன் கூடிய சக்கர இயந்திரங்களை வழங்கி உள்ளார்கள். இது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

திரு.தங்கவேல்

நாங்கள் கைகளினாலே மண்பாண்டங்கள் செய்து வந்த காலத்தில் குறைவான அளவே மண்பாண்டங்கள் செய்து வந்தோம். ஆனால் இனிவரும் காலங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களால் வழங்கப்பட்ட மின்விசையுடன் கூடிய சக்கர இயந்திரங்களைக் கொண்டு அதிக அளவிலான மண்பாண்டங்கள் செய்ய முடியும். இதன்மூலம் எங்களது வாழ்வாதாரம் உயர்வதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது.

மண்பாண்டத் தொழில் செய்யும் எங்களைப் போன்றவர்களின் வாழ்க்கையில் துயர் துடைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை மாவட்டம்.

அந்த வகையில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர், இல்லம் தேடிக் கல்வித் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், நான் முதல்வன், இன்னுயிர்க் காப்போம் நம்மைக் காக்கும் 48, புதுமைப்பெண், முதலமைச்சரின் காலை உணவு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கள ஆய்வில் முதலமைச்சர், மக்களுடன் முதல்வர் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்கள் மக்களுக்காகத் தீட்டப்பட்டு அவை அனைத்தும் கடைக்கோடியில் வாழக்கூடிய மனிதரையும் சென்றடைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இந்தியாவிலேயே தமிழ்நாட்டினை முன்னணி மாநிலமாகத் தலைநிமிரச் செய்திருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற புதுமைத் திட்டம் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை தந்துள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவற்றை திறம்பட செயல்படுத்தி முத்திரைப் பதிக்கும் வகையில் சாதனை படைத்து வருகிறது.

அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் மக்களைச் சென்றடையும் வகையிலும் நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடும் வகையிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் முழு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறார்கள்.

அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 23.11.2023 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக இந்த திட்டம் 31.01.2024 புதன்கிழமை அன்று முதல் நடைமுறைக்கு வந்தது.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிட்ட வட்டத்தில் ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும். மேலும் முகாம் நடைபெறும் வட்டம் குறித்த தகவல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் முன்கூட்டியே பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் படி, மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட அளவிலான இதர உயர் அலுவலர்கள் காலை 9 மணி முதல் மறுநாள் காலை 9 மணி வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்தில் தங்கி பல்வேறு அரசு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சேவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்துக் கள ஆய்வு மேற்கொள்வார். கள ஆய்வின் போது பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேம்பட்ட சேவைகள் வழங்குதல், திட்டங்களை விரைவுப்படுத்துதல் தொடர்பாக உரிய தீர்வு காண்பார். மேலும் அன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து மனுக்களைப் பெற்று அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

அதனடிப்படையில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் பெரம்பலூர்ப் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், பெரம்பலூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களும், வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட உடும்பியம் வருவாய் கிராமத்தில் 31.01.2024 அன்று காலை 9 மணி முதல் 01.02.2024 அன்று காலை 9 மணி வரை தங்கி, அரசுத் திட்டங்களின் செயல்பாடு குறித்து கள ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

24 மணி நேரம் நடைபெற்ற "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" கள ஆய்வு நிகழ்ச்சியில் வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட 39 வருவாய்க் கிராமங்களில் இருந்தும் 1,184 மனுக்கள் பெறப்பட்டதன. பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணும் வகையில் 75 பயனாளிகளுக்குத் திருமண உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.16.87 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், 19 பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், மலையாளப்பட்டி வருவாய்க் கிராமத்தில் 24 மலைக்குறவர்களுக்குப் பழங்குடியினர் நலச் சான்றிதழை சார் ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த பட்டா மாற்றத்திற்கான ஆணையினைப் பெற்ற பயனாளி திரு. திருமூர்த்தி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

எனது பெயர் திருமூர்த்தி. நான் தங்கியிருக்கும் எனது வீட்டிற்கு எனது பெயரில் பட்டா மாற்ற வேண்டி, கடந்த ஒரு வருடமாக நான் தொடர்ந்து

திரு. திருமூர்த்தி

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தேன். அதனால் எனக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை. "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்களது கிராமத்திற்கு வந்தபோது, எனது வீட்டிற்கு பட்டா வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் 31.01.2024 அன்று மனு கொடுத்து இருந்தேன். அதனை விசாரித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 01.02.2024 அன்று 24 மணி நேரத்திற்குள் உடனடியாக எனக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவினை வழங்கினார்கள்.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 24 மணி நேரம் தங்கி மக்களின் குறைகளை:க கேட்டு அறிந்து மக்களிடம் தரப்பட்ட கோரிக்கை மனுக்களை விசாரித்து அதற்குண்டான நலத்திட்டங்களையும் வழங்கி உள்ளார்கள். இது எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. இதே நிலைமை தொடர்ந்தால் மக்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பொதுமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலித்து எவ்வித தாமதமும் இன்றி அவற்றை நிறைவேற்றிட வழிவகை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற பயனாளி மாற்றுத்திறனாளி திருமதி புவனேஷ்வரி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

நான் உடும்பியம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் நான் பயன்பெற்று வருவதால் எனக்கு மாதந்தோறும் அனைத்து மருந்துகளும் சரியான முறையில் கிடைக்கிறதா என கலெக்டர் அவர்களே என் வீடு தேடி வந்து விசாரித்தார்கள். என்னையெல்லாம் யார் வந்து நலம் விசாரிப்பார்கள் என இருந்தேன். என்னைத் தேடி கலெக்டர் அவர்களே வந்தது எனக்கு மிகப்பெரிய ஆறுதலாக உள்ளது. என்னிடம் ஏதாவது கோரிக்கை உள்ளதா என கலெக்டர் அவர்கள் கேட்டார். இவரிடம் எனது கோரிக்கையைத் தெரிவித்தால் நிச்சயம் நிறைவேறும் என நம்பிக்கையும் பிறந்தது.

நான் வாடகை வீட்டில் இருக்கிறேன். வேலைக்கும் எங்கும் போகவில்லை. மாதாந்திர உதவித்தொகை அன்றி வேறு வருமானம் ஏதும் இல்லை. எனவே எனக்குத் தங்குவதற்கு ஒரு வீடு வழங்கிட வேண்டும் என கலெக்டர் அவர்களிடம் கேட்டேன். என் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கலெக்டர் அவர்கள் விரைவில் அரசின் திட்டங்கள் மூலம் சொந்த வீடு கட்டி:த தருவதாக என்னிடம் கூறினார்.

திருமதி புவனேஷ்வரி

கலெக்டர் அவர்கள் கூறிய வார்த்தை எனக்கு மிகுந்த நம்பிக்கை தந்துள்ளது. கண்டிப்பாக எனக்குச் சொந்த வீடு கிடைக்கும் என 100 சதவிகித நம்பிக்கை உள்ளது. அரசின் சேவைகளை எளிதாகவும் விரைவாகவும் பெற்றிட ஏதுவாக இந்த முகாமினை ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு :

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

பெரம்பலூர் மாவட்டம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
(TNPSC) குரூப் – I, II, IV
9ஆம் வகுப்பு தமிழ், அறிவியல் மற்றும் சமூக அறிவியல்
வினாவிடைத்தாள் 25.11.2023

1. மின்னாள் என்ற சொல்லின் பொருள்

அ. ஒளி தருபவள் ஆ. மின்னலைப் போன்றவள்

இ. தவிர்க்க இயலாதவள் ஈ. ஒளிர மாட்டாள்

2. காரியாசானல 'மாக் காரியாசான்' என்று இவரை சிறப்பிப்பது எது?

அ. பாயிரச் செய்யுள் ஆ. பத்துப்பாட்டு

இ. எட்டுத்தொகை ஈ. குறுந்தொகை

3. யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட இலக்கண இலக்கிய நூல்களைப் படைத்தவர்

அ. காரியாசான் ஆ. மாங்குடி மருதனார்

இ. புலவர் குழந்தை ஈ. தொல்காப்பியனார்

4. பொருத்துக

மைவனம்	–	1. சந்தனம்
முருகியம்	–	2. மலைநெல்
பூஞ்சினை	–	3. குறிஞ்சிப்பறை
சிறை	–	4. பூக்களை உடைய கிளை
	–	5. இறகு

அ. 2, 3, 4, 5 ஆ. 1, 3, 4, 2

இ. 2, 3, 1, 5 ஈ. 3, 4, 1, 2

5. நாச்சியார் திருமொழி மொத்தம் எத்தனை பாடல்களைக் கொண்டது?

அ. 40 ஆ. 80

இ. 240 ஈ. 143

6. 'காய்மாண்ட தெங்கின், பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே' – பாடல் இடம்பெற்ற நூல் எது?

அ. சிலப்பதிகாரம் ஆ. சீவகசிந்தாமணி

இ. மணிமேகலை ஈ. குண்டலகேசி

7. 'இலகு கவிதை' என்று அழைக்கப்படும் கவிதை எது?

அ. வசன கவிதை ஆ. புதுக்கவிதை

இ. மரபுக்கவிதை ஈ. யாப்புக்கவிதை

8. பின்வருவனவற்றுள் லாவோட்சு பற்றிய தவறான கூற்று எது?

அ. லாவோட்சு சீனாவில் கிமு இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்தவர்

ஆ. இவர் தாவோவியம் எனும் சிந்தனைப் பிரிவை உருவாக்கினார்

இ. இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற சிந்தனையை இவர் முன்வைத்தார்

ஈ. இவர் கன்பியூசியஸ் சமகாலத்தவர்

9. யசோதர காவியம் எத்தனை சருக்கங்களைக் கொண்டது?

அ. 3 | ஆ. 4

இ. 5 | ஈ. 6

10. கல்யாண்ஜி – பொருந்தாதது எது?

அ. ஒளியிலே தெரிவது | ஆ. உயரப் பறத்தல்

இ. கலைக்க முடியாத ஒப்பனைகள் | ஈ. சில இறகுகள் சில பறவைகள்

11. பொளிக்கும் என்னும் சொல்லின் பொருள்

அ. உரிக்கும் | ஆ. செழிக்கும்

இ. தவிக்கும் | ஈ. நடக்கும்

12. அகில உலகத் தமிழ் ஆய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமையவும் காரணமாக இருந்தவர்

அ. தனிநாயகம் அடிகள் | ஆ. மு. வரதராசனார்

இ. வீ.மு. சாம்பசிவன் | ஈ. அறிஞர் அண்ணா

13. "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" – என்று திருக்குறளைப் பற்றிக் கூறியவர்

அ. அரிஸ்டாட்டில் | ஆ. பிளேட்டோ

இ. மார்க்ஸ் அரேலியஸ் | ஈ. ஆர்பர்ட் சுவைட்சர்

14. இந்தியத் தேசிய ராணுவம் தமிழர் பங்கு என்ற நூலுக்காக தமிழக அரசின் பரிசு பெற்றவர்

அ. பேராசிரியர் மா.சு.அண்ணாமலை | ஆ. பக்தவச்சல பாரதி

இ. மு. மேத்தா | ஈ. கி.வா. ஜெகந்நாதன்

15. வெண்சீர்கள் என்று அழைக்கப்படுவது

அ. காய்ச்சீர் | ஆ. கனிச்சீர்

இ. இயற்சீர் | ஈ. ஆசிரிய உரிச்சீர்

16. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று – இப்பாடலில் பயின்று வரும் தொடை

அ. மோனைத்தொடை | ஆ. எதுகைத்தொடை

இ. அளபெடைத்தொடை | ஈ. முரண்தொடை

17. "பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே" – இப்பாடலில் பயின்று வரும் அணி

அ. சொற் பின்வரு நிலையணி

ஆ. சொற்பொருட் பின்வரு நிலையணி

இ. பொருட் பின்வரு நிலையணி

ஈ. வஞ்சகப் புகழ்ச்சி அணி

18. ‘ஹைக்கூ’, ‘சென்ரியு’, ‘வலிமரைக்கூ’ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளவர்

அ. ஈரோடு தமிழன்பன் ஆ. பாரதியார்

இ. கோமல் ஸ்வாமிநாதன் ஈ. பாரதிதாசன்

19. தமிழ்விடு தூது எத்தனை கண்ணிகளைக் கொண்டுள்ளது?

அ. 163 ஆ. 268

இ. 263 ஈ. 168

20. சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம் எது?

அ. சத்துவம் ஆ. இராசசம்

இ. தாமசம் ஈ. செறிவு

21. சிந்தாமணி இலக்கணக் குறிப்பு

அ. உருவகம் ஆ. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

இ. நான்காம் வேற்றுமைத் தொகை ஈ. உவமேயம்

22. பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் இவர் விளங்கினார்

அ. திரு. வி.க ஆ. கவிஞர் தமிழ்ஒளி

இ. கவிமணி ஈ. கவிஞர் பூங்குன்றன்

23. குமந்தனை – குமை+த்(ந்)+த்+அன்+ஐ என்ற பகுபத உறுப்பிலக்கணத்தில் இறந்தகால இடைநிலை எது?

அ. குமை ஆ. த்(ந்)

இ. த் ஈ. அன்

24. “மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்ட களைகளையுங் கடைசியர்கள்
தண்டளரஞ் சொரிபணிலம் இடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையும் குழல்அலைய மடநடையின் வரம்பணைவார்”
– பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது

அ. கம்பு ஆ. சோளம்

இ. நெல் ஈ. கரும்பு

25. கீழ்க்கண்டவற்றுள் உரிச்சொல் தொடர் எது எனக் காண்க.

அ. கருங்குவளை ஆ. விரிமலர்

இ. செந்நெல் ஈ. தடவரை

26. புறநானூறு நூலை முதன் முதலில் புதிப்பித்து 1894இல் வெளியிட்டவர்

அ. ஜி.யு. போப் ஆ. மீனாட்சிசுந்தரனார்

இ. திரு.வி.க. ஈ. உ.வே.சா

27. விலோதம் என்பது

அ. சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது

ஆ. கொம்புகளில் கட்டும் கொடி

இ. துணியாலான கொடி

ஈ. அனைத்தும் சரி

அரசுப் பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாடு

28. "அறிவை மறந்த உணர்ச்சி என்பது திரியை மறந்த தீயாகும் எரியும் தீயை இழந்த திரிதான் உணர்ச்சி தொலைந்த அறிவாகும்" - என்று பாடியவர்

அ. கவிஞர் தமிழ்ஒளி

ஆ. கவிஞர் கல்யாண்ஜி

இ. கவிஞர் வைரமுத்து

ஈ. கவிக்கோ அப்துல் ரகுமான்

29. 1. தேசியத் திறனாய்வுத் தேர்வு (National Talent Search Exam) பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது

2. தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித்தொகை தேர்வு (National Means Cum Merit Scholar ship) எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது

3. ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST – Tamilnadu Rural Students Talent Search Exam) பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது

அ. 1, 2 சரி ஆ. 1, 3 சரி

இ. 2, 3 சரி ஈ. அனைத்துமே சரி

30. முல்லை மற்றும் மருத நிலங்களில் கால்கொண்டு தமிழர்தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகியுள்ளது எது?

அ. ஆடு வளர்த்தல் ஆ. மாடு வளர்த்தல்

இ. கோழி வளர்த்தல் ஈ. ஏறுதழுவுதல்

31. Which country hosted the 7th edition of Joint Military 'Exercise KAZIND–2023'?

[A] India [B] Kazakhstan

[C] Sri Lanka [D] Iran

கூட்டு இராணுவத்தின் 7வது பதிப்பான 'எக்சர்சைஸ் காஜிண்ட் – 2023' எந்த நாடு நடத்தியது?

[A] இந்தியா [B] கஜகஸ்தான்

[C] இலங்கை [D] ஈரான்

32. Which cricketer scored the fastest ODI World Cup hundred in 40 balls?

[A] Virat Kohli [B] Rohit Sharma

[C] Glenn Maxwell [D] David Warner

40 பந்துகளில் ஒருநாள் உலகக் கோப்பையில் அதிவேக சதம் அடித்த கிரிக்கெட் வீரர் யார்?

[A] விராட் கோலி [B] ரோஹித் சர்மா

[C] க்ளென் மேக்ஸ்வெல் [D] டேவிட் வார்னர்

33. What is the name of the National Hackathon focused on the use of 5G technology for police applications?

[A] Vimarsh 2023 [B] Vyukth 2023

[C] Vikalp 2023 [D] Vikas 2023

போலீஸ் பயன்பாடுகளுக்கு 5G தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தும் தேசிய ஹேக்கத்தானின் பெயர் என்ன?

[A] விமர்ஷ் 2023 [B] வியுக்த் 2023

[C] விகல்ப் 2023 [D] விகாஸ் 2023

34. What is the rank of India in the 'Global Hunger Index (GHI) 2023' ?

[A] 101 [B] 111

[C] 121 [D] 131

உலகளாவிய பசிக் குறியீடு (GHI) 2023' இல் இந்தியாவின் தரவரிசை என்ன?

[A] 101 [B] 111

[C] 121 [D] 131

35. What is the theme of 'World Polio Day 2023'?

[A] A healthier future for mothers and children [B] Eradicate poliomyelitis

[C] Polio Free Earth [D] Polio Free Villages

'உலக போலியோ தினம் 2023' இன் தீம் என்ன?

[A] தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எதிர்காலம்

[B] போலியோமைலிடிஸ் நோயை ஒழிக்கவும்

[C] போலியோ இல்லாத பூமி

[D] போலியோ இல்லாத கிராமங்கள்

36. Which city hosted the G20 Parliamentary Speakers' Summit (P20) in 2023?

[A] New Delhi [B] Dhaka

[C] Jakarta [D] Colombo

2023 இல் G20 பாராளுமன்றப் பேச்சாளர்கள் உச்சி மாநாட்டை (P20) நடத்திய நகரம் எது?

[A] புது டெல்லி [B] டாக்கா

[C] ஜகார்த்தா [D] கொழும்பு

37. 'APAAR' Account Registry, which was seen in the news, is associated with which field?

[A] Capital Market [B] Automobile

[C] Cryptocurrency [D] Academics

செய்திகளில் காணப்பட்ட 'APAAR' கணக்குப் பதிவு, எந்தத் துறையுடன் தொடர்புடையது?

[A] மூலதனச் சந்தை [B] ஆட்டோமொபைல்

[C] கிரிப்டோகரன்சி [D] கல்வியாளர்கள்

38. Karthikeyan Murali, who was seen in the news, is located in which sports?

[A] Chess [B] Cricket

[C] Squash [D] Badminton

செய்திகளில் காணப்பட்ட கார்த்திகேயன் முரளி எந்த விளையாட்டில் இடம் பெற்றுள்ளார்?

[A] சதுரங்கம் [B] கிரிக்கெட்

[C] ஸ்குவாஷ் [D] பூப்பந்து

39. The cashew of which state/UT recently got its Geographical Indication (GI) tag?

[A] Kerala [B] Goa

[C] Andhra Pradesh [D] Gujarat

சமீபத்தில் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் முந்திரி அதன் புவிசார் குறியீடு (ஜிஐ) குறியைப் பெற்றது?

[A] கேரளா [B] கோவா
[C] ஆந்திரப் பிரதேசம் [D] குஜராத்

40. Which institution releases the 'Sugar Price Index'?

[A] NABARD [B] FAO
[C] UNEP [D] FSSAI

எந்த நிறுவனம் 'சர்க்கரை விலைக் குறியீட்டை' வெளியிடுகிறது?

[A] NABARD [B] FAO
[C] UNEP [D] FSSAI

APTITUDE

41. The probability of drawing an ace card from a deck of cards is:

[A] 1/52 [B] 1/26 [C] 4/13 [D] 1/13

ஒரு சீட்டுக்கட்டில் இருந்து ஏஸ் சீட்டு அட்டையை எடுப்பதற்கான நிகழ்தகவு:

[A] 1/52 [B] 1/26 [C] 4/13 [D] 1/13

42. The median of the data: 155, 160, 145, 149, 150, 147, 152, 144, 148 is

[A] 149 [B] 150 [C] 147 [D] 144

கொடுக்கப்பட்ட தரவுகளின் இடைநிலை என்ன: 155,160, 145, 149, 150, 147, 152, 144, 148

[A] 149 [B] 150 [C] 147 [D] 144

43. If the radius of a cylinder is 4cm and height is 10cm, then the total surface area of a cylinder is:

[A] 440 sq.cm. [B] 352 sq.cm. [C] 400 sq.cm. [D] 412 sq.cm.

ஒரு உருளையின் ஆரம் 4cm ஆகவும் உயரம் 10cm ஆகவும் இருந்தால், ஒரு உருளையின் மொத்த பரப்பளவு:

[A] 440 sq.cm. [B] 352 sq.cm. [C] 400 sq.cm. [D] 412 sq.cm.

44. The sides of a triangle are 122 m, 22 m and 120 m respectively. The area of the triangle is:

[A] 1320 sq.m. [B] 1300 sq.m. [C] 1400 sq.m. [D] 1420 sq.m.

முக்கோணத்தின் பக்கங்கள் முறையே 122 மீ, 22 மீ, 120 மீ. எனில் முக்கோணத்தின் பரப்பளவு:

[A] 1320 sq.m. [B] 1300 sq.m. [C] 1400 sq.m. [D] 1420 sq.m.

45. If a, b and c are the lengths of three sides of a triangle, then:

[A] $a+b>c$ [B] $a-b>c$ [C] $a+b=c$ [D] $a-b=c$

a, b, c ஆகியவை முக்கோணத்தின் மூன்று பக்கங்களின் நீளம் என்றால்:

[A] $a+b>c$ [B] $a-b>c$ [C] $a+b=c$ [D] $a-b=c$

46. The longest chord of the circle is:

[A] Radius [B] Arc
[C] Diameter [D] Segment

வட்டத்தின் நீளமான நாண்:

[A] ஆரம் [B] பரிதி
[C] விட்டம் [D] பிரிவு

47. If P and Q are any two points lying on the sides DC and AD respectively of a parallelogram ABCD, then:

[A] ar(APB) > ar(BQC) | [B] ar(APB) < ar(BQC)
[C] ar(APB) = ar(BQC) | [D] None of the above

P மற்றும் Q என்பது ஒரு இணைகரம் ABCDயின் பக்கங்களில் DC, AD ஆகிய இரண்டு புள்ளிகளாக இருந்தால், பின்:

[A] ar(APB) > ar(BQC) | [B] ar(APB) < ar(BQC)
[C] ar(APB) = ar(BQC) | [D] மேலே எதுவும் இல்லை

48. Can we write zero in the form of p/q?

[A] Yes | [B] No
[C] Cannot be explained | [D] None of the above

பூஜ்ஜியத்தை p/q வடிவில் எழுத முடியுமா?

[A] ஆம் | [B] இல்லை
[C] விளக்க முடியாது | [D] மேலே எதுவும் இல்லை

49. The degree of 4 x 3 – 12 x 2 + 3 x + 9 is

[A] 0 | [B] 1
[C] 2 | [D] 3

4x 3 – 12 x 2 + 3x + 9 இன் வரிசை

[A] 0 | [B] 1
[C] 2 | [D] 3

50. 3x + 10 = 0 will have:

[A] Unique solution | [B] Two solutions
[C] Infinitely many solutions | [D] No solutions

3x + 10 = 0 இன் தீர்வு/தீர்வுகள்:

[A] ஒரே தீர்வு | [B] இரண்டு தீர்வுகள்
[C] எண்ணற்ற தீர்வுகள் | [D] தீர்வுகள் இல்லை

விடைகள்

1. – ஈ.	2. – அ.	3. – இ.	4. – அ.	5. – ஈ.	6. – ஆ.	7. – ஆ.
8. – ஆ.	9. – இ.	10. – ஈ.	11. – அ.	12. – அ.	13. – ஈ.	14. – அ.
15. – அ.	16. – ஆ.	17. – ஈ.	18. – அ.	19. – ஆ.	20. – இ.	21. – ஆ.
22. – ஆ.	23. – இ.	24. – இ.	25. – ஈ.	26. – ஈ.	27. – இ.	28. – இ.
29. – அ.	30. – ஈ.	31. – [B]	32. – [C]	33. – [A]	34. – [B]	35. – [A]
36. – [A]	37. – [D]	38. – [A]	39. – [B]	40. – [B]	41. – [D]	42. – [A]
43. – [B]	44. – [A]	45. – [A]	46. – [C]	47. – [C]	48. – [A]	49. – [D]
50. – [A]						

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
2024 ஆம் ஆண்டிற்கான அகழாய்வுப் பணிகளின் தொடக்கமாக
கொந்தகை, வெம்பக்கோட்டை, கீழ்நமண்டி, பொற்பனைக் கோட்டை, திருமலாபுரம்,
சென்னானூர், கொங்கல் நகரம், மருங்கூர் ஆகிய
எட்டு இடங்களில் அகழாய்வுப் பணிகளைத் தொடங்கி வைத்தார் - 18.06.2024

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஜப்பான் நாட்டில் நடைபெற்ற 2024 பாரா தடகள உலக சாம்பியன்ஷிப்
போட்டியில் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற
டி. மாரியப்பன் அவர்களுக்கு ரூ.75 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை
வழங்கி வாழ்த்தினார் – 11.06.2024

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,